# உயிரென வா! உயிர் காத்திருக்கிறேன்!!!

ஸ்ரீகலா SRIKALA

UYIRENA VAA! UYIR KAATHIRUKIREN!!!

# உயிரென வா! உயிர் காத்திருக்கிறேன்!!!

ஸ்ரீகலா SRIKALA

UYIRENA VAA! UYIR KAATHIRUKIREN!!!


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS


Download

Contents


அத்தியாயம் : 1

அத்தியாயம் : 2

அத்தியாயம் : 3

அத்தியாயம் : 4

அத்தியாயம் : 5

அத்தியாயம் : 6

அத்தியாயம் : 7

அத்தியாயம் : 8

அத்தியாயம் : 9

அத்தியாயம் : 10

அத்தியாயம் : 11

அத்தியாயம் : 12

அத்தியாயம் : 13

அத்தியாயம் : 14

அத்தியாயம் : 15

அத்தியாயம் : 16

அத்தியாயம் : 17

அத்தியாயம் : 18

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

## அத்தியாயம் : 1

"கௌசல்யா சுப்ரஜா ராம
பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே
உத்திஷ்ட நர ஸார்தூல
கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்"

பூஜையறையில் ஒலித்த சுப்ரபாதம் அந்த அதிகாலை நிசப்தமான பொழுதில் வீடு முழுவதும் எதிரொலித்தது. வீட்டின் மாடியில் இருந்த உடற்பயிற்சி கூடத்தில் ட்ரெட்மில்லில் ஓடி கொண்டிருந்த விஸ்வஜித்தின் காதுகளில் சுப்ரபாதம் இனிமையாக ஒலித்தது. அத்தோடு சாம்பிராணி புகை காற்றோடு கலந்து அவனது நாசியில் நுழைந்து அவனைப் பரவசப்படுத்தியது.

'அம்மா பூஜை செய்றாங்க.' என்று நினைத்தவனின் உதடுகளில் புன்னகை நிரம்பியது. தொடர்ந்து ஒலித்த மணி சத்தம் அதை உறுதி செய்ய... அவனது புன்னகை இன்னமும் விரிந்தது.

ஓடி முடித்தவன் ட்ரெட்மில்லை அணைத்து விட்டு அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து உடலில் வழிந்த வியர்வையை ஒரு கையால் துண்டில் துடைத்தபடி, மறுகையால் பாட்டிலில் இருந்த நீரை வாயில் சரித்தான். சிறிது நேரம் செய்தித்தாளை படித்திருந்தவன் பின்பு எழுந்து தனது அறைக்குச் சென்றான்.

விஸ்வஜித் தமிழகம் முழுவதும் தொடர்சங்கிலி போல் உணவு விடுதி நடத்தி வருபவன். அவனது தந்தை சிறிய அளவில் செய்து வந்த தொழிலை இப்போது அவன் பல மடங்கு விரிவுபடுத்தி இருக்கிறான். அவனது தந்தை அறிவழகன், தாய் விசாலம். ஒரே தங்கை மதுரா, அவள் திருமணமாகி அவளது கணவன் கோகுல் மற்றும் மகள் ரக்ஷிதாவுடன் இங்கே சென்னையிலேயே தனியே வசிக்கிறாள். அறிவழகன் இறந்து ஒரு வருடமாகிறது.

"ம்மா, ம்மா..." என்றழைத்தபடி உணவு மேசையில் வந்தமர்ந்தான் விஸ்வஜித்.

PDF தமிழ் .com

"எதுக்குடா என்னைய ஏலம் போடுற? வயசான என்னை ஏலம் போட்டு என்ன பிரயோஜனம்? வயசு பொண்ணை ஏலம் போட்டாவது பிரயோஜனம் இருக்கு." என்று கண்சிமிட்டியபடி சமையலறையில் இருந்து வெளிப்பட்டார் விசாலம்.

"வயசு பொண்ணை விட நீங்க தான்ம்மா இளமையா இருக்கீங்க." என்று மகன் பெற்றவளை புகழ...

"அடேய், பொய் சொன்னாலும் பொருந்த சொல்லணும்டா."

"அட, உண்மையா தான்ம்மா சொல்றேன். நம்ம மது கூடக் கொஞ்சம் வெயிட் போட்டு உங்களுக்கு அக்கா மாதிரி இருக்கிறாள். ஆனா நீங்க... சொல்லவே வேண்டாம். வெரி ஸ்மார்ட், மை டியர் யங் லேடி." அவன் சிறு சிரிப்புடன் அன்னையை அணைத்துக் கொண்டான்.

"வாய் கூசாம பொய் சொன்னது போதும்டா." என்று அவர் மகனை கண்டு சிரித்தார்.

"யாரது என்னைப் பார்த்து குண்டுன்னு சொன்னது?" என்று கோபத்துடன் அங்கு வந்து சேர்ந்தாள் மதுரா.

"வா மது..." விசாலம் மகளைச் சந்தோசத்துடன் வரவேற்க...

"வா மங்கி..." என்று விஸ்வஜித் தங்கையைப் புன்னகையுடன் வரவேற்றவன்,

"நான் தான் சொன்னேன் மங்கி..." என்று பொங்கிய சிரிப்பை கட்டுப்படுத்திக் கொண்டு கூற...

"டேய் அண்ணா, நானா மங்கி? நீ தான் மங்கி, சொங்கி, எல்லாம்..." என்று கோபத்துடன் கத்தியவள் அவன் அருகில் அமர்ந்து தனக்கு ஒரு தட்டை எடுத்து வைத்துக் கொண்டு,

"என்னையவா குண்டுன்னு சொன்ன... உனக்கு என்னைய விடக் குண்டான பொண்ணு தான் பொண்டாட்டியா கிடைப்பா... இது இந்த மதுவோட சாபம்." என்று அண்ணனுக்குச் சாபம் விட்டவள் தட்டில் தோசையை எடுத்து வைத்துக் கொண்டு அதில் தாராளமாகச்

சாம்பாரை விட்டு, தோசையைப் பிய்த்துச் சாம்பாரில் தொய்த்து வாயினுள் தள்ளினாள்.

தங்கையின் வார்த்தைகளில் விஸ்வஜித்தின் முகம் ஒரு மாதிரியாக மாறிவிட்டது. அவனது மனதில் பூசின உடல்வாகுடன் ஒரு பெண்ணின் உருவம் எழுந்து அவனைப் பெரிதும் இம்சித்தது. சகோதரனிடம் இருந்து பதில் வரவில்லை என்றதும் அவனைத் திரும்பி பார்த்த மதுரா அவனது முகபாவனையைக் கண்டு,

"டேய் அண்ணா, நான் கொடுத்த சாபத்தை வாபஸ் வாங்கிக்கிறேன். அதுக்காக நீ மூஞ்சை தூக்கி வச்சுக்காதே." என்று சமாதானமாகக் கூற... அதில் தன்னினைவு கலைந்தவன்,

"ஆமா, நீ சாபம் கொடுத்து அப்படியே அது பலிக்கப் போகுதாக்கும். போடி..." அவன் சிரித்தபடி அவளை வம்பிழுத்தான்.

"மாப்பிள்ளை எங்கே?" விசாலம் மகளிடம் விசாரிக்க...

"கோகுல் வேலை விசயமா பெங்களூர் போயிருக்கார். திரும்பி வர இரண்டு நாளாகும். ரக்ஷி ஸ்கூல் போயிருக்கிறாள்."

"அப்போ இங்கே இருக்கலாமே மது."

"ம்ஹூம், அது முடியாதும்மா... மாமா, அத்தை வயசானவங்க. அவங்களைத் தனியே விட்டுட்டு வர முடியாது. அப்புறம் தரு... அவளை விட்டுட்டு எங்கேயும் நகர முடியாது." தரு என்கிற தாரிணி கோகுலின் சின்னத் தங்கை. கல்லூரியில் படிக்கிறாள்.

மாமனார், மாமியார், நாத்தனார் மீதான மகளது அக்கறையைக் கண்ட விசாலம் மனம் கனக்க தனது மகனை திரும்பி பார்த்தார். மகனுக்கு வயது முப்பத்திரண்டு ஆகிறது. இன்னமும் திருமணத்திற்குச் சம்மதிக்க மாட்டேங்கிறான் என்பதே அவரது கவலை. பெண்களின் புகைப்படத்தைப் பார்க்காமலேயே

PDF தமிழ் .com

பிடிக்கவில்லை என்று கூறும் ஒரே ஆண்மகன் விஸ்வஜித்தாகத் தான் இருப்பான். ஒருவேளை அவன் மனதில் ஏதேனும் பெண் இருக்கிறாளா? என்று நினைத்து அவர் மகனிடம் விசாரித்துக் கூடப் பார்த்து விட்டார். 'அப்படி எதுவும் இல்லை' என்று அவன் ஒரேடியாகச் சாதித்து விட்டான்.

"உன்னை மாதிரி எனக்கும் ஒரு மருமகள் வந்துட்டா நல்லாயிருக்கும். ம்ஹூம், எங்கே?" என்று பெருமூச்சு விட்ட அன்னையை விஸ்வஜித் மறந்தும் நிமிர்ந்து பார்த்தான் இல்லை.

"இதுக்கு மட்டும் வாயை திறக்க மாட்டானே." விசாலம் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

"அம்மா, இந்தச் சாம்பார் புதுவிதமான டேஸ்ட்டா இருக்கே. எப்படிச் செஞ்சீங்க?" விஸ்வஜித் மெல்ல பேச்சை மாற்றி விட்டான். விசாலமும் தனது விசனத்தை மறந்தவராய்,

"எல்லா வகைப் பருப்பு, பயறு வகைகளில் ஒரு கைப்பிடி எடுத்து அவிச்சு, எப்போதும் வைக்கும் சாம்பார் போல் பறங்கி காய், முருங்கை காய் போட்டு வச்சேன். நல்லாயிருக்காடா?" ஆர்வத்துடன் மகனிடம் கேட்டார்.

"பிரமாதம்மா... அதுவும் நீங்க சேர்த்த கொள்ளு வாசம் அப்படியே மணக்குது. நாளைக்கே நம்ம ஹோட்டலில் இது மாதிரி செஞ்சு பார்க்க சொல்லணும்." மகன் அன்னையைப் பாராட்டினான்.

விஸ்வஜித் தனது உணவு விடுதியில் துரித உணவு வகைகளை ஊக்குவிப்பது இல்லை. அதற்குப் பதிலாக நல்ல சத்தான நம்ம ஊர் உணவு வகைகளைத் தயார் செய்து கொடுத்தான். அதுவும் குழந்தைகளுக்கு ஏற்றார் போன்று... அதுவே அவனுக்கு நிறைய வாடிக்கையாளர்களைப் பெற்றுத் தந்தது.

"ரொம்பச் சந்தோசம்டா... இந்தத் துவையலையும் சாப்பிட்டு பாரு." என்றவர் மகனது தட்டில் தான் தயாரித்த

துவையலை வைத்தார். அதை எடுத்து ருசி பார்த்த விஸ்வஜித்தின் முகம் பிரகாசமானது.

"இதென்ன புதுவிதமான டேஸ்ட்..." உணவு விடுதி நடத்துபவனுக்கே துவையலின் ருசி பிடிபடவில்லை.

"இதுவரை காய்கறி தோல்ல தான் துவையல் செஞ்சிக்கிட்டு இருந்தேன். நேத்து மாம்பழம் சாப்பிடும் போது அதோட தோலையும் சேர்த்து துவையல் செஞ்சால் எப்படி இருக்கும்ன்னு யோசிச்சேன். அதோட விளைவு தான் இது..." என்று துவையல் பாத்திரத்தை தூக்கி காட்டினார் விசாலம்.

"ம்மா, சுகரை வச்சுக்கிட்டு மாம்பழம் சாப்பிடுறீங்களா? உங்களை என்ன செய்யலாம்..." மகன் அன்னையைக் கோபத்துடன் முறைக்க...

"ம்மா, நீங்க ஆரோக்கியமா இருந்தால் தானே எங்களுக்கு நல்லது." மதுராவின் விழிகள் கலங்கியது. அவளுக்கு அன்னை மீது அத்தனை பாசம்.

"சும்மா ஒரு துண்டு தான் சாப்பிட்டேன்." விசாலம் தவறு செய்துவிட்டது போல் இறங்கி போன குரலில் கூறினார். அன்னையைக் கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது.

"சரி விடுங்க... இனியாவது கொஞ்சம் ஜாக்கிரதையாக இருங்க." என்றவன்,

"துவையலில் என்னென்ன சேர்த்தீங்க?" ஒருவித ஆர்வத்துடன் கேட்டான்.

"அதுவா விச்சு... எப்பவும் துவையலுக்குத் தேவைப்படும் பொருட்களோடு காய்கறி தோல், மாம்பழ தோல், புளிக்குப் பதிலா கொஞ்சம் புளி திராட்சை, கொஞ்சம் வறுத்த எள்ளு எல்லாம் சேர்த்து கெட்டியா அரைச்சு, அதில் அப்படியே தாளிச்சு கொட்டிரணும். அரைச்சதை கொதிக்க விடக் கூடாது." அவர் செய்முறை பக்குவத்தை ஆர்வத்துடன் கூற... அவன் அக்கறையோடு அதை மனதில் குறித்துக் கொண்டான்.

PDF தமிழ் .com

"சரிம்மா, எனக்கு நேரமாச்சு... நான் கிளம்பறேன்." அன்னையிடம் விடைபெற்றவன் தங்கையிடம்,

"மதியம் இங்கே இருப்ப தானே..." என்று கேட்க...

"இல்லை விச்சு... இப்ப கிளம்பிருவேன்." என்றவள்,

"எதுக்குக் கேட்கிற?" என்று கேட்க...

"உனக்குப் பிடிச்ச பாதாம் அல்வாவை சுட சுட கொண்டு வந்து கொடுக்கத் தான்."

"அதை நேரே எங்க வீட்டுக்கு அனுப்பிருண்ணா. சிம்பிள்." என்று சிரித்தவளின் தலையில் வலிக்காது கொட்டியவன்,

"ரக்ஷி குட்டிக்கும், தருவுக்கும் கொடுத்து சாப்பிடு. மொத்தத்தையும் நீயே கொட்டிக்காதே." என்று தங்கையைக் கேலி செய்ய...

"அதெல்லாம் கொடுப்பேன்." என்று சிறு முறைப்புடன் தலையைத் தடவி கொண்டவள்,

"தரு மட்டும் கொஞ்சம் பெரிய பொண்ணா இருந்திருந்தா உனக்குக் கல்யாணம் பண்ணி வச்சு, எல்லோரும் ஒரே வீட்டில் இருந்திருக்கலாம். ம்ஹூம்..." என்று மதுரா பெருமூச்சு விட...

"மது, இந்தப் பேச்சை இத்தோடு விட்டுரு. ரக்ஷி மாதிரி தான் எனக்குத் தருவும்." என்று தங்கையை அதட்டிய விஸ்வஜித் உடனே கிளம்பி விட்டான். அன்னையும், மகளும் ஒருவருக்கு ஒருவர் பார்த்து கொண்டனர்.

"தருவுக்கு வயசு வித்தியாசம் கூடப் பெருசு இல்லையாம். விச்சு மாதிரி மாப்பிள்ளை கிடைக்கக் கொடுத்து வச்சிருக்கணுமாம். அப்படின்னு சொல்லிக்கிட்டே இருக்கிறாள். மாமா, அத்தைக்கும் லேசா விருப்பம் இருக்கும் போலிருக்கு. ஆனா கோகுலுக்குத் தான் இதில் விருப்பம் இல்லை."

"மாப்பிள்ளைக்கு விச்சு மேல் ஏதும் கோபமா?" விசாலத்திற்குச் சற்றுக் கவலையாக இருந்தது. மாப்பிள்ளை, மச்சினன் உறவுமுறை முக்கியம் இல்லையா!

"ச்சேச்சே... அப்படி எல்லாம் இல்லைம்மா. பனிரெண்டு வயசு வித்தியாசம். அதனால் இந்தப் பேச்சு சரிப்பட்டு வராதுன்னு சொல்லிட்டார்."

"ஓ, இது தானா விசயம்? நான் என்னமோன்னு நினைச்சு பயந்து போயிட்டேன். அவர் சொல்றதும் சரி தானே. அந்தக் காலம் மாதிரி அதிக வயசு வித்தியாசத்தில் இப்போது யாரும் கல்யாணம் பண்றது இல்லையே. விச்சுவுக்குத் தருவும், ரக்‌ஷியும் ஒண்ணு தான்."

"சரிம்மா, இனி இது பத்தி பேசலை." மதுரா அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

சாலை போக்குவரத்தில் காரை நிதானமாகச் செலுத்தி கொண்டிருந்த விஸ்வஜித்தின் காதுகளில் தங்கை பேசிய வார்த்தைகளே திரும்பத் திரும்ப ஒலித்தது.

'தருவை சின்னக் குழந்தை போல் பார்க்கும் நான் ஏன் அவளிடத்தில் சறுக்கி போனேன்? அவளை ஏன் மனதில் நினைத்தேன்? என் நிலை மறந்து அவள் பின்னால் ஏன் அலைந்தேன்?' அவன் மனதிற்குள் புலம்பி தவித்தான்.

அவன் தனது காதல் அத்தியாயத்திற்கு முடிவுரை எழுதி பத்து ஆண்டுகளான போனதும், அதன் காயம் இன்னமும் காயாது அப்படியே ரணமாக அவனுள் இருக்கிறது. நித்தமும் அது கொடுக்கும் வலி தாங்க முடியாதது. அதையும் தாங்கி கொண்டு, வேதனையை விழுங்கி கொண்டு முகத்தில் நிலவும் புன்னகை வாடாது வளைய வர அவனால் மட்டுமே முடியும்.

அவன் மனதில் காதல் கொடுத்த வேதனை, வலி, காயம், ரணம் இதை எல்லாம் தாண்டி அவள் மீது கோபமும் இருக்கிறது.

PDF தமிழ் .com

"போடி போ... நீ இல்லைன்னா நான் ஒண்ணும் செத்து போயிட மாட்டேன்." வாய்விட்டு கூறியவனின் முகத்தில் ஆத்திரம் தீயாய் ஜொலித்தது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 2

மாடிப்படியில் டக், டக் என்று ஒலித்த குதிகால் செருப்பின் சத்தத்தில் வரவேற்பறையில் அமர்ந்திருந்த வேதா திரும்பி பார்த்தார். அவரது மூத்த மகள் துளசி தான் கம்பீரமாக இறங்கி வந்து கொண்டிருந்தாள். புன்னகையைத் தொலைத்த முகத்துடன் எப்போதும் இறுக்கமாய் வளைய வரும் துளசி அவருக்குப் புரியாத புதிர் தான். அவளிடம் அத்தனை எளிதாய் யாரும் நெருங்கிவிட முடியாது. அன்னையான அவர் கூட அவளிடம் சற்று தள்ளி நின்று தான் பேச வேண்டியிருந்தது. மற்ற பெண்களைப் போல் அவள் எதற்கும் அவர் மடி தேடி ஓடி வந்தது இல்லை. தோள் சாய்ந்து ஆறுதல் வேண்டியதும் இல்லை. துக்கமோ, மகிழ்ச்சியோ எதுவாக இருந்தாலும் அது அவளோடு தான். அதனால் அவளது மனவுணர்களை அவ்வளவு எளிதில் யாரும் படித்துவிட முடியாது.

"வந்துட்டியா துளசி... வாம்மா, வந்து சாப்பிட்டுட்டு போ." அவர் அவளை உணவு உண்ண அழைத்தார். அவள் அவருக்குப் பதில் எதுவும் கூறாது அமைதியாக உணவு மேசையை நோக்கி சென்றாள்.

அவள் முன் தட்டு எடுத்து வைத்துத் தோசை பரிமாறத் துவங்கியவரை கை நீட்டி தடுத்தவள் மேசையில் இருந்த ரொட்டி துண்டுகளை எடுத்து, வெண்ணெய் தடவ ஆரம்பித்தாள். அதைக் கண்டு வேதாவின் முகம் கருத்துப் போனது.

"துளசி..." அவர் அழைத்ததும் வெண்ணெய் தடவி கொண்டிருந்த அவளது கைகள் ஒரு நொடி நின்று பின்பு தனது வேலையைச் செய்யத் துவங்கியது. இது தான் அவரது வார்த்தைக்கு அவள் கொடுக்கும் அதிகபட்ச மரியாதை. அதை உணர்ந்தார் போன்று அவர் தனது பேச்சை தொடர்ந்தார்.

"அபி படிச்சு முடிச்சிட்டாள். கம்பெனி நிர்வாகத்தில் அவளும் பங்கு எடுக்கும் வயசு வந்தாச்சு. எப்போ அவளிடம்

PDF தமிழ் .com

கம்பெனி பொறுப்பைக் கொடுக்கப் போகிற?" அதற்கு ஒன்றும் பதில் பேசாது அமைதியாக இருந்தவளை கண்டு அவர்,

"நீ தான் கல்யாணம், குழந்தை, குட்டின்னு இல்லாம தனிமரமா நிற்கிற. அதே மாதிரி அபியை தனிமரமா நிற்க வைக்க முடியுமா? காலாகாலத்தில் அவளுக்கு ஒரு கல்யாணத்தை முடிச்சு வச்சு பார்க்க வேண்டாமா? அதுக்கு முன்னாடி அவள் வசம் கம்பெனி பொறுப்புகளை ஒப்படைத்தால் மாப்பிள்ளை வீட்டாளுங்க கிட்ட அவளைப் பற்றிச் சொல்ல கெத்தா இருக்கும்."

வெகு சாமர்த்தியமாகப் பேசிய அவரது வார்த்தைகள் அவளது மனதினை ஈட்டியாய் குத்தி கிழித்தது. எப்போதும் அவர் கூறும் வார்த்தைகள் தான் இவை என்றாலும், இன்று ஏனோ மனதினை உறுத்தி ஆழமாய் வலிக்க, வலிக்கத் தைக்கிறதே! இருந்தாலும் அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டாள். தொழில்களில் எத்தனையோ இன்னல்களை, தடங்கல்களைத் தாண்டி வந்தவளை அவரது பேச்சு ஒன்றும் முடக்கி போடவில்லை.

"அதுக்கான ஏற்பாடுகளை எல்லாம் பண்ணிட்டேன். ஐடி பீல்ட் முழுவதும் அபி பொறுப்பில் விடலாம்ன்னு இருக்கேன். அடுத்த வாரம் அதுக்கான ஃபங்க்சன் இருக்கு."

துளசியின் வார்த்தைகள் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை போலும். அது அவரது முகத்தில் தெரிந்தது.

"ஐடி பீல்ட் எதுக்குத் துளசி?" என்றவரை கை நீட்டி இடைமறித்த துளசி,

"அபி ஒரு சாஃப்ட்வேர் இன்ஜினியர்ங்கிறதை மறந்துட்டு பேசுறீங்க." என்று கூற...

"இப்ப எல்லாம் படிப்புக்கும், பார்க்கும் வேலைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையே. ஐடி பீல்ட்டை விட அவளுக்கு..."

என்று நிறுத்திவிட்டு அவர் தயக்கமாய்த் துளசியைப் பார்த்தார். அவள் கேள்வியாய் அவரை நோக்கினாள்.

"புட் ப்ரொடக்ட் கம்பெனியை அவளுக்குக் கொடுத்தால் நல்லாயிருக்கும்." வேதா கூறியதை கேட்டு துளசி மனதிற்குள் அதிர்ச்சி அடைந்தாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளவில்லை.

"அதைத் தவிர வேறு எதுன்னாலும் கேளுங்க." என்றவள் அத்துடன் பேச்சு வார்த்தை முடிந்தது என்பது போல் எழுந்தவள் தனது கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பி சென்றுவிட்டாள். அன்னையிடம் விடைபெற வேண்டும் என்கிற எண்ணம் கூட அவளுக்கு இல்லை.

செல்லும் அவளைப் பார்த்தபடி நின்றிருந்த வேதாவின் முகம் குரூரமாக மாறியது. அவரது மனதில் வன்மம் தலைவிரித்து ஆடியது.

"போடி போ... அந்தக் கம்பெனியை எப்படிக் கைப்பற்றணும்ன்னு எனக்குத் தெரியும். உனக்குப் பிடிச்சது எதையும் உனக்குக் கிடைக்காம செய்றது தான் என்னோட ஒரே வேலை. அதில் இந்தப் புட் கம்பெனியும் ஒண்ணு. அதை நீயே அபி பெயருக்கு எழுதி கொடுப்ப. இல்லை இல்லை, எழுதி கொடுக்க வைப்பேன்." அவர் வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

காரிலேறிய துளசி ஓட்டுநரிடம், "புட் கம்பெனிக்கு போ." என்றுரைத்து விட்டு தனது அலைப்பேசியில் ஆழ்ந்துவிட்டாள். அவள் தேவையில்லாத சிந்தனைகளைத் தன்னை அண்ட விட மாட்டாள்.

காரின் ஹார்ன் ஒலியில் நிமிர்ந்தவள் தான் உணவு பொருட்கள் தயாரிக்கும் நிறுவனத்திற்கு வந்துவிட்டதை உணர்ந்து பக்கவாட்டுச் சுவரில் இருந்த நிறுவனத்தின் பெயரை திரும்பி பார்த்தாள். 'வி.டி புட் ப்ரொடக்ஷன்ஸ்' என்று பித்தளையில் பளபளத்த எழுத்துக்களைக் கண்டவளின் விழிகளும் சேர்ந்து பளபளத்தது. அவளது ஆறு வருட சாதனை இந்த நிறுவனம். சமையலுக்கு

PDF தமிழ் .com

வேண்டிய மசாலா பொருட்களைப் பொடி செய்து பாக்கெட் போட்டு விற்கின்றாள். இப்போது நிறுவனத்தை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டி, சூடு பண்ணி உண்ண கூடிய 'ரெடிமேட் புட்ஸ்' உணவு வகைகளைத் தயாரிக்கும் முயற்சியில் அவள் இறங்கி இருக்கிறாள். மற்ற நிறுவனங்கள் கொடுப்பது போல் அல்லாது வேறு மாதிரியாய், புதுமையாய்ச் செய்வதற்கு முயற்சி எடுத்து கொண்டிருக்கிறாள்.

அலுவலக வாயிலில் கார் போய் நின்றதும் அதிலிருந்து இறங்கிய துளசி நேரே தனது அறையை நோக்கி சென்றாள். அவளுக்கு முன் அவளது செயலாளர் ராதிகா அங்கு வந்து அவளுக்காகக் காத்திருந்தாள்.

"குட்மார்னிங் மேம்." என்றபடி அவள் அறை கதவை திறந்துவிட... சிறு தலையசைப்புடன் உள்ளே நுழைந்தாள் துளசி.

தனது நாற்காலியில் அமர்ந்தவளின் விழிகள் வழக்கம் போல் மேசை மீதிருந்த பெயர் பலகையைப் பார்த்தது. 'வி. துளசி', தனது பெயரின் முன்னிருந்த 'வி' என்ற எழுத்தை மென்மையாக வருடி கொடுத்தவள் பின்பு ஒரு நீண்ட பெருமூச்சுடன் தனது அலுவலக வேலைகளில் ஒன்றி போனாள். சுமார் இரண்டு மணி நேரம் கழித்து நிறுவனத்தின் உள்ளே சுற்றி பார்க்க கிளம்பினாள். வேலைகள் ஒழுங்காக நடக்கிறதா? என்று அவளது கழுகு கண்கள் ஒவ்வொரு பகுதியாக அலசி ஆராய்ந்து கொண்டு வந்தது. அப்போது தான் அவள் அந்தக் காட்சியைக் கண்டாள். கண்டதும் அவளுக்கு அப்படியொரு கோபம் வந்தது. நேரே அந்த இடத்தை நோக்கி சென்றவள் அங்கு வேலை செய்து கொண்டிருந்தவனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

"ஸ்டுப்பிட்... என்ன காரியம் பண்ணிக்கிட்டு இருக்க? இதெல்லாம் என்ன குப்பைன்னு நினைச்சியா? எல்லாம் சாப்பிட கூடிய பொருட்கள். உணவு தெய்வத்துக்குச் சமம்.

அதை இப்படித் தான் காலால் தள்ளிவிடுவியா?" என்று அவனைப் பார்த்து உக்கிரமாகக் கேட்டாள்.

வெயிலில் காய்ந்து கொண்டிருந்த மஞ்சள் கிழங்குகளை அவன் கைகளால் தள்ளிவிடாது, கால்களால் தள்ளிவிட்டுக் கொண்டிருந்தான். அது தான் அவன் செய்த தவறு.

"ராதிகா, இவனை இப்பவே வேலையை விட்டு தூக்கிரு. இந்த மாதிரி அலட்சியமா உள்ளவங்க எல்லாம் நமக்குத் தேவையில்லை." என்றவள் அவனை உறுத்து விழித்தபடி,

"சம்பளம் பாக்கி கொடுக்காதே. அதுக்குப் பதிலா இவன் வீணடித்த மஞ்சளை மூட்டை கட்டி அவனிடம் கொடுத்து விடு." என்று கண்டிப்பும், கறாருமாய்க் கூறியவள் அங்கிருந்து அகன்றாள்.

"பொம்பளையா இது. ச்சீ, பஜாரி..." என்று அந்த வேலையாள் கூறிய வார்த்தைகள் துளசியின் காதுகளில் விழுந்துவிட்டது. நேரே அவனை நோக்கி திரும்பி வந்தவள் அவனது மறுகன்னத்தில் ஓங்கி ஒரு அறை வைத்தாள்.

"நான் பொம்பளை தான்டா. ஒரு பொம்பளை தான் இப்ப உன்னை அடிச்சிருக்கிறேன். ஆம்பளையா இருந்தால் என் மேல் கையை வையிடா பார்க்கலாம்." என்று அவள் அவனிடம் சவால் விட்டாள்.

துளசியை எதிர்த்து சுண்டு விரல் அசைத்தால் கூட என்ன நடக்கும்? என்பது எல்லோருக்கும் தெரியும். அதனால் அவன் அமைதியாக அடிவாங்கிய தனது கன்னத்தைப் பிடித்தபடி நின்றிருந்தான்.

"இது தான் உன்னுடைய லெவல். மைன்ட் இட்." என்று ஆட்காட்டி விரல் நீட்டி அவனை எச்சரித்தவள் அங்கிருந்து சென்றாள்.

பெண்களுக்கே உரித்தான மென்மையும், பெண்மையும் அவளிடம் இருந்து எங்கே சென்றது! அது அவளுக்கே தெரியவில்லை.

PDF தமிழ் .com

மீண்டும் அலுவலக அறையில் வந்தமர்ந்த துளசியின் முன் ஒரு கோப்பை கொண்டு வந்து வைத்தாள் ராதிகா. அவள் கேள்வியாய் ராதிகாவை பார்த்தாள்.

"மேம், ரெடி டூ ஈட் ப்ராடெக்ட்க்காக தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கேட்டரிங் சர்வீஸ் கிட்டேயும் கொட்டேசன் கேட்டு இருந்தோம்ல. அதில் பாசிட்டிவா, நமக்கு ஒத்து வந்த கேட்டரிங் சர்வீஸ் பத்தின டீடெயில்ஸ் இதில் இருக்கு."

"ஓ..." என்ற துளசி கோப்பை எடுத்து புரட்டி பார்த்தாள்.

"மேம்..."

"என்ன?"

"ஒருத்தங்க மட்டும் நம்ம ஆஃபரை ரிஜக்ட் பண்ணிட்டாங்க மேம்."

"ஏன்?" துளசியின் விழிகள் கேள்வியாய் இடுங்கியது.

"இந்த மாதிரி கெமிக்கல் போட்டு பதப்படுத்திய உணவு வகைகளைத் தயாரிக்க உதவுவதற்கு அவங்களுக்கு இஷ்டம் இல்லையாம்."

"கெமிக்கல் உபயோகிக்காம இருப்பதற்குத் தானே இவங்களை மாதிரியான கேட்டரிங் ஆட்களிடம் நாம் கேட்டது. கெமிக்கல் யூஸ் பண்றதா இருந்தால் நாமளே இதைத் தயாரித்துச் சந்தைப்படுத்தி இருக்கலாமே. இதைக் கூடப் புரிஞ்சிக்காத முட்டாளா அவங்க?" அவள் கோபத்தில் கொந்தளித்தாள்.

"மேம், இவங்க சாதாரணக் கேட்டரிங் சர்வீஸ் பண்றவங்க கிடையாது. தமிழ்நாடு முழுவதும் செயின் ஹோட்டல்ஸ் வச்சு நடத்துறாங்க. அது போகச் சென்னையில் அவங்களுக்கு ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் இருக்கு." என்று ராதிகா அவளிடம் எடுத்து கூறினாள்.

"அந்தத் திமிர் தான் இப்படி எல்லாம் பேச வைக்கிறது. இவங்களை விட்டால் வேறு ஆட்களா இல்லை." என்று

அலட்சியமாய்க் கூறியவள் அதை அப்படியே மறந்து போனாள்.

இரவு களைத்து போய் வீட்டிற்கு வந்த துளசியை வேதா வாயெல்லாம் பல்லாக வரவேற்றார். துளசி அவரை யோசனையாகப் பார்த்தாலும் எதுவும் வாய்விட்டு கேட்கவில்லை.

"துளசி, பாதாம் அல்வா சாப்பிடு." என்று அவர் அவள் முன் சிறு கிண்ணத்தை நீட்டினார்.

"நான் ஸ்வீட் சாப்பிடறது இல்லைன்னு உங்களுக்குத் தெரியாதா?" அவள் அதைக் கையில் கூட வாங்க மறுத்தாள்.

"அது தான் எனக்குத் தெரியுமே. ஆனா நான் சொல்ல போகிற விசயம் கேட்டால் நீயே ஸ்வீட்டை எடுத்து வாயில் போட்டுக்குவ."

"அப்படியென்ன விசயம்?" அலட்சிய பாவனையுடன் கேட்டவள் சோபாவில் சாய்ந்தமர்ந்து விழிகளை மூடி கொண்டாள்.

"நம்ம அபிக்கு நல்ல வரன் ஒண்ணு வந்திருக்கு." வேதா கூறியதும் அவள் படக்கென்று விழிகளைத் திறந்தாள். உண்மையில் இது மகிழ்ச்சி தர கூடிய விசயம் தான். அவளது முகத்தில் மகிழ்ச்சி அப்பட்டமாய்த் தெரிந்தது.

"வெரி குட்... மாப்பிள்ளை என்ன பண்ணுகிறார்? எந்த ஊர்?" என்று அவள் சந்தோசத்தில் கேள்விகளை அடுக்கினாள். அதில் தங்கை மீதான அவளது பாசம் வெளிப்பட்டது.

"மாப்பிள்ளை இதே ஊர் தான். ஹோட்டல் வச்சியிருக்கிறார். நல்ல வசதி. பார்க்கவும் நல்லா இருக்கிறார். எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு."

"கல்யாணம் உங்களுக்கு இல்லைம்மா. நம் அபிக்கு." என்று கேலி செய்த துளசி அவருக்கு முற்றிலும் புதிது.

PDF தமிழ் .com

"அபிக்கும் பிடிக்கும். பிடிக்காம போகக் காரணம் ஏதுமில்லை. நீயே இந்த ஃபோட்டோவை பார்." என்றவர் தன்னிடம் இருந்த புகைப்படத்தை எடுத்து அவள் முன் நீட்டினார்.

புகைப்படத்தை மகிழ்வுடன் வாங்கிப் பார்த்த துளசி அதில் இருந்த உருவத்தைக் கண்டதும் உயரழுத்த மின்சாரம் தாக்கியது போல் அதிர்ந்து போய் அமர்ந்து இருந்தாள்.

"மாப்பிள்ளை ஜம்முன்னு பார்க்க அழகா இருக்காருல்ல." என்ற வேதா தனது கையில் இருந்த பாதாம் அல்வாவை கரண்டியில் எடுத்து துளசி அசந்த நேரம் பார்த்து அவளது வாய்க்குள் திணித்து விட்டார்.

துளசி அல்வாவை துப்ப முடியாது அப்படியே விழுங்கினாள். இனிப்பாய் தொண்டைக்குள் இறங்க வேண்டிய பாதாம் அல்வா கசப்பாய் இறங்கியது. அவளது முக மாற்றத்தை அவதானித்துக் கொண்டிருந்த வேதாவின் முகம் திருப்தியை காட்டியது.

காலையில் துளசியால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை இப்போது தான் நேர்செய்து கொண்டு விட்டதாய் அவர் இறுமாப்பு அடைந்தார்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 3

"உனக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சு இருக்கா துளசி?" என்று கேட்டபடி மூத்த மகளை ஆழம் பார்த்தார் வேதா.

சில நொடிகளில் சுதாரித்துக் கொண்ட துளசி புகைப்படத்தை அன்னையிடம் கொடுத்தபடி, "எனக்குப் பிடித்திருப்பதை விட... அபிக்கு தான் பிடிக்கணும்." என்று ஒட்டாது பதில் கூறியபடி சோபாவில் இருந்து எழ போனாள்.

"உட்கார் துளசி..." என்றபடி அவள் அருகில் அமர்ந்த வேதா,

"அபி சின்னப் பொண்ணு... அவளுக்கு என்ன தெரியும்? நாம தான் அவளுக்கு நல்லது, கெட்டது எடுத்து சொல்லணும். பையன் பெயர் விஸ்வஜித். பெயர் ரொம்ப நல்லாயிருக்குல்ல. ஒரே பையன்... கூடப்பிறந்தது ஒரே ஒரு தங்கை. கல்யாணமாகிருச்சு. இங்கே தான் சென்னையில் இருக்கிறாள். அம்மா மட்டும் கூட இருக்காங்க. அப்பா இல்லை. ஹோட்டல் பிசினஸ் பண்றாங்க. நல்ல வசதி. இதை விட வேறென்ன வேணும்?" என்று மகளிடம் கேட்க...

துளசி தனக்குள் யோசித்தபடி, "ம்..." என்றாள்.

"துளசி, நீ புட் ப்ராடெக்ட் கம்பெனியை அபிக்குக் கொடுத்தால் ரொம்ப வசதியா இருக்கும். ஏன்னா மாப்பிள்ளையும் இந்த லைனில் இருப்பதால் அபிக்கு இதைக் கவனிப்பது எளிது."

"ம், யோசிக்கிறேன்ம்மா..." துளசி இந்தளவிற்குச் சொன்னதே வேதாவிற்குத் திருப்தியாக இருந்தது.

"அப்புறம் துளசி... நாளைக்கு அபி வருகிறாள்."

"ஞாபகம் இருக்கும்மா... ஏர்போர்ட்க்கு கார் அனுப்ப சொல்லிட்டேன். ராதிகா போய் அபியை ரிசீவ் பண்ணி அழைச்சிட்டு வருவாள்."

"அப்புறம்..." என்று இழுத்த வேதாவை பார்த்து,

PDF தமிழ் .com

"எதுவாக இருந்தாலும் நீங்களே பார்த்துக்கோங்க." என்று முடிவாகக் கூறிய துளசி அவளது அறைக்குச் சென்றுவிட்டாள்.

"இது ஆரம்பம் தான் துளசி. இன்னமும் நீ அனுபவிக்க வேண்டியது நிறைய இருக்கு." என்று வன்மத்துடன் கூறிக் கொண்டார் வேதா.

அறைக்குள் வந்த துளசிக்கு ஒன்றுமே ஓடவில்லை. அப்படியே கட்டிலில் அமர்ந்து தலையை இரு கைகளால் தாங்கி பிடித்துக் கொண்டாள். இதயத்தை யாரோ துடிக்க, துடிக்க உயிரோடு பிடுங்கி எறிவது போல் அப்படியொரு வலி அவளுள். அவளது மனதில் விஸ்வஜித்தின் முகம் வலம் வந்தது. பத்தாண்டுகளுக்கு முன் பார்த்த விஸ்வஜித் அவனில்லை. இப்போது அவன் கம்பீரமான ஆண் மகனாக மாறியிருந்தான். ஏற்கெனவே அவன் அழகன் தான். இப்போது பேரழகனாக உருமாறி இருந்தான்.

ஏதோ தோன்ற அவள் எழுந்து சென்று கண்ணாடி முன் நின்று தன்னுடைய உருவத்தைப் பார்த்தாள். மாநிறம், சற்று பூசினார் போன்ற தேகம். உயரமும் சாதாரணம் தான். அழகு என்று சொல்வதற்கு இல்லை. அதற்காக மோசம் என்று ஒதுக்குவதற்கும் இல்லை. அவள் எப்போதும் புற அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டாள். அக அழகை மட்டுமே ரசிப்பவள் அவள். அதிலும் அவள் தனது அழகினை குறித்து ஒரு நாளும் தாழ்வு மனப்பான்மை கொண்டது இல்லை. அவளைப் பொறுத்தவரையில் அவள் சிறந்தவள். அந்த எண்ணமே அவளுக்குத் தனிக் கம்பீரத்தை, ஆளுமையைக் கொடுத்திருந்தது. அந்தக் கம்பீரமும், ஆளுமையும் அவளுக்குத் தனிச் சோபையைக் கொடுத்திருந்தது.

ஆனால் இன்று முதன்முறையாக அவள் தன்னைக் குறித்துத் தாழ்வு மனப்பான்மை கொண்டாள். ஏனெனில் அவளது தங்கை அபிநயா சுண்டினால் ரத்தம் வரும் அளவிற்கு அத்தனை சிவப்பு. அவளது அன்னை வேதாவை போன்று. ஒல்லியான உடல்வாகு, நல்ல வளர்த்தி என்று

பேரழகுடன் இருப்பவள். நிச்சயம் அவள் விஸ்வஜித்திற்குப் பொருத்தமானவள் தான். அதைப் பற்றி நினைக்கும் போதே எதையோ இழந்தார் போன்று அவளது மனது தவியாய்த் தவித்தது.

"ஹேய் பொண்டாட்டி..." கிசுகிசுப்பாய் ஒலிக்கும் விஸ்வஜித்தின் குரல் இன்னமும் அவளது காதுகளில் ஒலித்தது.

அவள் தாங்க மாட்டாதவளாய் இரு காதுகளையும் பொத்தியபடி அப்படியே தரையில் சரிந்து அமர்ந்தாள். அவளது மனக்கண்ணில் கடந்த காலம் அப்படியே கடந்து சென்றது. அதை நினைத்து பார்த்தவளின் விழிகளில் சாரை சாரையாய் விழிநீர் வழிந்தோடியது.

*****************************

அதே நேரம் விசாலம் தனது மகனிடம் அபிநயாவை பற்றிப் பேசி கொண்டிருந்தார். விஸ்வஜித் அப்போது தான் வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்திருந்தான்.

"ம்மா, குளிச்சிட்டு வந்த பிறகு உங்களுடைய புராணத்தை ஆரம்பிங்க. ரொம்பப் பசிக்குதும்மா." என்று அவன் சற்று களைப்புடன் கூற... அவனது களைப்பை உணர்ந்தவராய் அவர்,

"ஏதோ ஆர்வக்கோளாறுல பேசிட்டேன். நீ போய்க் குளிச்சிட்டு வா..." என்று வருந்தியவாறு அவனை அனுப்பி வைத்துவிட்டு அவர் சமையலறையை நோக்கி சென்றார்.

என்ன தான் உணவு விடுதி நடத்தி வந்தாலும் விஸ்வஜித் மூன்று பொழுதும் வீட்டில் உண்பதை தான் விரும்புவான். அதுவும் அன்னையின் கைகளால் சமைத்த உணவு என்றால் வெகு விருப்பம்.

விஸ்வஜித் குளித்துவிட்டு வந்து உணவு மேசையில் அமர்ந்தான். அவன் சாப்பிடும் வரை விசாலம் ஒன்றும் பேசவில்லை. அவன் சாப்பிட்டு முடித்து ரிலாக்சாகத்

PDF தமிழ் .com

தொலைக்காட்சி முன் அமர்ந்த பிறகு விசாலம் மீண்டும் தனது பேச்சினை ஆரம்பித்தார். திருமணப் பேச்சு என்றதும் அவனுக்கு அதில் அவ்வளவாக விருப்பம் இல்லை என்றாலும், அன்னையின் மனதினை நோகடிக்க விருப்பம் இல்லாது அமைதியாக அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தான். அவனது கை தொலைக்காட்சியில் ஒவ்வொரு அலைவரிசையாக மாற்றிக் கொண்டிருந்தது.

"பொண்ணு பெயர் அபிநயா. சாஃப்ட்வேர் இன்ஜினியரிங் படிச்சிட்டு, இப்போ லண்டன்ல எம்பிஏ படிச்சு முடிச்சிருக்கிறாள். நாளைக்குத் தான் லண்டனில் இருந்து வருகிறாள்."

"இப்போ தான் படிப்பை முடிச்சு இருக்கிறாள்ன்னா...? வயசு ரொம்பக் குறைவா இருக்குமே. அப்பா, மகள் மாதிரி எங்க காம்பினேசன் இருக்கும். எனக்கு இந்தப் பொண்ணு வேண்டாம்." ஏதோ ஒன்றை சொல்லி தட்டி கழிக்க வேண்டும் என்பதால் அவன் அப்படிக் கூறினான்.

"அதெல்லாம் விசாரிச்சிட்டேன்... பொண்ணுக்கு இருபத்தைஞ்சு வயசாகுது. இன்ஜினியரிங் முடிச்சிட்டு லண்டன்ல ரெண்டு வருசம் வேலை பார்த்து இருக்கிறாள். அதுக்குப் பிறகு தான் எம்பிஏ சேர்ந்து இருக்கிறாள்."

'போச்சுடா... இப்போ என்ன சொல்லி இதைத் தட்டி கழிப்பது...' என்று அவன் மனதிற்குள் பட்டிமன்றம் நடத்தி கொண்டிருந்தான்.

"பொண்ணு பார்க்க கிளி மாதிரி இருக்காடா விச்சு. அவ்வளவு அழகு. உனக்குப் பொருத்தமா இருப்பாள்." அன்னை கூறியதை கேட்டு அவனுள் அவளது ஞாபகம்.

"விஷூ... எப்படிடா இப்படி அழகா பொறந்த. பசங்க இவ்வளவு அழகா இருப்பாங்களா?" என்று வியப்பில் விழி விரித்துக் கூறியபடி இரு கைகளால் அவனது கன்னத்தைப் பிடித்துக் கிள்ளி விளையாடும் அவளது வெண்டை பிஞ்சு விரல்களின் ஸ்பரிசத்திற்கு அவனது மனம் ஏங்கியது.

"ஒரே ஒரு அக்கா... இன்னும் கல்யாணமாகலை. கம்பெனி பொறுப்பு எல்லாத்தையும் அந்தப் பொண்ணு தான் பார்த்துக்குது போலிருக்குது."

'ஆஹா, இந்தப் பேச்சை நிறுத்த ஒரு விசயம் வசமா சிக்கியிருச்சு.' என்று மனதிற்குள் குதூகலித்தவன் அன்னையிடம் திரும்பி,

"அந்த அக்கா பொண்ணுக்கு இன்னமும் ஏன் கல்யாணமாகலைன்னு விசாரிச்சீங்களாம்மா. ஏதாவது பிரச்சனையா இருக்கப் போகுது. அப்படிப் பிரச்சனை உள்ள இடம் நமக்கு வேண்டாம்மா. ஒருவேளை அக்காவை போல் தங்கையும் இருந்தால்...?" மகனது எண்ணம் நியாயமாகவே தோன்றியது அந்தத் தாய்க்கு.

"நீ சொல்றதும் சரி தான் விச்சு. இந்தக் காலத்தில் யாரையும் நம்ப முடியாது. எதுக்கும் விசாரிச்சுக்கிறேன்." என்றவர் உடனே தனது அலைப்பேசி மூலம் இந்த வரனை கொண்டு வந்தவரை தொடர்பு கொண்டார்.

"ம்மா, இந்த நேரத்தில் அவருக்கு எதுக்கு ஃபோன் பண்றீங்க? நாளைக்குப் பேசிக்கலாம்." என்றபடி அவன் எழ போக...

"கொஞ்சம் இரு விச்சு." என்ற விசாலம் மறுபுறம் அழைப்பை எடுத்தவரிடம் பேச ஆரம்பித்தார். விஸ்வஜித் வேறுவழியின்றித் தொலைக்காட்சியில் தனது கவனத்தைத் திருப்பினான்.

"நான் நல்லா இருக்கேன். அண்ணே, பொண்ணோட அக்கா, அதான் அந்தத் துளசி பொண்ணைப் பத்தி கேட்கணும்."

'துளசி' என்கிற பெயர் காதில் விழுந்ததும் விஸ்வஜித்தின் உடல் முறுக்கேறிய நாணாய் விறைத்தது. ஒருவேளை அவளோ? என்று அவனது மனம் அலைபாயத் துவங்கியது.

"இருபத்தியெட்டு வயசாகியும் அந்தப் பொண்ணு கல்யாணம் பண்ணிக்கலைன்னா என்ன அர்த்தம்?

PDF தமிழ் .com

ஒருவேளை காதல் தோல்வியோ?"

அன்னையின் வார்த்தைகள் அனைத்தும் அவளுக்குப் பொருந்துமே... ஐயோ என்றிருந்தது அவனுக்கு. அதற்காக அவள் இன்னமும் திருமணமாகாது இருப்பாள் என்று அவனுக்குத் தோன்றவில்லை. அவளுக்குத் திருமணமாகி குழந்தைகள் கூட இருக்கலாம் என்றே அவனுக்குத் தோன்றியது.

"ஓ... அப்படி எல்லாம் இல்லையா. அப்போ சரிண்ணா. நான் ஃபோனை வைக்கிறேன்." என்று அவர் அலைப்பேசியை அணைத்தார்.

"விச்சு..."

"சொல்லுங்கம்மா..." அசுவாரசியமாய்க் கேட்பது போல் அவன் கேட்டான்.

"நீ நினைக்கிற மாதிரி இல்லைடா. அந்தத் துளசி பொண்ணு ரொம்ப நல்ல மாதிரியாம். அந்தப் பொண்ணு படிச்சிட்டு இருக்கிறப்ப அவங்கப்பா இறந்து போயிட்டாராம். திடுமென அவர் இறந்ததால் இந்தப் பொண்ணு தான் தொழிலை பார்த்துக்க வேண்டியதாய் போயிருச்சாம். தொழில், தொழில்ன்னு இருந்த பொண்ணு கல்யாணத்தைப் பத்தி யோசிக்கக் கூட இல்லையாம்." விசாலம் கூறியதை கேட்டு அவன் யோசனையில் ஆழ்ந்தான்.

"இப்ப என்ன சொல்லுற?"

"நாளைக்குப் பதில் சொல்றேன்ம்மா." என்றவன் எழுந்து தனது அறைக்குச் செல்ல எத்தனிக்க...

"பொண்ணு ஃபோட்டோவை பார்த்துட்டு போடா." அன்னை கூறியதை காதில் வாங்காதவாறு அவன் தனது அறைக்குச் சென்றுவிட்டான்.

"இவனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறதுக்குள்ள நான் ஒரு வழியாகிருவேன்." விசாலம் முணுமுணுத்துக்

கொண்டே தனது அறைக்குச் சென்றார்.

அறைக்கு வந்த விஸ்வஜித் நேரே பால்கனியில் வந்து நின்றான். இன்னும் மூன்று நாட்களில் பௌர்ணமி என்பதால் வானில் மதி பிரகாசமாய் வலம் வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்து கொண்டிருந்தவன் மனதில் அவனது துளசியின் ஞாபகமே.

"நிலா மாதிரி நீ அவ்வளவு அழகுடி."

"பொய் சொல்ற விஷூ... நிலா வெள்ளையா, அழகா இருக்கும். என்னை மாதிரி கருப்பா இருக்காது. வேணும்ன்னா இப்படிச் சொல்லலாம். கருப்பு நிலா. நல்லாயிருக்குல்ல." என்று கூறி புன்னகைத்தவளின் புன்னகையில் அவன் தொலைந்தே தான் போனான். அவளது முகத்தைத் தனது கைகளில் தாங்கி அவளது விழிகளை ஊடுருவியபடி,

"எனக்கு நீ தான் அழகு. என்னுடைய நிலா நீ தான். நீ மட்டும் தான்." அன்று அவளைப் பார்த்து காதல் பொங்க கூறியவனின் காதல் இதோ இப்பொழுதும் எள்ளளவும் குறையவில்லை. ஆனால் அவள் மட்டும் ஏன் பொய்த்து போனாள்?

அவளை மறந்துவிட்டு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள முடியுமா? அதற்காக அவன் இப்படியே இருக்கவும் அவனது அன்னை விட மாட்டார். என்ன செய்வது? என்று யோசித்து யோசித்து அவனுக்குத் தலைவலி வந்தது தான் மிச்சம்.

மறுநாள் காலையில் அலுவகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்த விஸ்வஜித்திடம் விசாலம், "அவங்களுக்கு என்ன பதில் சொல்லட்டும் விச்சு?" என்று கேட்க...

"இன்னைக்கு ஒரு நாள் டைம் கொடுங்கம்மா." என்றவன் அவர் மேலே பேச இடம் கொடாது அலுவலகத்திற்குச் சென்றுவிட்டான்.

PDF தமிழ் .com

"மாரியம்மா, என் மகனோட மனசை நீ தான் மாத்தணும். அப்படி நீ மாத்திட்டேன்னா அவன் கல்யாணம் முடிஞ்ச கையோடு என் மருமகள் கையால் உனக்குப் பொங்கல் வைக்கிறேன்." விசாலம் தங்களது குல தெய்வத்திடம் வேண்டி கொண்டார்.

அவர் வேண்டியது அந்தக் கடவுளுக்குக் கேட்டதோ இல்லையோ! அவரது மகனுக்குக் கேட்டு விட்டது போலும்! அடுத்த ஒரு மணி நேரத்தில் அவன் தனது அன்னைக்கு அழைத்தான்.

"ம்மா, பொண்ணு பார்க்க வர்றோம்ன்னு சொல்லிருங்க."

"விச்சு, உண்மையாவாடா?" மகன் கூறியதை கேட்ட விசாலத்தால் இன்னமும் நம்ப முடியவில்லை.

"உண்மை தான்ம்மா..." விஸ்வஜித் சிரித்தபடி கூறினான்.

"நீ இன்னமும் பொண்ணு ஃபோட்டோ பார்க்கலையே." விசாலம் கவலையுடன் கேட்க...

"அதெல்லாம் தேவை இல்லை." என்றவனின் விழிகள் மேசை மீதிருந்த கணினி திரையில் தெரிந்த துளசியின் பிம்பத்தின் மீது நிலைத்திருந்தது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 4

அன்னையின் அழைப்பை துண்டித்துவிட்டு நாற்காலியில் சாய்ந்தமர்ந்த விஸ்வஜித்தின் விழிகள் கணினி திரையில் இருந்த துளசியின் பிம்பத்தை விட்டு அங்கே இங்கே நகரவில்லை. அவன் இமைக்கவும் மறந்தவனாய் அவளைப் பார்த்திருந்தான். காலையில் அலுவலகத்திற்கு வந்தவன் அடுத்த ஒரு மணி நேரத்தில் துளசி பற்றிய செய்திகளைச் சேகரித்து விட்டான். 'ரெடி டூ ஈட்' எனப்படும் சமைத்த உணவு பொருட்களைப் பக்குவப்படுத்தி, பதப்படுத்தி அதை எப்போது வேண்டுமானாலும் சூடு படுத்தி உண்ணும் முறைக்கான திட்டத்திற்காகத் தனது நிறுவனத்தை அணுகிய 'வி.டி. புட் ப்ரொடக்ஷன்ஸ்' அவளுடையது என்பதையும் அவன் தெரிந்து கொண்டான். சட்டென்று யோசனை தோன்ற தனது செயலாளரை அழைத்தவன்,

"வி.டி. புட் ப்ரொடக்ஷன்ஸ்க்கு ஓகே சொல்லிருங்க." என்று கூற... அவனது செயலாளர் கண்ணன் அவனை ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு பின்பு சரியென்று தலையசைத்துவிட்டுச் சென்றான்.

"தொழிலிலும் சரி, வாழ்க்கையிலும் சரி... நாம நேருக்கு நேர் சந்திக்கப் போகிறோம். இப்போ எப்படி என் கிட்ட இருந்து நீ தப்பிக்கிறன்னு நான் பார்க்கிறேன். உனக்கும், எனக்குமான கணக்கை நேர் செய்யாம நான் விட மாட்டேன்டி." என்றவனது மனதில் அப்படி ஒரு கோபம் எழுந்தது.

அப்போது அவனது அலைப்பேசி அழைத்தது. யாரென்று எடுத்து பார்த்தவன் அது தங்கையிடம் இருந்து வந்த அழைப்பு என்றதும் அவனது உதடுகளில் புன்னகை வந்து ஒட்டி கொண்டது.

"சொல்லு மங்கி..." சந்தோசமான மனநிலையில் அலைப்பேசியை உயிர்ப்பித்தவன் தங்கையை வம்பிழுத்தான்.

PDF தமிழ் .com

"டேய் அண்ணா, நான் கேள்விப்பட்டது உண்மை தானா?"

"நீ என்ன கேள்விப்பட்டேன்னு சொன்னால் தானே எனக்குத் தெரியும்."

"நீ கல்யாணத்துக்குச் சம்மதிச்சிட்டியாமே."

"கல்யாணத்துக்கு இல்லை மங்கி. பொண்ணு பார்க்க..." அவன் தங்கையின் வார்த்தைகளில் குற்றம் கண்டுபிடித்துத் திருத்தினான்.

"ம்க்கும், ரெண்டும் ஒண்ணு தான்." என்று மறுபுறம் நொடித்துக் கொண்டாள் மதுரா. அதைக் கேட்டவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"ரெண்டும் ஒண்ணு இல்லை. முதலில் பொண்ணு பார்ப்போம். பிடித்திருந்தால் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கலாம்." அவன் பட்டும் படாமல் கூறினான்.

"நீ இந்தளவுக்கு இறங்கி வந்ததே அதிசயம். எல்லாப் பொண்ணுங்க ஃபோட்டோவை கூடப் பார்க்க மாட்ட. ஆனா இந்தப் பொண்ணைப் பார்க்க வர்றேன்னு சொல்லியிருக்கியே. அப்போ இந்த இடம் ஓகே ஆகிரும்ன்னு ஒரு பட்சி சொல்லுது."

"அப்படின்னு சொல்லுற..." என்று தாடையைத் தடவியபடி கணினி திரையில் தெரிந்த துளசியின் பிம்பத்தை யோசனையுடன் பார்த்தவன்,

"அப்படி மட்டும் நடந்தது... உனக்கு வைர ஆரம் வாங்கித் தர்றேன்." என்றான் சந்தோசமாக...

"நிஜமாவா? அப்போ அந்தப் பொண்ணு கால்ல, கையில் விழுந்தாவது உன் கல்யாணத்தை நடத்தி வைக்கிறேன்." என்று மதுரா குதூகலிக்க...

"மக்கு மங்கி... அந்தப் பொண்ணு சம்மதம் தேவையில்லை. என்னோட சம்மதம் தான் கல்யாணத்துக்குத் தேவை."

"அட ஆமாயில்ல..." என்று மதுரா யோசிக்க ஆரம்பிக்க...

"ஆமாயில்ல இல்லை. ஆமாம் மட்டும் தான். அதனால் எனக்குப் பொண்ணைப் பிடிக்கணும்ன்னு வேண்டிக்க."

"கட்டாயம் வேண்டிக்கிறேன். உன் கல்யாணம் நடந்தால் கோகுலுக்கு மொட்டை போடுறதா வேண்டிக்கிறேன்."

"பாவம் கோகுல்..." என்று அவன் சிரித்தபடி அலைப்பேசியை அணைத்தான்.

மீண்டும் துளசியின் பிம்பத்தைப் பார்த்தவன், "நிராகரிப்பின் வலி எப்படி இருக்கும்ன்னு உனக்குக் காட்டுறேன்டி. அனுபவிச்சு பாரு, அப்போ புரியும்... என்னோட வேதனை." என்றவனது வார்த்தைகளில் மட்டுமல்ல முகத்திலும் அத்தனை வேதனை தெரிந்தது.

**********************

"என்ன விசயம் சொல்லுங்க? வேலை நேரத்தில் தொந்தரவு பண்றது எனக்குப் பிடிக்காதுன்னு உங்களுக்குத் தெரியும் தானே." துளசி சலிப்பான குரலில் வேதாவிடம் பேசி கொண்டிருந்தாள்.

"சந்தோசமான விசயம் துளசி... அதான் உனக்கு ஃபோன் பண்ணினேன்."

"என்ன விசயம்?" கேட்கும் போதே துளசியின் மனம் அதிர்ந்தது.

"எல்லாம் சந்தோசமான விசயம் தான். மாப்பிள்ளை சம்மதிச்சுட்டாராம். நல்ல நாள் பார்த்து பொண்ணு பார்க்க வர்றேன்னு சொல்லியிருக்காங்க." வேதாவின் குரலில் உற்சாகம் ததும்பி வழிந்தது. அதைக் கேட்டு துளசியின் மனம் துவண்டு போனது.

"ரொம்பச் சந்தோசம்மா. மேற்கொண்டு ஆகவேண்டிய வேலைகளை நீங்க பாருங்க." என்று கூறியவள் சுரத்தின்றி அலைப்பேசியை அணைத்தாள்.

மறுபுறம் அலைப்பேசியை அணைத்த வேதாவின் முகத்தில் வெற்றியின் அறிகுறித் தென்பட்டது. எத்தனை ஆண்டுகள்

திட்டம் இது. இப்போது தான் அவருக்கு இது கை கூடியிருக்கிறது. அவரது மனதில் பழிவாங்கும் அக்னி கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. அது அணைய வேண்டும் என்றால் துளசியின் வாழ்க்கை அஸ்தமனமாக வேண்டும்.

"பத்து வருசமா நீ அனுபவித்து வரும் வலி கொஞ்சம் குறைவு தான் துளசி. இனி தான் நீ உண்மையான வலியை அனுபவிக்கப் போகிற." என்றவரின் முகத்தில் ஆத்திரம் ஜொலித்தது.

விழி மூடி நாற்காலியில் அமர்ந்திருந்த துளசியின் காதுகளில் வேதா கூறிய வார்த்தைகளே ஒலித்துக் கொண்டிருந்தது. அப்படி என்றால் விஸ்வஜித் திருமணத்திற்குச் சம்மதித்து விட்டானா? அவளது இதயம் இரண்டாகப் பிளப்பது போல் வலி உண்டானது.

'பின்னே அவன் உன்னையவே நினைத்துக் கொண்டு தேவதாசாக இருக்க வேண்டுமா?' அவளது மனசாட்சி அவளைக் கடிந்து கொண்டது.

"இல்லை இல்லை... வேண்டாம். அவன் சந்தோசமாக வாழ வேண்டும். அது தான் எனக்குத் தேவை. அபி மூலம் அவனுக்குச் சந்தோசம் கிடைக்கும் என்றால் அதற்குத் தடையாக நான் இருக்க மாட்டேன். அவனது சந்தோசம் தான் என்னுடைய சந்தோசம்." அவள் மெல்ல முணுமுணுத்து கொண்டாள். அவளது விழிகளில் கண்ணீர் கரை கட்டி நின்றது. இழப்பின் வலி அவளை உயிரோடு வதைத்துக் கொன்றது.

"மேம்..." ராதிகா அவளது அனுமதி வேண்டி கதவை தட்டினாள். துளசி ஆழ மூச்செடுத்து கலங்கிய விழிகளைச் சரி செய்து கொண்டவள் அவளை உள்ளே அழைத்தாள்.

"மேம், நம்ம கூட வொர்க் பண்ண விருப்பம் இல்லைன்னு சொன்னாங்களே... அவங்க இப்போ நம்ம கூட வொர்க் பண்ண சம்மதிச்சு இருக்காங்க."

"ம்ஹூம், அவங்களை வேண்டாம்ன்னு சொல்லிரு." என்றவள் விஸ்வஜித் பற்றிக் கூறி,

"இவங்களைக் கான்டாக்ட் பண்ணி நம்ம கூட இணைஞ்சு வொர்க் பண்ண விருப்பமான்னு கேட்டு சொல்லு." என்று உத்தரவிட...

இரண்டும் ஒரே நிறுவனம் தானே என்று யோசித்த ராதிகா, "மேம்..." என்று தயங்கியபடி நின்றாள்.

"நான் சொல்றதை செய் ராதிகா. அவங்க எவ்வளவு பெரிய நிறுவனமா இருந்தாலும் நமக்குத் தேவையில்லை. நமக்குத் தேவை இவங்க தான். ஏன்னா, இதோட எம்டியை தான் நம்ம அபிக்கு பேசி முடிச்சிருக்கு." என்று துளசி மகிழ்ச்சியுடன் கூற...

"தட்ஸ் கிரேட் நியூஸ் மேம். நீங்க சொன்ன மாதிரி செஞ்சிர்றேன்." என்றவள்,

"இன்னும் ஒன் அவர்ல அபி மேம்மை பிக்கப் பண்ண நான் போகணும்." என்று ராதிகா அவளின் அனுமதி வேண்டி நின்றாள்.

"ம்... நீ போக வேண்டாம். நான் போகிறேன். நான் சொன்னதை மட்டும் மறக்காம செஞ்சிரு."

"ஓகே மேம்..." என்று கூறிவிட்டு வெளியில் வந்த ராதிகா தனது இருப்பிடத்திற்குச் சென்றதும் விஸ்வஜித்தின் செயலாளர் கண்ணனுக்கு அழைத்து விசயத்தைக் கூறினாள். அவன் அப்படியே அந்த விசயத்தை விஸ்வஜித்தின் காதிற்குக் கொண்டு சென்றான்.

"சரி, நீ போ..." என்று கண்ணனை அனுப்பி வைத்த விஸ்வஜித் யோசனையில் ஆழ்ந்தான்.

துளசியின் முரண்பாடான செயல் அவனை ஆழ்ந்து சிந்திக்க வைத்தது. முதலில் யாரோ ஒருவனுக்கு வாய்ப்பு தர மறுத்தவள்... பின்பு தனது தங்கைக்கு வர போகும் கணவன் என்று அந்த வாய்ப்பை தனக்குக் கொடுக்கிறாள்

என்றால்...??? அவன் யோசனையாகத் தாடையைத் தடவி கொண்டான். காரணம் என்னவாக இருக்கும்? என்று அவனுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது.

"உன் தங்கை கணவன் நான் தான் என்று நீ முடிவே பண்ணிட்டியா? நான் யாரென்று தெரிந்து செய்கிறாயா? அல்லது தெரியாமலா?" அவனுக்கு மிகவும் குழப்பமாக இருந்தது.

***************

சென்னை சர்வதேச விமான நிலையத்தின் உள்ளே இருந்து வெளியில் வந்த அபிநயா நவநாகரீக மங்கையாய் காட்சி அளித்தாள். அலட்சியமாகச் சூயிங்கம்மை மென்றபடி தனது உடைமைகளைத் தள்ளி கொண்டு வந்தவள் அங்கே தனக்காகத் தனது சகோதரி காத்திருப்பதைக் கண்டு ஆச்சரியத்தில் வாயை பிளந்தாள்.

"வாவ், வாட் அச் சர்ப்ரைஸ்... தி கிரேட் துளசி மேடத்துக்கு என்னைக் கூப்பிட வர எல்லாம் நேரம் இருக்கா?"

"போடி அரட்டை... அதெல்லாம் நேரம் இருக்கு. நீ எப்படி இருக்க?" என்று துளசி தங்கையை அக்கறையாய் விசாரித்தாள்.

"நீயே பாரு... நான் எப்படி இருக்கேன்?" தன்னைத் தானே சுற்றியபடி சிறு வட்டம் அடித்து நின்றவளை ஏற இறங்க பார்த்த துளசி,

"லண்டன் மாநாகரம் உன்னை ரொம்பவே மாத்தியிருக்கு." என்று கூறி புன்னகைத்தாள்.

இருவரும் சலசலத்தபடி தங்களது காரை நோக்கி நடந்தனர். ஓட்டுநர் பயணப் பொதிகளைக் காரின் பின்பக்கம் ஏற்றியதும் அவரிடம்,

"நீங்க பஸ்சில் வாங்க..." என்றுரைத்த துளசி காரிலேறி ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்தவள் தானே காரை செலுத்த ஆரம்பித்தாள்.

"அப்புறம் படிப்பு எல்லாம் முடிஞ்சது. அடுத்து என்ன செய்யப் போகிற அபி?"

"கொஞ்ச நாள் நல்லா சாப்பிட்டுட்டு, ஊரை சுத்திட்டு, பிரெண்ட்ஸ் கூட அரட்டை அடிச்சிட்டு ஜாலியா இருக்கலாம்ன்னு பிளான் பண்ணி இருக்கேன்." வெளியில் வேடிக்கை பார்த்தபடி கூறிய அபிநயாவை பார்த்த துளசி,

"ஐயம் சோ சாரி பேபி." என்று போலியாக வருத்தப்பட...

"ஏன்?" அபிநயா கேள்வியாய் புருவத்தை ஏற்றி இறக்கினாள்.

"இந்த அடங்காத குதிரைக்குக் கால்கட்டு போடணும்ன்னு அம்மா விருப்பப்படுறாங்க. அதனால் உனக்கு ஏத்த மணவாளனை அம்மா தேர்ந்து எடுத்துட்டாங்க. நீ சமத்தா கழுத்தை நீட்ட வேண்டியது மட்டும் தான் பாக்கி." என்று தங்கையைக் கேலி செய்தாள் துளசி.

சகோதரி கூறிய செய்தியை கேட்டு அபிநயா அதிர்ந்து போனாள். ஆனால் அதை வெளிக்காட்டி கொள்ளாது சட்டென்று தனது முகபாவனையை மாற்றிக் கொண்டவள் புன்னகையை மீட்டெடுத்தபடி,

"அந்தத் தூரதிர்ஷ்டசாலி யாரோ?" என்று பதிலுக்குக் கிண்டலாய் கேட்க...

"ஏய், அப்படி எல்லாம் சொல்ல கூடாது. உன்னைக் கட்டிக்கப் போகிறவர் ரொம்ப அதிர்ஷ்டசாலி."

"அதைக் கட்டிக்கிற அவன் சொல்லணும்." கண்சிமிட்டி சிரித்த தங்கையைக் கண்டு துளசி வாத்சல்யத்துடன் புன்னகைத்தாள்.

"அதெல்லாம் சொல்வாங்க. நீ கவலைப்படாதே."

"அந்த அப்பாடக்கர் ஃபோட்டோ இருக்கா?"

"என் கிட்ட இல்லை. நீயே வீட்டுக்கு வந்து பாரு." என்று துளசி கூறிவிட... அபிநயா தனக்குள் யோசித்தபடி

வெளிப்புறம் வேடிக்கை பார்த்தபடி வந்தாள்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 5

"மாமா, மாமா..." குழந்தை ரக்ஷிதா விஸ்வஜித்தின் கையை மெல்ல சுரண்டியது.

"என்னடா குட்டி?" தங்கை மகளைக் கண்டு அவனது முகத்தில் கனிவு தோன்றியது.

"அத்தை ரொம்ப அழகா இருப்பாங்களா?"

"இவங்க தான் உன் அத்தைன்னு நீ முடிவு பண்ணிட்டியா ரக்ஷி குட்டி?"

"ம், ஆமா... அம்மா அப்படித்தான் சொன்னாங்க. அப்படித்தானேம்மா?" என்றவள் காரின் பின்புறம் அமர்ந்திருந்த தனது அன்னையை எட்டிப்பார்த்து கேட்டாள்.

"ஆமா, அப்படித்தான்னு உன்னோட மாமா கிட்ட ஸ்ட்ரிக்ட்டா சொல்லிரு." மதுரா மகளிடம் சொல்வது போல் அண்ணனிடம் கூறினாள்.

"அதுக்கு நான் ஓகே சொல்லணும்." என்றான் விஸ்வஜித் சிறிதும் விட்டு கொடுக்காது... இருவரும் பேசுவதைக் கேட்டபடி புன்னகையுடன் காரை ஓட்டி கொண்டு வந்தான் மதுராவின் கணவன் கோகுல்.

"அம்மாவும், நானும் முடிவு பண்ணிட்டோம்... இவங்க தான் என் அண்ணி. நம்ம வீட்டு மருமகள்ன்னு..."

"நானும் முடிவு பண்ணிட்டேன்." என்றான் அவனும் ஒரு முடிவோடு...

"ரொம்ப நல்லதுண்ணா." என்று சந்தோசித்தாள் மதுரா. விசாலம் சற்று கவலையுடன் மகனை பார்த்தார்.

பின்னே பெண் பார்க்க பெண் வீட்டிற்குப் போகலாம் என்றால்... வேண்டாம் என்று மறுத்தவன் அவர்களை அவர்களது நட்சத்திர விடுதிக்கு வரவழைத்து இருக்கிறான். கேட்டால், 'கேசுவல் மீட்டிங்' மாதிரி இருக்க

வேண்டும் என்கிறான். என்ன நடக்கப் போகிறதோ? என்று அவர் மனம் தவிக்க அமர்ந்திருந்தார்.

விஸ்வஜித்தோ அமைதியாய் வெளியில் பார்த்தபடி வந்தான். அவனது மனக்கண்ணில் நேற்று அவனது அன்னை காட்டிய புகைப்படமே வலம் வந்தது. அபிநயா எடுத்திருந்த செல்ஃபி ஒன்றை வேதா விசாலத்திற்கு அனுப்பி வைத்திருந்தார். அதிலிருந்த அபிநயாவை பார்த்த விசாலம் அவளது அழகு கண்டு பிரமித்துப் போனார்.

"பொண்ணைப் பாரேன்டா... என்னம்மா நிறமா இருக்கிறாள். தகதகன்னு தக்காளி பழம் மாதிரி." விசாலம் அபிநயாவை பற்றிப் புகழ்ந்து தள்ளினார்.

"நீயும் பாருடா..." என்றபடி தனது கையில் திணித்த அலைப்பேசியை அசுவாரசியமாகப் பார்த்த விஸ்வஜித் தனது விழிகளை அங்கும் இங்கும் திருப்ப முடியாது சுவாரசியமாகி போனான். அவனது சுவாரசியத்திற்குக் காரணம் அதிலிருந்த துளசியின் பிம்பமே என்றால் அதில் மிகையில்லை...

அபிநயா தனது அக்கா துளசியுடன் இணைந்து தான் புகைப்படம் எடுத்திருந்தாள். அவனது விழிகள் அபிநயாவை பார்ப்பதற்குப் பதில் துளசியைத் தான் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தது. அவனது விழிகள் அவளைத் தான் சொந்தத்துடன் வருடி கொண்டிருந்தது.

"எப்படி இருக்கிறாள் விச்சு?" அன்னையின் குரலில் நடப்பிற்கு வந்தவனுக்கு நிஜம் சுட்டது. சட்டென்று அலைப்பேசியை அவரது கைகளில் கொடுத்துவிட்டு எழுந்து சென்றுவிட்டான்.

புகைப்படத்தில் புன்னகையுடன் இருந்த துளசியைக் காண காண அவனுக்குக் கோபம் அதிகரித்துக் கொண்டே போனது. அவளை நேருக்குநேர் சந்தித்துத் தான் யார் என்பதை அவளுக்கு ஞாபகப்படுத்த வேண்டும் என்கிற எண்ணம் அவனுள் வலுத்துக் கொண்டே போனது.

'அதற்குப் பின் நடப்பதை பொறுத்திருந்து பாரு பேபி.' என்று அவன் மனதிற்குள் கூறிக் கொண்டான்.

நட்சத்திர விடுதி வந்ததும் விஸ்வஜித் அன்னையிடம், "எனக்கு முக்கியமான வேலை ஒண்ணு இருக்கும்மா. நீங்க போய்ப் பெண் வீட்டாரிடம் பேசிக்கிட்டு இருங்க. நான் வேலையை முடிச்சிட்டு வந்து ஜாயின் பண்ணிக்கிறேன்." என்று கூறிவிட்டு அவரது பதிலை எதிர்பாராது அவன் வேகமாகச் சென்றுவிட்டான்.

"இவனை நம்பி வந்தது சரியா மது? எனக்கு என்னமோ பயமாயிருக்கு. பொண்ணு வீட்டுக்காரங்க முன்னாடி நாம அசிங்கப்படாம இருக்கணும்." விசாலம் கவலையுடன் கூற...

"அத்தை, மச்சானுக்கு எல்லாம் தெரியும். நீங்க வாங்க..." என்றபடி கோகுல் எல்லோரையும் உள்ளே அழைத்துச் சென்றான்.

உள்ளே இவர்களுக்கு என்று தனிக் கூடம் ஒன்று ஒதுக்கப்பட்டு இருந்தது. அங்கு வேதா, அபிநயா, துளசி மூவரும் ஏற்கெனவே வந்து இவர்களுக்காகக் காத்திருந்தனர். அபிநயா அழகாகப் புடவை கட்டி கொண்டு அம்சமாக வந்திருந்தாள். விசாலத்தைக் கண்டதும் எழுந்து நின்றவள் அவரைக் கண்டு மரியாதையாக இரு கரங்கள் கூப்பி வணக்கம் தெரிவித்தாள். அதிலேயே விசாலம் விழுந்துவிட்டார். அபிநயா தான் தங்களது வீட்டு மருமகள் என்று அவர் அவளைப் பார்த்த கணம் முடிவு செய்துவிட்டார். பார்த்தவுடன் ரக்ஷிதாவை மடியில் தூக்கி வைத்துக் கொண்ட அபிநயாவை மதுராவிற்கும் மிகவும் பிடித்துப் போனது.

துளசி மட்டும் எதிலும் ஒட்டாது டென்சனுடன் அமர்ந்திருந்தாள். அவளது பார்வை அடிக்கடி அங்கிருந்த கதவை நோக்கி பாய்ந்து பாய்ந்து மீண்டது. அவளுக்கு இங்கு வரவே பிடிக்கவில்லை. ஆனால் விஸ்வஜித் அவனது செயலாளர் மூலம் இன்று தொழில் சம்பந்தமாக அவளைச் சந்திக்க இங்கு வர சொல்லி இருந்தான். அவன் தன்னைப் பற்றித் தெரிந்து கூறினானா? அல்லது

தெரியாது கூறினானா? என்று அவளுக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. அவனை எப்படி எதிர்கொள்வது? என்று அவளுக்குச் சற்று திணறலாக இருந்தது.

அபிநயாவிற்கும், விஸ்வஜித்திற்கும் இடையில் திருமணப் பேச்சு வார்த்தை நடப்பதை சந்தோசமாக வரவேற்றவள் அவள் தான். ஆனால் அவனை நேருக்குநேர் எதிர்கொள்ளும் தைரியம் அவளுக்கு இல்லை. உணவு நிறுவனத்தை அபிநயா வசம் ஒப்படைத்து விட்டு, விஸ்வஜித்துடனான தொழில் ஒப்பந்தத்தை அபிநயாவை வைத்து போட வைக்கத் தான் அவள் திட்டம் தீட்டி இருந்தாள். அவள் எந்தக் காரணம் கொண்டும் விஸ்வஜித்தை சந்திக்க விரும்பவில்லை. அவள் அவனைக் கவனமாகத் தவிர்க்க எண்ணினாள். ஆனால் விஸ்வஜித் முந்தி கொண்டு அவளைச் சந்திக்க வேண்டும் என்று கூறிவிட்டான்.

இப்போது என்ன செய்வது? என்று யோசித்தபடி நகத்தைக் கடித்துக் கொண்டு டென்சனோடு அமர்ந்திருந்தவளை சிசிடிவி கேமிரா மூலம் பார்த்துக் கொண்டிருந்த விஸ்வஜித்தின் உதடுகளில் கேலி புன்னகை வந்து ஒட்டி கொண்டது. இது தானே அவனுக்கு வேண்டும். அவளை டென்சன் படுத்திப் பார்ப்பதில் அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது. பிறகு மெல்ல நாற்காலியில் இருந்து எழுந்தவன் அவர்கள் இருந்த கூடம் நோக்கி சென்றான்.

கதவு திறக்கும் ஒலியில் துளசி அவளையும் அறியாது திரும்பி பார்த்தாள். இளம் நீல நிறத்தில் அடர் நீல நிற மெல்லிய கோடுகள் போட்ட சட்டையும், அடர் நீல நிற கால்சராயும் அணிந்து கம்பீரமாக நடந்து வந்தவனைக் கண்டு அவள் இமைக்க மறந்து அமர்ந்திருந்தாள்.

"சாரி, ஒரு முக்கியமான வேலை வந்துருச்சு. அதான் லேட்டாகிருச்சு." என்று அபிநயாவை பார்த்தபடி கூறிய விஸ்வஜித்தை கண்டு துளசியின் முகம் சுருங்கி போனது.

அதை ஓரக்கண்ணால் கவனித்த விஸ்வஜித், 'இது ஆரம்பம் தான்டி' என்று கோபத்துடன் தனக்குள் சொல்லி கொண்டான்.

"இட்ஸ் ஓகே மாமா." என்ற அபிநயாவை கண்டு துளசி மட்டும் அல்லாது எல்லோருமே ஆச்சரியமாகப் பார்த்தனர்.

"கட்டிக்கப் போகிறவரை மாமான்னு தானே கூப்பிடணும்." எல்லோரின் பார்வையைக் கண்டு அபிநயா சாதாரணமாகக் கூற... எல்லோரின் முகத்திலும் மகிழ்ச்சி அலை பரவியது.

துளசி மனதிற்குள் தவித்தபடி தனது கை விரல்களை ஆராய்ந்து கொண்டு அமர்ந்திருந்தாள். அவளை விஸ்வஜித் கவனித்தது போல் வேதாவும் கவனித்துக் கொண்டிருந்தார். அவளது நிலை அவருக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது.

"ரொம்பச் சந்தோசம் அபிம்மா..." விசாலத்தின் விழிகள் கலங்கிவிட்டது. இனி அவருக்கு மகனின் திருமணத்தைப் பற்றிக் கவலையில்லை. மகனின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி கண்டு அவருக்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

எல்லோரும் பேசி கொண்டிருக்க... துளசி தான் தணலின் மீது அமர்ந்திருப்பது போன்று அவஸ்தையுடன் அமர்ந்திருந்தாள். அதை உணர்ந்தார் போன்று விஸ்வஜித் அவளைப் பார்த்து,

"மிஸ். துளசி..." என்று அவளை அழைக்க... அவள் சட்டென்று அவனை ஏறிட்டு பார்த்தாள். நான்கு விழிகளும் இரும்பும், காந்தம் போல் ஒன்றை ஒன்று ஈர்த்து கவ்வி கொண்டது. மெல்ல தன்னைச் சுதாரித்துக் கொண்ட விஸ்வஜித்,

"நாம வெளியில் போய்த் தொழில் பற்றிப் பேசலாமா?" என்று அவளை அழைக்க...

"ம்... ம்..." என்று தெளிவில்லாது முணுமுணுத்தவள் தனது தங்கையை உடன் அழைக்க நினைத்து அவளைக் கூப்பிட

போனாள். அவளை முந்தி கொண்ட விஸ்வஜித்,

"அபி, நீயும் வாயேன். உனக்கு உபயோகமா இருக்கும்." என்று அபிநயாவை அழைத்தான்.

அதைக் கேட்டு துளசியின் முகம் விழுந்துவிட்டது. அவள் தங்கையை அழைக்க நினைத்தாள் தான்... ஆனால் விஸ்வஜித் அபிநயாவை அழைத்தது அவளுக்கு ஏனோ ருசிக்கவில்லை.

"நான் இல்லாமலா?" என்று புன்னகையுடன் கூறியபடி அபிநயா நாற்காலியில் இருந்து எழுந்தாள். மூவரும் வெளியில் செல்ல... மற்றவர்கள் அவர்களைத் திருப்தியுடன் பார்த்து கொண்டிருந்தனர்.

கடற்கரையை ஒட்டி அமைந்திருந்தது அந்த நட்சத்திர விடுதி. அங்கிருந்த புல்வெளியில் போடப்பட்டு இருந்த மேசையில் மூவரும் அமர்ந்தனர். துளசி அமைதியாக அமர்ந்தாள். அபிநயா அவளுக்கு இடதுபுறம் அமர்ந்தாள். விஸ்வஜித் அவளுக்கு வலப்புறம் அமர்ந்தான். கடல் அலைகளின் ஓசையை நன்கு கேட்க முடிந்தது. அந்த ஏகாந்த சூழல் மனதிற்கு அமைதி தருவதாக அமைந்திருந்தது.

"பிசினஸ் பேசலாமா?" விஸ்வஜித் ஆரம்பித்து வைத்தான்.

"பிசினஸ் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. துளசிக்கு தான் எல்லாம் தெரியும். நீங்க பேசுங்க... நான் கேட்டுக்கிறேன்." என்று கூறிய அபிநயாவை கண்டு,

"உங்கப்பா சொத்தில் உனக்கும் உரிமை இருக்கு தானே. அதனால் நீயும் தொழிலை பத்தி கவனமா கேட்டுக்கோ அபி. இந்தக் காலத்தில் யாரையும் நம்ப முடியாது." என்றவனின் பார்வை துளசியைத் துளைத்து எடுத்தது. துளசி முகம் மாறாதிருக்க அரும்பாடு பட்டாள்.

"எங்கப்பா சொத்தா? குட் ஜோக். இதெல்லாம் அம்மாவோட சொத்துகள்." என்று சிரித்தபடி கூறிய அபிநயாவின் அலைப்பேசி அழைத்தது.

"எக்ஸ்க்யூஸ் மீ..." என்று எழுந்தவள் சற்று தள்ளி சென்று அலைப்பேசியில் பேச ஆரம்பித்தாள்.

துளசி விஸ்வஜித்தின் முகத்தைப் பார்க்காது அண்ணாந்து வானத்தைப் பார்த்து கொண்டிருந்தாள். அவனது விழிகளைச் சந்திக்கும் தைரியம் அவளுக்கு இல்லை. அவளைத் தொடர்ந்து விஸ்வஜித்தும் வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

"இந்த மீட்டிங்கை இன்னைக்கு ஏன் நான் வச்சேன்னு உனக்குத் தெரியுமா?" திடுமென அவன் கேட்டதும் அவள் புரியாது அவனைப் பார்த்தாள்.

"இன்னைக்குப் பௌர்ணமி." என்றான் அவன் பதிலாக... கடந்தகால நினைவு அவளது மனதில் எழ... அவள் அமைதியாகி போனாள்.

"ஊருக்கு எல்லாம் வெளிச்சம் தரும் நிலா... ஆனால் எனக்கு மட்டும் கருப்பு நிலா." அவனது வார்த்தைகளில் அவள் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தாள்.

"என் வாழ்க்கையைக் கருப்பாக்கி விட்டுப் போன கருப்பு நிலா." சற்றுக் கோபமாய்க் கூறியவனின் வார்த்தைகள் அவளது இதயத்தைச் சென்று சரியாகத் தாக்கியதில் அவளது இதயம் இரத்த கண்ணீர் வடித்தது.

"அன்னைக்குப் பிச்சைக்காரனா, பரதேசியா உன் கண்ணுக்கு தெரிஞ்ச நான்... இன்னைக்கு மட்டும் எப்படிடி கோடீஸ்வரனா தெரியறேன்? அன்னைக்கு உனக்குப் பொருத்தம் இல்லாதவன்... இன்னைக்கு உன் தங்கைக்கு எப்படிடி பொருத்தமானவன் ஆனேன்?" என்று ஆக்ரோசத்துடன் கேட்டவனைக் கண்டு அவளது தவிப்பு அப்படியே அடங்கிப் போனது.

இந்தக் கணம் அவள் தவித்தாலோ அல்லது நெகிழ்ந்தாலோ இதுநாள் வரை அவள் அவனிடம் காட்டி வந்த பாராமுகம் எல்லாம் வீணாகி போய்விடும். அவனுக்குத் துளி சந்தேகம் வந்தாலும் போதும்... அவன்

அவளை வசப்படுத்தி விடுவான். அதனால் அவள் மனதினை கடினப்படுத்திக் கொண்டவள் முகத்தையும் கல்லாய் இறுக்கமாய் வைத்து கொண்டாள்.

"பணம்... எல்லாம் பணம் படுத்தும் பாடு, அப்படித் தானே? நீ சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் என் காதுக்குள் இன்னமும் ஒலிச்சிக்கிட்டே தான் இருக்கு. அது தான்டி நான் இந்தளவுக்கு உயர காரணம். எதைக் காரணம் காட்டி அது இல்லைன்னு என்னை வேண்டாம்ன்னு நீ சொன்னியோ... அதைத் தேடி என்னை ஓட வச்சது உனது வார்த்தைகள். அப்போ நீ நிராகரிச்ச நான் இப்போ உன் வீட்டு மாப்பிள்ளையா உன் கண்முன்னாடி நிற்கிறேன். வாழ்க்கை ஒரு வட்டம் என்பது சரியா தான் இருக்கு." என்று எகத்தாளத்துடன் கூறியவனைத் தைரியமாகக் கையமர்த்தித் தடுத்தவள்,

"வாழ்க்கை ஒரு வட்டம் இல்லை மிஸ்டர். விஸ்வஜித். நான் எப்போதும் போல் மேலே தான் இருக்கிறேன். இப்போ கூட உங்களால் என் அளவுக்கு வர முடியலை. வரவும் முடியாது. அப்புறம் என்ன சொன்னீங்க? எங்க வீட்டு மாப்பிள்ளையா வந்துட்டீங்கன்னா... எஸ், அதை முழுமனசோட ஒத்துக்கிறேன். உங்களால் என் தங்கைக்குத் தான் மாப்பிள்ளையா வர முடிஞ்சது. ஆனா எனக்கு இல்லை. அதிலேயே உங்களோட நிலை என்னன்னு உங்களுக்குப் புரிஞ்சிருக்கணுமே." என்று அவனுக்குச் சற்றும் குறையாத எகத்தாள குரலில் கூறியவள்,

"என்ன தான் உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகிட முடியாது மிஸ்டர்... நான் நான்தான். நீங்க நீங்கதான். என் நிழலை தொட கூட உங்களுக்கு அருகதை இல்லை. புரிஞ்சிருக்கும்ன்னு நினைக்கிறேன்." என்க...

துளசியின் ஆணவ பேச்சில் அந்த ஆறடி ஆண்மகனின் முகம் அவமானத்தில் கருத்துப் போனது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 6

விஸ்வஜித்தின் முகத்தைப் பார்த்த துளசிக்கு சற்று வருத்தமாகத் தான் இருந்தது. அவனைக் காயப்படுத்திப் பார்க்கும் எண்ணம் அவளுக்குச் சிறிதும் இல்லை. ஆனாலும் அவளுக்கு வேறுவழியில்லை. அவள் இப்படி எல்லாம் பேசினால் தான் அவன் அவளை விட்டு விலகி போவான். போக வேண்டும். அவனது மனக்காயத்தைக் காலம் மெல்ல ஆற்றும். இல்லை என்றால் அபிநயா அவனது மனக்காயத்தை ஆற்றுவாள். அவளுக்குத் தங்கை மீது நம்பிக்கை இருக்கிறது.

"என் ஒட்டுமொத்த சொத்துக்களோட மதிப்பு என்னன்னு உங்களுக்குத் தெரியுமா மிஸ்டர். விஸ்வஜித்?" என்று அவனிடம் கேட்டவளின் பார்வை தூரத்தில் தெரிந்த கடலை வெறித்தது.

"அந்தக் கடலுக்கு எல்லை இல்லாதது போல் என் சொத்துக்களின் மதிப்பும் எல்லை இல்லாதது. அதில் இருந்து ஒரு துளி தான் நான் அபிக்கு கொடுக்கிறேன்." என்றவள் திரும்பி அவனைப் பார்த்தாள்.

"இப்போது உங்களுக்குப் புரிந்திருக்குமே... உங்களின் தகுதி என்ன என்று?" அலட்சிய பாவனையுடன் கேட்டவளை உறுத்து விழித்தவன் பின்பு வாய்விட்டு நகைத்தான். அதைக் கண்டு அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறியது.

"நான் ஒண்ணும் ஜோக் அடிக்கலை மிஸ்டர்..." அவள் கோபத்துடன் சீறினாள்.

"வாழ்க்கையில் உன் அளவுக்கு நான் பணக்காரனா இல்லாது இருக்கலாம். ஆனால்...?" என்று நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தவன்,

"உன்னுடன் தொழிலில் இணைந்து பணியாற்றும் அளவுக்கு என்னுடைய தொழில் வளர்ந்திருப்பது நினைத்து எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு. இப்போ நீயும், நானும் சரிசமம். அதாவது தொழிலில்..." என்று

அழுத்தம் திருத்தமாய்க் கூறியவனைக் கண்டு துளசியின் அலட்சிய பாவனைச் சிறிதும் மாறவில்லை.

அவளது அலட்சிய பாவனைக் கண்டு அவனது மனம் கொந்தளித்தது. அவன் மேலே பேசும் முன் அபிநயா அங்கு வந்து சேர்ந்தாள்.

"இன்னும் பேசி முடிக்கலையா?" என்று கேட்டபடி அவள் அங்கு வந்து அமர்ந்தாள்.

"இன்னும் ஆரம்பிக்கவே இல்லை. நீ வந்த பிறகு பேசலாம்ன்னு இருந்தேன். இப்போ நீ வந்துட்ட... நாம பேசலாம்." என்று அபிநயாவை பார்த்து புன்னகையுடன் கூறியவனைக் கண்டு துளசியின் மனம் கனத்தது. ஆனால் இது தான் தனக்கு நிரந்தரம் என்று எண்ணியவளாய் அவள் தன்னைத் தேற்றி கொண்டாள்.

சிறிது நேரம் அவர்கள் தொடங்கும் தொழில் பற்றிப் பேச்சு வார்த்தை நடந்தது. முதலில் ஈடுபாடு இல்லாது இருந்த அபிநயா மற்ற இருவரது தொழில் பக்தியில் தன்னையும் அறியாது அவர்களது பேச்சை கவனிக்க ஆரம்பித்தாள்.

"உணவு பொருட்களில் பதப்படுத்துவதற்காகக் கெமிக்கல் சேர்க்கிறதில் எனக்கு உடன்பாடு இல்லை. அதனால் தான் ரெடி டூ ஈட் ப்ராடெக்ட்க்கு உங்களை மாதிரி எல்லா ஊர்களிலும் கேட்டரிங் சர்வீஸ் வைத்திருப்பவர்களைத் தேர்ந்தெடுத்தேன். இன்னைக்குச் செஞ்ச உணவு பொருள் குறைஞ்சபட்சம் ஒரு வாரம் கெடாதவாறு இருந்தால் போதும். அந்த மாதிரியான உணவு பொருட்களை நாம் சந்தைப்படுத்தினால் போதுமானது. நமக்குப் பொருளோட தரம், சுவை, அளவு, விலை இது தான் முக்கியம். கஸ்டமர்ஸ் திருப்தி அதை விட முக்கியம்." தேர்ந்த வணிகனாய் பேசிய துளசியைக் கண்டு விஸ்வஜித்தால் மனதிற்குள் மெச்சாது இருக்க முடியவில்லை. அவன் தனது மனஸ்தாபத்தை மறந்து அவளைப் பிரம்மிப்பாய் பார்த்தான்.

"நிச்சயம் நீங்க நினைக்கிற மாதிரி கொடுக்கலாம். பொள்ளாச்சி பக்கம் ராமசேரி என்கிற ஊரில்

தயாரிக்கப்படும் இட்லி ஒரு வாரம் வரைக்கும் கெடாது இருக்கும். இவ்வளவு ஏன் முன்பு ஹோட்டல்கள் அதிகம் இல்லாத காலத்தில் எல்லோரும் கட்டுச்சோறு கட்டிக்கிட்டு போவாங்க. அந்தக் கலவை சாதங்கள் ஒரு வாரம் வரை கெடாது இருக்கும். இதையே நாம நடைமுறைப்படுத்தலாம். எதையும் சுத்தமாகச் செய்தால் உணவு கெடாது இருக்கும்." என்று அவன் அவளது கூற்றை ஏற்றுக் கொண்டான்.

"அப்போ ஓகே... நாங்க பேக்கிங் பண்றது, மார்கெட்டிங் பண்றது எல்லாம் பார்த்துக்கிறோம். நீங்க உணவு தயாரிப்பது மட்டும் பார்த்துக்கிட்டால் போதுமானது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனியே யுனிட் போடணும். பெரிய மாவட்டமா இருந்தால் இரண்டு அல்லது மூன்று யுனிட் போடலாம். உங்களுக்கு லேபர் ப்ராப்ளம் என்றால்... அதை எங்க கிட்ட விட்டிருங்க. நாங்களே உங்களுக்குத் தேவையானது எல்லாம் கொடுக்கிறோம்."

"என் பக்கம் எந்தப் பிரச்சனையும் இல்லை. உங்க பக்கம் இருந்து பிரச்சனை வராது இருந்தால் சரி." அவன் இரு பொருள்படக் கூறியபடி துளசியைக் கூர்மையாகப் பார்த்தான்.

"என் பக்கம் இருந்து எந்தப் பிரச்சனையும் வராது." என்றாள் அவள் வெடுக்கென்று...

"பாதியில் விட்டு விட்டு போகும் குணம் எனக்கு இல்லை." என்றான் அவனும் பதிலுக்குச் சளைக்காது...

அதைக் கேட்டு துளசி அவனை முறைத்து பார்த்தாள். அவனும் பதிலுக்கு முறைத்தான். இருவரும் சண்டை கோழிகளாய் சிலிர்த்துக் கொண்டு நின்றனர். இருவரையும் மாறி மாறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அபிநயா,

"போதும், போதும்... பிசினஸ் பேச்சு போதும். எனக்கு ரொம்பப் பசிக்குது." என்று வயிற்றைத் தடவியபடி பாவமாகக் கூற...

"வா, போகலாம்..." என்றபடி விஸ்வஜித் எழுந்தான். அவனுடன் அபிநயாவும் எழுந்தாள். துளசி எழாது அமைதியாக அமர்ந்திருந்தாள். அவளுக்கு உள்ளே செல்ல விருப்பம் இல்லை. ஒரே அறைக்குள் விஸ்வஜித் அருகில் இருப்பது அவளுக்குப் பெரும் அவஸ்தையாக இருந்தது.

"துளசி, நீ வரலையா?" அபிநயா கேட்க...

"எனக்குப் பசிக்கலை அபி. கிளம்பும் போது கூப்பிடு." என்று அவள் மறுத்துவிட...

விஸ்வஜித் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு அமைதியாகச் சென்றுவிட்டான். அவனைப் பின்தொடர்ந்து அபிநயாவும் சென்றுவிட்டாள். இருவரும் இணைந்து செல்வதைப் பார்த்தபடி இருந்த துளசியின் மனம் கலங்கியது. இந்தக் கலக்கம், தவிப்பு எல்லாம் வாழ்நாள் முழுவதும் தொடரும் என்றே அவளுக்குத் தோன்றியது. விதி செய்த சதியில் அவளும், அவளது காதலும் மாண்டுவிட்டது. அதை மீண்டும் உயிர்ப்பிக்க அவள் விரும்பவில்லை.

பௌர்ணமி வெளிச்சத்தில் வெள்ளிப்பாளமாய் ஜொலித்த கடலை பார்த்தபடி எவ்வளவு நேரம் அவள் அமர்ந்திருந்தாளோ, அது அவளுக்கே தெரியவில்லை. திடுமென அவளது அலைப்பேசி அழைத்தது. அபிநயா அவளை அழைத்திருந்தாள்.

"சொல்லு அபி..."

"இங்கே வா துளசி." என்று அபிநயா அழைக்க...

"எதுக்கு?"

"கல்யாண விசயம் பத்தி பேச தான்..." அபிநயா கூறியதும் துளசியின் இதயம் ஒரு நொடி நின்று துடித்தது.

'அவ்வளவு தானா? எல்லாம் முடிந்ததா?' அவளது மனம் துயரத்தில் விடாது புலம்பியது.

'பத்து வருடங்களுக்கு முன் எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்தவளுக்கு இப்படிப் புலம்பும் தகுதி இல்லை.' அவளது மனசாட்சி அவளைக் குற்றம் சாற்றியது.

'என் விஷ்ஹ எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும்ன்னு நினைச்சு தான் அப்படிச் செய்தேன். இப்பவும் அவன் நல்லா இருக்கணும். அது தான் எனக்கு வேணும். என் காதலை விட எனக்கு அவன் தான் முக்கியம்' அவள் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு எழுந்தாள்.

துளசி அங்குச் செல்லும் போது எல்லோரும் சிரித்துப் பேசி கொண்டிருந்தனர். எல்லோரின் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. முக்கியமாக வேதா எதையோ சாதித்தது போல் கர்வமாக அமர்ந்திருந்தார்.

"கூப்பிட்டீங்களாமே?" என்று கேட்டபடி துளசி அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

"அதுக்கு முன்னே இந்த ஸ்வீட்டை சாப்பிடுங்க." என்ற விஸ்வஜித் குலோப்ஜாமூன் கிண்ணத்தை அவள் முன் கொண்டு வைத்தவன் இயல்பு போல் அவள் அருகில் அமர்ந்து கொண்டான். அவனது செய்கையில் அவள் தான் விதிர்த்து போனாள். சட்டென்று தள்ளியமர முடியாது. அது பார்ப்பவர்களின் விழிகளை உறுத்தும். அதனால் இயல்பாய் இருப்பது போல் அவள் புன்னகைத்து வைத்தாள்.

"சாப்பிடுங்க..." என்று விஸ்வஜித் அவளை வற்புறுத்த...

வேறுவழியின்றி அவள் குலோப்ஜாமூனை எடுத்து வாயில் போட்டு கொண்டாள். அவள் குலோப்ஜாமூன் உண்பதை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான் விஸ்வஜித். இருவரது மனதிலும் கடந்தகால இனிமையான நினைவுகள் வலம் வந்தது. கடைவாயில் வழிந்த சீனிப்பாகை அவள் நாசுக்காய் கைக்குட்டையில் ஒற்றிக் கொள்ள... அவனது பார்வை அவளது ஒவ்வொரு செய்கையையும் உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்தது. அவனது பார்வையில் அவள் லஜ்ஜையுற்றாலும் வெளியில்

அதைக் காட்டி கொள்ளாது அலட்சிய பாவனையுடன் அமர்ந்திருந்தாள். தான் அவளைச் சிறிதும் பாதிக்கவில்லை என்பதை அறிந்த விஸ்வஜித் மனதிற்குள் கொதிகலனாய் கொதித்துக் கொண்டிருந்தான். தான் மட்டும் ஏன் அவள் அருகாமையில் தடுமாறுகின்றோம்? என்று அவன் உள்ளுக்குள் தன்னைத் தானே அர்ச்சித்துக் கொண்டான். தனது கோபம் அனைத்தையும் அவளிடம் காட்ட எண்ணியவனாய் அவன்,

"வெல் மிஸ். துளசி... இன்னமும் மிஸ் தானே?" என்று நக்கல் குரலில் கேட்க...

"அதில் உங்களுக்கு என்ன சந்தேகம்?" அவள் அடக்கப்பட்ட கோபத்தில் சீறினாள்.

எல்லோரும் இருவரையும் பயத்துடன் பார்த்தனர். வேதாவோ சுவாரசியமாய் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

"நீங்க அபிக்கு அக்கா... இன்னமும் உங்களுக்குத் திருமணமாகலை என்றால்... அது நம்பும்படியாக இல்லையே?" அவன் தாடையைத் தடவியபடி அவளைக் கேலியாய் பார்த்தான். அவள் பதில் பேசாது அவனை உறுத்து விழித்தாள்.

"ஒருவேளை காதல் தோல்வியோ?" அவனது நக்கல் அதிகரித்துக் கொண்டே போனது.

"அது உங்களுக்குத் தேவை இல்லாதது மிஸ்டர்..." துளசி சிடுசிடுத்தாள்.

"அதெப்படி தேவை இல்லாததுன்னு நீங்க சொல்வீங்க? நாளைக்குக் கல்யாண வீட்டில் என் சொந்தக்காரங்க கேள்வி கேட்பாங்களே... அதுக்கு நாங்க தான் பதில் சொல்லியாகணும். இல்லைன்னா ஒருவழி இருக்கு. ரொம்பச் சிம்பிள், நீங்க கல்யாணம் பண்ணிக்கோங்க. மாப்பிள்ளை வேணும்ன்னா எங்க சொந்தத்தில் நானே பார்த்து தர்றேன்."

"என்ன... கூப்பிட்டு வச்சு அசிங்கப்படுத்துறியா?" அவள் மெல்ல அவன் காதிற்குக் கேட்கும்படி கோபத்துடன் முணுமுணுத்தாள்.

"நீ என்னை அசிங்கப்படுத்தியதை விடவா?" அவனும் ரகசிய குரலில் கடுப்படித்தான்.

"அதுக்காக... ஒரு பொண்ணை இப்படித்தான் கேவலப்படுத்துவியா?"

"நிச்சயமா... எனது தன்மானத்தில் நீ குறி பார்த்து அடிக்கும் போது... நான் உன் பெர்சனலில் ஏன் தலையிட கூடாது. பெண்ணுக்கு ஒழுக்கம் என்றால்... ஆணுக்கு அவனது தன்மானம் முக்கியம். இரண்டுமே சீண்டப்பட்டால் விளைவுகள் இப்படித்தான் இருக்கும்?" என்று அவளிடம் சீறியவன்,

"எப்போதுமே நீ தான் ஆரம்பித்து வைக்கிற... நான் முடித்து வைக்கிறேன். அவ்வளவே..." என்று அசால்ட்டாகத் தோள்களைக் குலுக்கியவனை அவள் எரித்துவிடுவது போல் பார்த்தாள்.

"விச்சு..." விசாலம் மகனை அதட்டினார். அதில் அவன் சற்று அடங்கினான்.

"ஒரு பொண்ணைத் தேவை இல்லாம இப்படிப் பேசுறது ரொம்பத் தப்பு விச்சு. முதலில் நீ துளசி கிட்ட மன்னிப்பு கேளு." விசாலம் கறார் குரலில் கூற...

அன்னை மன்னிப்பு கேட்க சொன்னதும் அவனது முகம் விழுந்துவிட்டது. அவன் பேசியது தவறு என்று அவனது அறிவுக்கு எட்டிய போதும், அவனது காயமடைந்த மனம் அதை ஏற்றுக் கொள்ளத் தவறியது. அதன் விளைவு தான் அவன் அவளைக் காயப்படுத்தியது. அவன் தன் தவறு உணர்ந்து மன்னிப்பு கேட்க வாயெடுக்கும் முன்,

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்மா... இந்த மாதிரி பேச்சுக்கள் எல்லாம் எனக்குச் சகஜம் தான். அன்றாடம் இது மாதிரி நிறையப் பேச்சுக்களைச் சந்திக்கிறேன். அது போல்

இவரும் பேசுகிறார். பேசிவிட்டு போகட்டும். இதனால் எனக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. நீங்க பேசி முடிச்சிட்டு வாங்க. நான் வந்ததே பிசினஸ் பேசத்தான். அது பேசி முடிச்சாச்சு. நான் கிளம்பறேன்." என்றவள் தனது கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

கதவு வரை சென்றவள் பின்பு திரும்பி விஸ்வஜித்தை நேர்ப்பார்வை பார்த்து, "என்னைப் பற்றித் தெரியணும், அவ்வளவு தானே... சொல்றேன், கேட்டுக்கோங்க. நான் ஒரு விதவை. என்னைப் பற்றிய விவரம் போதுமா?" என்று கேலி குரலில் கேட்டவள் அவனது முகம் இருள் அடைந்து போனதை கண்டு மனம் குளிர்ந்தவளாய் அங்கிருந்து வேகமாய் வெளியேறினாள்.

விஸ்வஜித் திகைப்புடன் அமர்ந்திருந்தான் என்றால்... வேதாவோ அதிர்ச்சியில் அசைய மறந்து அமர்ந்திருந்தார். துளசியிடம் இருந்து இத்தகைய வார்த்தைகளை அவர் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 7

துளசி கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் காதுகளில் ஒலித்ததில் விஸ்வஜித் வேதனையுடன் விழிகளை மூடி கொண்டான். உண்மையில் அவள் விதவை தானா? அவனது மனதினை பெருத்த வேதனை போட்டு அரித்தது. அவள் மீதிருந்த அவனது கோபம் எங்கே சென்றது? என்று அவனுக்குத் தெரியவில்லை. அவனது மனதில் கடந்த காலம் படமாய் விரிந்தது. கல்லூரி மாணவியாய் சின்னஞ்சிறு சிட்டாய் சிறகடித்துப் பறந்த துளசியை இப்போதும் மனக்கண்ணில் கண்டவனாய் அவனது உதடுகளில் புன்னகை தவழ்ந்தது.

அதே நேரம் வேதா துளசியை நிறுத்தி வைத்துக் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார். துளசியோ அமைதியாக அதைக் கேட்டு கொண்டிருந்தாள்.

"உன் மனசில் என்ன நினைச்சிக்கிட்டு இருக்க? மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கிட்ட உன்னை நீயே விதவைன்னு சொல்லிக்கிட்டு வந்திருக்க. இப்போ எல்லோரும் உன் புருசன் பெயர் என்ன? எங்களுக்கு எல்லாம் தெரியாம எப்படி, எப்போ கல்யாணம் நடந்தது? நீங்க நடத்தி வச்சதா? இல்லை, ஓடி போய்க் கல்யாணம் பண்ணிக்கிட்டாளா? இப்படி ஆயிரத்தெட்டுக் கேள்விகள் கேட்டு என்னைத் திணற அடிக்கப் போறாங்க. உனக்கு என்ன? நீ பாட்டுக்கு சொல்லிட்டு போயிருவ. அப்புறம் அவஸ்தைப்படுறது நான் தானே..." புடவை தலைப்பை கொண்டு அவர் மூக்கை உறிஞ்சினார்.

"விதவைங்கிற ஒத்த வார்த்தையில் எல்லாம் முடிஞ்சு போயிருச்சு. அதை யாரும் கேள்வி கேட்டு கிளற மாட்டாங்க. அப்படிக் கேள்வி கேட்கிறவங்களை என் கிட்ட அனுப்புங்க. நான் பதில் சொல்லிக்கிறேன்." என்று நிமிர்வாகக் கூறியவள் தனது அறையை நோக்கி சென்றாள். வேதா எரிச்சலுடன் அவளைப் பார்த்திருந்தார்.

குளித்து விட்டு வந்த துளசி தூக்கம் வராது பால்கனியில் வந்து நின்றாள். வானில் வலம் வந்த பௌர்ணமி விஸ்வஜித்தின் நினைவுகளை அவளிடத்தில் தூவி சென்றது. காலம் கடந்து, வயது கடந்து எப்படி எல்லாம் கொண்டாடப்பட வேண்டிய காதல் அவர்களுடையது. நன்றாகச் சென்று கொண்டிருந்த காதல் வாழ்க்கைக்கு அவள் தான் முடிவுரை எழுதினாள். அப்படி முடிவுரை எழுத வேண்டிய சூழலுக்கு அவள் தள்ளப்பட்டாள். கடந்த காலம் அவளது மனதில் சுகமாய் வெண்சாமரம் வீசியது. அது அவளது ரணப்பட்ட மனதிற்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது.

"விஷூ..." அவளது இதழ்கள் காதலோடு அவனது பெயரை உச்சரித்தது.

பத்து வருடங்களுக்கு முன்பு...

இருபாலர்கள் படிக்கும் கல்லூரி அது... அதிலிருந்த சிற்றுண்டி விடுதியை விஸ்வஜித்தின் தந்தை அறிவழகன் எடுத்து நடத்தி கொண்டிருந்தார். அதிலிருந்து வந்த வருமானம் அவர் குடும்பம் நடத்துவதற்குப் போதுமானதாக இருந்தது. விஸ்வஜித் அதே கல்லூரியில் எம்பிஏ கடைசி வருடம் படித்துக் கொண்டிருந்தான். காலை, மாலை இருவேளைகளில் அவன் தனது தந்தைக்கு உதவியாக இருப்பான். அவனை அங்கு இருப்பவர்கள் அனைவருக்கும் தெரியும். அப்படி ஒருநாள் அவன் அங்கு வேலை செய்து கொண்டிருக்கும் போது ஒரு மேசையைச் சுற்றி கல்லூரி மாணவிகள் அமர்ந்து கொண்டு, நின்று கொண்டிருந்த ஒரு மாணவியிடம் ஏதோ கேட்டு கொண்டிருந்தனர். அவள் பயத்தில் பேந்த பேந்தவென விழித்தாள். சீனியர் மாணவிகள் ஜூனியர் மாணவியை ராகிங் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது. ஏனோ அவனுக்கு அந்தச் சிறு பெண்ணைப் பார்க்க பாவமாக இருந்தது. அதனால் விஸ்வஜித் அவர்களை நோக்கி வந்தான்.

"என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க?" என்று அவன் அங்கு வந்து சத்தம் போட்டான்.

கல்லூரியில் சிற்றுண்டி விடுதி வைத்து நடத்துவதால் அவனுக்குக் கல்லூரி முதல்வர் வரை செல்வாக்கு இருந்தது. அதனால் அந்த மாணவிகள் அவனைக் கண்டு மரியாதை கலந்த பயத்துடன் எழுந்து நின்றனர்.

"அது வந்து சீனியர் சார்..." என்று அவர்கள் அனைவரும் இழுத்தனர்.

"எதுவாக இருந்தாலும் இந்த மாதிரி ராகிங் பண்றது தப்பு." என்று அவர்களைச் சத்தம் போட்டு அனுப்பி வைத்தவன் அந்தப் பெண்ணிடம் திரும்பினான்.

"காலேஜுக்கு புதுசா?" அவனது கேள்விக்கு ஆமென்பது போல் அவள் தலையசைத்தாள்.

"இனி இப்படி எல்லாம் தனியா வந்து மாட்டிக்கக் கூடாது. எங்கேயாவது போகணும்ன்னா உன் கிளாஸ்மேட் கூடப் போகணும். என்ன புரிஞ்சதா?"

"புரிஞ்சது சார்..." அவள் மெல்ல முணுமுணுக்க...

"காலையில் சாப்பிட்டியா?"

"ம்ஹூம்..." என்று அவள் மறுப்பாய் தலையசைத்தாள்.

"இங்கே உட்கார்..." என்று அவளை நாற்காலியில் அமர வைத்துவிட்டு சென்றவன் திரும்பி வரும் போது சூடான வடை மற்றும் கெட்டி சட்னியை கொண்டு வந்து அவள் முன் வைத்தான்.

"சாப்பிடு..." என்று கனிவோடு கூற...

"தேங்க்ஸ் சீனியர் சார்." என்றவள் வடையை எடுத்து உண்ண ஆரம்பித்தாள்.

விஸ்வஜித் அப்போது தான் அவளை உன்னிப்பாகக் கவனித்தான். மாநிறத்தில், சற்று பூசினார் போன்ற

உடல்வாகுடன், கள்ளங்கபடமற்ற குழந்தை குமரியாய் இருந்தவள் அவனையும் அறியாது அவனது மனதில் பசை போட்டு ஒட்டி கொண்டாள்.

அப்போது சென்ற சீனியர் பெண்களில் ஒருத்தி திரும்பி அங்கு வந்தாள். அவளைக் கேள்வியாகப் பார்த்தவன்,

"என்ன?" என்று அதிகாரமாய் வினவ...

"என்னோட நோட்டை விட்டுட்டு போயிட்டேன்." என்றவள் அங்கு அமர்ந்து வடையை உண்டு கொண்டிருந்தவளை முறைத்து பார்த்தாள். அவள் இவளை கண்டு கொண்டால் தானே... அவள் கைக்கும், வாய்க்குமாய்ச் சண்டையிட்டு கொண்டிருந்தாள்.

"எதுக்கு இந்தப் பெண்ணை முறைக்கிற?" விஸ்வஜித்திற்குக் கோபம் வந்தது.

"சார், இந்தப் பொண்ணு எங்க கிட்ட சீனியர்ன்னு சொல்லி இப்படித்தான் வடையை வாங்கி மொக்கிட்டு எங்களை ஏமாத்திட்டாள். இப்போ பாருங்க, ஒண்ணுமே தெரியாத பாப்பா மாதிரி இருக்கிறத."

விஸ்வஜித் அமர்ந்திருந்தவளை அதிர்வுடன் பார்த்தான். அவளோ நிதானமாக டிஷ்யூ பேப்பர் கொண்டு கையையும், வாயையும் துடைத்தவள்,

"நான் ஒண்ணும் தெரியாத பாப்பான்னு உன் கிட்ட வந்து சொன்னேனா? நீயா நினைச்சிக்கிட்டா அதுக்கு நான் பொறுப்பாக முடியாது." என்று சீனியரை பார்த்து தெனாவெட்டாகக் கூறியவள் விஸ்வஜித்தை பார்த்து,

"உங்க வடைக்குத் தேங்க்ஸ் சீனியர் சார்." என்று நன்றி கூறினாள். சிறு பெண்ணிடம் தான் பல்பு வாங்கியதை கண்டு அவன் எரிச்சலுடன் நின்றிருந்தான். தனது உடைமைகளை எடுத்துக் கொண்டு வகுப்பறைக்குக் கிளம்பியவள் பின் நின்று,

"சீனியர் சார், எப்போதும் பாத்திரம் அறிந்து பிச்சை போடுங்க." என்று கண்சிமிட்டி அவனைக் கேலி செய்துவிட்டு சிட்டாகப் பறந்துவிட்டாள். அவளது பேச்சில் அவனது கோபத்தை மீறி அவனது உதடுகளில் புன்னகை தவழ்ந்தது.

"சார், அவளை விட்டுட்டீங்களே..." சீனியர் பெண் கூற...

"எங்கே போயிற போகிறாள்? இங்கே தானே படிக்கப் போகிறாள். பிறகு பார்த்து கொள்கிறேன்." என்றவன் தனது வகுப்பறைக்குக் கிளம்பினான்.

அன்றிரவு கல்லூரியில் நடந்ததை எல்லாம் தனது தந்தை வரதராஜனிடம் கூறி சிரித்துக் கொண்டு இருந்தாள் துளசி. அவரும் அவளது குறும்புத்தனத்தைக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார்.

"துளசி, இப்படி எல்லாம் செய்யக் கூடாது. அந்தப் பையன் நல்ல பையனா இருக்கப் போய் உன்னை எதுவும் பண்ணலை. இதே இது கெட்டவனா இருந்தால்? பொம்பளை புள்ள பார்த்து பத்திரமா இருக்கணும்." வேதா கண்டிப்புடன் கூற...

"என் பொண்ணு ஆயிரம் பையனுக்குச் சமம்டி." வரதராஜன் மகளுக்காக மனைவியிடத்தில் பரிந்து பேசினார்.

"அதெல்லாம் நான் பத்திரமா இருப்பேன்ம்மா..." என்று சிணுங்கிய துளசி தந்தையின் கன்னத்தில் முத்தமிட்டு,

"குட்நைட்ப்பா..." என்று கூறிவிட்டு தனது அறைக்குச் சென்றுவிட்டாள்.

"அபி தூங்கிட்டாளா?" என்று கேட்டபடி இரவு விளக்கை அணைத்தார் வரதராஜன்.

"ம்..." என்று பதில் உரைத்தபடி மறுபக்கம் வந்து படுத்தார் வேதா.

அடுத்த நொடி வரதராஜனின் கரங்கள் மலைப்பாம்பு போல் அவரைச் சுற்றி வளைத்துக் கொண்டது. கடந்த பதினாறு

வருடங்களாக இந்தக் கைச்சிறையில் இருந்து தப்பிக்க நினைக்கிறார். ஆனால் அதற்கான வழி தான் தெரியவில்லை அந்தப் பேதைக்கு. எப்போதும் போல் இயந்திர தன்மையுடன் கணவனை எதிர்கொண்டார் வேதா. அது எதுவும் வரதராஜனின் கவனத்தில் பதியவில்லை. சில நிமிடங்களில் அவருக்குத் தேவையானது கிடைத்துவிட்ட திருப்தியில் அவர் மனமகிழ்வுடன் மனைவியை விட்டு விலகினார். வேதா விழிகளில் இருந்து விழிநீர் வடிய அப்படியே படுத்திருந்தார். அவரது இயலாமை எல்லாம் கோபமாக உருவெடுத்தது. அது வரதராஜனை பாதிக்காது, துளசியைப் பாதித்தது தான் கொடுமையிலும் கொடுமை.

மறுநாள் கல்லூரிக்கு செல்வதற்காகக் கிளம்பி கொண்டிருந்தாள் துளசி. அவளை அழைத்துச் செல்வதற்காகக் கார் தயாராக நின்று கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த வேதா வீட்டில் கணவன் இல்லாததை உறுதி செய்து கொண்டு,

"துளசி, நீ காலேஜுக்குப் பஸ்சில் போ. எனக்கு லேடிஸ் கிளப்பில் முக்கியமான மீட்டிங் இருக்கு." என்க... அவளும் வெள்ளந்தியாய் சரியென்றுவிட்டு கிளம்பி சென்றாள்.

"மல்டி மில்லியனர் மகளைப் பஸ்சில் போக வச்சிட்டேன். இப்ப தான் எனக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு. வாழ்க்கை என்னை வஞ்சித்ததை எல்லாம் அப்படியே துளசிக்குத் திருப்பிக் கொடுக்கப் போகிறேன். மகள் படுகிற வேதனையைப் பார்த்து மிஸ்டர். வரதராஜன் வேதனைப்பட்டு இரத்த கண்ணீர் வடிக்கணும். அதை நான் பார்த்து சந்தோசப்படணும்." என்று தனக்குள் சூளுரைத்துக் கொண்டார் அவர்.

அவரது பழிவாங்கலுக்குச் சின்னஞ்சிறு குருத்து ஒன்று மோசமாகப் பலியாகப் போவதை அப்போது அவர் அறிந்திருக்கவில்லை. மனித மனதின் குரூரம் அவனது உச்சக்கட்ட கோபத்தில் வெளிவரும். அதன் விளைவு அவனே கற்பனை செய்து பார்த்திராத ஒன்றாக இருக்கும்.

மனிதனுள் உறங்கும் மிருகம் அப்பபடிப்பட்ட கொடூர குணமுடையது.

துளசி கல்லூரியில் காலடி எடுத்து வைத்ததும் அவள் விஸ்வஜித்தின் பார்வையில் அகப்பட்டுக் கொண்டாள். அவனைக் கண்டும் காணாத மாதிரி அவள் அவனைக் கடந்து செல்ல... அவனது கோபம் எல்லையைக் கடந்து சென்றது. அவன் கோபத்துடன் அவள் பின்னேயே ஓடியவன் மூச்சிரைக்க அவள் முன்வந்து நின்று அவளைக் கை நீட்டி தடுத்தான். அவளோ நிற்காது அவனது கையைத் தட்டிவிட்டு செல்ல எத்தனிக்க...

"ஏய், குந்தாணி... நில்லுடி." அவ்வளவு தான் நம் பெண் சிங்கம் வீரமாய்ச் சிலிர்த்துக் கொண்டது.

"டேய், யாரை பார்த்துடா குந்தாணின்னு சொல்லுற?" என்று தான் அணிந்திருந்த குர்தியின் முழுக்கையை மடக்கி விட்டுக் கொண்டு அவனைப் பார்த்து கத்தினாள்.

"உன்னைத் தான்டி சொல்றேன்." அவனும் பதிலுக்குக் கத்தினான்.

"என்னைப் பார்த்தா குந்தாணி மாதிரியா இருக்கு?" அவள் கோபமாய் மூச்சு வாங்கினாள்.

"நல்லா குத்துபோணி சைசில் இருந்துக்கிட்டுப் பேச்சை பார்." என்று அவளது பூசின தேகத்தைப் பார்த்து கிண்டல் அடித்தவன்,

"நேத்து சாப்பிட்ட வடைக்கான காசை கொடுத்துட்டு போ." என்று தனது வலக்கையை அவள் முன் நீட்டினான்.

"அதெல்லாம் கொடுக்க முடியாது." என்று அலட்சியமாகக் கூறியவள் அங்கிருந்த செல்ல முயற்சிக்க...

அதைத் தடுக்க நினைத்த விஸ்வஜித் தனது கை கொண்டு அவளைப் பிடிக்க முயன்றான். அந்தோ பரிதாபம்! அவளைப் பிடிக்க நினைத்தவனின் கைகள் அவளது குர்தியை பிடித்து இழுத்துவிட்டது. பருத்தியினாலான

குர்தியின் சிறு பகுதி கிழிந்து அவனது கையோடு வந்துவிட்டது. துளசி திகைப்புடன் அவனைத் திரும்பி பார்த்தாள். அவனுமே இதை எதிர்பார்க்கவில்லை. அவனும் திகைப்புடன் அவளைப் பார்த்தான். விழிகள் கலங்க அவனைப் பார்த்தவள் அடுத்தக் கணம் அங்கே நிற்க விரும்பாது ஓடிவிட்டாள்.

விஸ்வஜித் மனதில் அவளது கலங்கிய விழிகளே எழுந்து அவனைப் பெரிதும் இம்சித்தது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 8

"துளசி..."

தந்தையின் குரலுக்குப் படுத்திருந்த துளசி எழுந்து அமர்ந்தாள். வரதராஜன் அவளது நெற்றியில் கை வைத்து பார்த்தார். சூடு எதுவும் இல்லாது சாதாரணமாக இருந்தது. பின்பு எதற்காகக் கல்லூரி செல்லாது இரண்டு நாட்களாக மகள் வீட்டில் இருக்கிறாள் என்று தெரியாது அவர் குழம்பி போனார்.

"உடம்பு சரியில்லையா? ஏன் காலேஜ் போகலை?"

கல்லூரியில் நடந்ததைத் தந்தையிடம் கூற அவளுக்குத் தைரியம் இல்லை. கூறினால், அதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும். இந்த விசயத்தில் முழுக்க முழுக்க அவள் மீது தான் தவறு. அவன் மீது எந்தத் தவறும் இல்லை. அவளது உடையைக் கிழித்தது தவிர... அதுவும் தற்செயலாக நடந்த ஒன்று தான். அவளது உடை கிழிந்ததில் அவள் அதிர்ந்ததை விட அவன் தான் அதிகம் அதிர்ந்து போய் நின்றான். அது அவனது விழிகளிலேயே தெரிந்தது. ஏனோ அவனைக் காட்டி கொடுக்க மனம் இல்லாது அவள் அமைதியாக இருந்தாள்.

வேதா துளசியைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். இரண்டு நாட்களுக்கு முன் துளசி கிழிந்த உடையைக் குப்பை தொட்டியில் போட்டதை அவர் பார்த்துக் கொண்டு தான் இருந்தார். நல்ல அன்னையாக இருந்தால் ஏன், எதனால்? என்று அவளிடம் கேள்விகள் கேட்டு இருக்க வேண்டும். ஆனால் அவரோ அதைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை. ஏதோ சம்பவம் நடந்து இருக்கிறது என்பது மட்டும் அவருக்குத் தெரிந்து இருந்தது. அதை இப்போது கூறி உடனே அதை நமுத்துப் போகச் செய்ய அவருக்கு விருப்பம் இல்லை. பிரச்சனை பெரிசாகி வெடிக்க வேண்டும். மகளால் வரதராஜன் சமூகத்தின் முன் தலைகுனிய வேண்டும். அது தான் அவருக்கு

வேண்டியிருந்தது. அதனால் சாணக்கியத்தனமாக அமைதி காத்தார்.

"துளசி, பதில் சொல்லும்மா..." மீண்டும் வரதராஜன் கேட்க...

"என்னங்க இது, கேள்வி கேட்டுக்கிட்டு? வயசு பொண்ணுக்கு ஆயிரம் பிரச்சனைகள் இருக்கும். அதை எல்லாம் உங்க கிட்ட சொல்லிக்கிட்டு இருக்க முடியுமா?" என்ற வேதாவை துளசி நன்றியுடன் பார்த்தாள்.

"அப்படியா துளசி?"

"ஆமா, ஆமாப்பா..." தடுமாறியபடி பதில் கூறினாள் துளசி.

"டாக்டரை வர சொல்லவா?" வரதராஜன் மகளது தலையை வாஞ்சையுடன் வருடி கொடுத்தார்.

"இல்லைப்பா... இன்னைக்கு ஒருநாள் ரெஸ்ட் எடுத்தால் சரியாகிரும்."

"ஓகேடா... டேக் கேர்." என்று அவளது நெற்றியில் முத்தமிட்டு விட்டு அவர் கிளம்ப... வேதா துளசியைப் பார்த்தபடி வெளியேறினார்.

இருவரும் சென்றதும் துளசி சுருண்டு படுத்து கொண்டாள். அந்தச் சம்பவம் அவளுக்குப் பெருத்த அதிர்ச்சியாக இருந்ததால் அவள் கல்லூரிக்கு செல்லவில்லை. நாளைக்குக் கட்டாயம் கல்லூரி செல்ல வேண்டும் என்று மனதிற்குள் நினைத்து கொண்டாள். ஐயோ, அங்கே அவனைப் பார்க்க வேண்டுமே? எப்படி அவன் முகத்தில் விழிப்பது? என்று அவள் தனக்குள் கேள்வி கேட்டபடி தூங்கி போனாள்.

விஸ்வஜித் இரண்டு நாட்களாகத் துளசியைத் தேடி தேடி சலித்துப் போய்விட்டான். இந்த இரண்டு நாட்களில் அவன் அவளது பெயர், எந்தப் பாடப்பிரிவு என்பதைத் தெரிந்து கொண்டது தான் மிச்சம். அவளை மட்டும் கண்களில் காண முடியவில்லை. அவனுக்கு மிகவும் பயமாக இருந்தது. அவள் பயந்து போய் வேறு எதுவும் தவறான முடிவுக்குச்

சென்று இருப்பாளோ? என்று. இரண்டு நாட்களும் அவனுக்குப் பெரும் அவஸ்தையுடன் சென்றது.

மூன்றாவது நாள் துளசி புத்தம் புது மலராகக் கல்லூரியில் காலடி எடுத்து வைத்ததைக் கண்டவனின் முகம் அப்படியே மகிழ்ச்சியில் மலர்ந்து போனது. தான் அவளை இந்த அளவிற்குத் தேடி இருக்கிறோமா? என்று அவனுக்கே தன்னைக் குறித்து வியப்பாக இருந்தது. நேரே அவளை நோக்கி ஓடி வந்தான். அவனது வருகையைக் கண்ட துளசி உள்ளுக்குள் மிரண்டாலும் வெளியில் தைரியமாக இருப்பது போல் காட்டி கொண்டாள்.

"துளசி..."

'என்னுடைய பெயர் இவனுக்கு எப்படித் தெரியும்?' என்று மனதிற்குள் நினைத்தபடி அவள் அவனைப் பார்த்திருந்தாள்.

"சாரி துளசி... அன்னைக்கு ஏதோ தெரியாமல்..." அவன் மீண்டும் உடை கிழிந்ததைப் பற்றிப் பேசவும் அவளுக்குச் சற்றுச் சங்கோஜமாக இருந்தது. அதனால் அவனது முகம் பார்க்க முடியாது அவள் அவனைச் சுற்றிக் கொண்டு ஓடிவிட்டாள்.

அவனோ அவள் கோபித்துக் கொண்டு செல்கிறாள் என்று நினைத்தபடி செய்வதறியாது திகைத்து நின்றான். அவள் அவனை மன்னிக்காது அவனால் நிம்மதியாக இருக்க முடியாது என்பது அந்த நொடி அவனுக்குத் தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது. இயல்பிலேயே அவன் கெட்டவன் இல்லையே. அடுத்தடுத்து அவன் அவளைச் சந்தித்துப் பேச முயற்சித்தது எல்லாம் வீணாகி போனதில் அவன் மிகவும் சோர்ந்து போனான்.

ஒரு வார காலமாக விஸ்வஜித் அவளின் பின்னால் அலைந்ததில் அவளைப் பற்றி அவன் நிறைய விசயங்கள் தெரிந்து கொண்டான். முக்கியமாக அவளது அக அழகை கண்டு அவன் பிரமித்துப் போனான். கல்லூரியில் துப்பரவு செய்யும் பெண்மணி தனது கைக்குழந்தையுடன்

வந்திருந்தாள். அதற்கு உடம்பு சரியில்லை போலும். அந்தப் பெண்மணியை வேலை செய்ய விடாது அந்தக் குழந்தை நை நை என்று அழுது கொண்டிருந்தது. அங்கு வந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் அனைவரும் அந்தப் பெண்மணியைக் கடிந்தனர்.

"குழந்தையை வீட்டில் விட்டுட்டு வர வேண்டியது தானே." என்று... அந்தப் பெண்மணி செய்வதறியாது திகைத்த போது ஆபத்பாந்தவனாய் துளசி அவருக்கு உதவ முன் வந்தாள்.

"அக்கா, குழந்தையை என்னிடம் கொடுங்க. நான் பார்த்துக்கிறேன்." என்று கேட்டபடி கை நீட்டி குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

"உனக்குக் கிளாஸ் இருக்குமே பாப்பா." அந்தப் பெண்மணி தயங்க...

"ஒருநாள் போகலைன்னா ஒண்ணும் ஆகிறாது. நீங்க வேலையை முடிச்சிட்டு வந்து குட்டி கண்ணனை வாங்கிக்கோங்க." என்றவள் அங்கிருந்த மரத்தடியில் அமர்ந்து குழந்தையுடன் விளையாட துவங்கி விட்டாள். குழந்தையும் அவளைக் கண்டு புன்னகைத்தபடி தாயை மறந்து அவளிடம் ஒன்றிக் கொண்டது.

சிறிது நேரத்தில் குழந்தை துளசியின் மடியில் உறங்கிவிட... அதன் பிறகு துளசிக்கும் என்ன செய்வது என்று தெரியவில்லை. அதனால் அவளும் மரத்தண்டில் சாய்ந்து உறங்க ஆரம்பித்தாள். இதை எல்லாம் சற்று தள்ளி நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தான் விஸ்வஜித். மடியில் குழந்தையோடு தானும் ஒரு சிறு குழந்தையாய் மாறி துயின்று கொண்டிருந்தவளின் பிம்பம் அவனது மனதில் அழியாது ஆழப்பதிந்து போனது. அழுக்கான குழந்தையைச் சிறிதும் அருவருப்பு இல்லாது அவள் தூக்கி கொஞ்சியது அவனுக்குப் பெரும் வியப்பாக இருந்தது. தள்ளி நின்று பார்த்து கொண்டிருந்தவன் பின்பு வகுப்பிற்கு நேரமானதை உணர்ந்து அங்கிருந்து அகன்றான். அவனது உடல் தான் அங்கிருந்து சென்றதே

தவிர, அவனது உள்ளம் அவளிடத்திலேயே மையம் கொண்டிருந்தது.

ஒருநாள் விரிவுரையாளர் ஒருவர் விடுப்பு எடுத்திருந்த காரணத்தால் சீனியர் மாணவன் என்கிற முறையில் விஸ்வஜித் துளசியின் வகுப்பை கண்காணிக்கச் சென்றிருந்தான். இன்னும் சில நாட்களில் பரீட்சை தொடங்குவதால் அனைவரையும் படிக்கச் சொன்னவன் தானும் ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு அமர்ந்தான். திடுமென ஏதோ உள்ளுணர்வு உந்த அவன் நிமிர்ந்து பார்த்தான். மூன்றாவது வரிசையில் அமர்ந்து கொண்டு தன்னையே பார்த்திருந்த துளசியைக் கண்டதும் அவனது முகம் மலர்ந்து போனது. அவனுக்கு நேர்மாறாய் அவளது முகம் கூம்பி போயிருந்தது. அவனை முறைத்தபடி அவள் அமர்ந்திருந்தாள்.

அவன் விழிகளால் அவளிடம் மன்னிப்பை யாசித்தான். அவளோ அதைக் கண்டு கொள்ளாது இருந்தாள். அவன் மெல்ல தனது உதடுகளை அசைத்து 'S...O...R...R...Y' என்று ஒவ்வொரு வார்த்தையாக உச்சரித்து அவளிடம் மன்னிப்பை வேண்டினான். அதற்கும் அவளிடம் இருந்து எந்தப் பிரதிபலிப்பும் இல்லை என்றதும் அவன் சோர்ந்து போனான்.

'ப்ளீஸ்' என்று அவன் விழிகள் சுருங்க, உதடுகள் குவித்துக் கெஞ்சியது கண்டு திகைத்து போன துளசியின் மனதில் பெருத்த சலனம். அவனது விழிகளில் வழிந்த பாவம் அவளை என்னமோ செய்தது. ஆனாலும் அவன் செய்த தவறு அவள் கண்முன் நின்று அவனைக் கண்டு உதட்டை சுழிக்க வைத்தது. அதைக் கண்டு அவன் மனம் நொந்து போனான். தான் செய்த தவறுக்கு மன்னிப்பே கிடையாதா? என்று...

மீண்டும் அன்று மாலை விஸ்வஜித் துளசியைக் கூடைப்பந்து மைதானத்தில் தனியே சந்தித்தான். ஒவ்வொரு முறையும் கையில் இருந்த பந்தை கூடைக்குள் போட முயன்று அவள் தோற்று கொண்டிருந்தாள். அதைக்

கண்டு அவனுக்குச் சிரிப்பாக இருந்தது. நேரே அவள் அருகே வந்தவன் அவளை அலேக்காகத் தூக்கி,

"இப்போ பந்தை போடு." என்க... அவளோ அவனது கரங்களில் அவஸ்தையுடன் நெளிந்தாள். அவளது இடையில் பதிந்திருந்த அவனது கரங்கள் அவளுள் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது.

"என்னைக் கீழே இறக்கி விடுடா." என்று அவள் அவனது பிடியில் இருந்து திமிற...

"பந்தை போட தானே இந்தப் பாடு படுற. இப்போ ஈசியா போடலாம். ம், போடு." என்று அவன் ஊக்குவிக்க... வேறுவழியின்றி நொடியில் பந்தை கூடைக்குள் போட்டவள்,

"இறக்கி விடு." என்று கெஞ்சும் குரலில் கூற...

அவனோ கெஞ்சும் அவளை வியப்புடன் பார்த்தபடி கீழே இறக்கிவிட்டான். அப்போது தான் அவனுக்குமே அந்தப் பேதம் புரிந்தது. அவளது இளமை அழகு அவன் தேகத்தோடு தேகமாய் உரசி சென்றதில் அவன் மேகமாய் லேசாக மாறி உல்லாச வானில் ஊர்வலம் சென்றான். முதன்முறையாக அவன் உணர்ந்த பெண்ணவளின் ஸ்பரிசம் அவன் உயிர் வரை சென்று தீண்டியது. அவளுக்கும் அதே நிலை தான் போலும். அங்குக் கீழே கிடந்த தனது பையை எடுத்துக் கொண்டு அவனைத் திரும்பியும் பார்க்காது ஓடிவிட்டாள். அவன் புன்னகையுடன் தலையைக் கோதியபடி அவளைப் பார்த்திருந்தான். புரிந்தும் புரியாத ஒருவித புதுமையான மனநிலையில் அவன் இருந்தான்.

மறுநாள் துளசி விஸ்வஜித்திடம் நூலகத்தில் வைத்து வசமாகச் சிக்கி கொண்டாள். அந்தப் பெரிய நூலகத்தில் மாடியில் ஏதோ ஒரு மூலையில் மேல் பகுதியில் இருந்த புத்தகத்தை எடுக்க அவள் முயற்சித்துக் கொண்டிருந்த வேளையில் அவள் முன் பிரசன்னமானான் விஸ்வஜித். அதுவரை துள்ளி குதித்துப் புத்தகத்தை எடுக்க

முயற்சித்துக் கொண்டிருந்தவள் அவனைக் கண்டதும் அமைதியாக நின்றாள்.

"ஏய், உன் மனசில் என்ன தான்டி நினைச்சிக்கிட்டு இருக்க?" தான் அணிந்திருந்த முழுக்கை சட்டையை மடித்து விட்டபடி கோபத்துடன் அவளை நோக்கி நெருங்கினான் அவன். அவனது கோபம் கண்டு திகைத்தவள் விழி விரிய அப்படியே பின்னால் நகர்ந்தாள்.

"ஒரு மனுசன் எத்தனை தடவை தான் மன்னிப்பு கேட்டு நாயா உன் பின்னாடி அலையறது?"

அதற்குப் பதில் கூறாது அவள் அச்சத்தில் எச்சிலை விழுங்கியபடி நின்றிருந்தாள். அவளது அச்சத்திற்கும் காரணம் இருந்தது. ஏனெனில் அவளது இருபக்கமும் புத்தக அலமாரி இருந்தது. அவளுக்குப் பின்பக்கம் சுவர் தடுத்தது. அவளது முன்னே விஸ்வஜித் நின்றிருந்தான். அதனால் அவளால் அங்கிருந்து தப்பித்துப் போக முடியாது.

"நானும் போனால் போகுதுன்னு பார்க்கிறேன். ரொம்பத்தான் துள்ளுற. என்னை மன்னிச்சு ஏத்துக்கிறதில் அப்படி என்ன கஷ்டம் உனக்கு?"

"உங்களை மன்னிச்சு ஏத்துக்கிட்டு நான் என்ன பண்ண?" அவள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவனைப் பார்த்து கேட்டாள்.

"என்ன பண்ணவா? என்னலாமோ பண்ணலாம்." என்றவனின் குரல் திடுமெனக் குழைந்தது. அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள்.

"முதல்ல என்னை ஏத்துக்கோ... அதுக்கு அப்புறம் என்ன பண்ணலாம்ன்னு நான் சொல்றேன்." அவளது விழிகளை ஊடுருவியபடி அவன் கூற...

"ம், ம்... ரொம்பக் கெஞ்சி கேட்பதால் போனால் போகுதுன்னு உன்னை ஏத்துக்கிறேன்." அவள் கூறியதும் அவனது விழிகளில் மின்னல் வெட்டியது.

"இப்போ சொல்லு... என்ன பண்ணுவ?" அவள் மிடுக்காக அவனைப் பார்த்து கேட்க...

"காலம் முழுவதும் உன்னை என் குழந்தை மாதிரி பார்த்துக்குவேன். அன்னைக்கு அந்தக் குழந்தையை நீ பார்த்துக்கிட்ட மாதிரி." அவனது வார்த்தைகளில் அவளது விழிகள் கலங்கி போனது.

எந்த ஆண்மகனும் கூறாத வார்த்தைகள் இது. பெண்ணவளை காணும் ஆணிடத்தில் முதலில் மோகம் தான் தலைவிரித்து ஆடும். ஆனால் இவனோ தாய்மை உணர்வோடு அவளைப் பார்க்கின்றான். நெஞ்சம் எல்லாம் நேசத்தில் பொங்க... அவள் பெரும் விம்மலோடு அவனது நெஞ்சில் தஞ்சம் புகுந்தாள். அவளது செயலை நம்ப முடியாது பார்த்தவன் மெல்ல அவள் புறம் குனிந்து,

"இது லைப்ரேரி துளசி." என்று தாங்கள் இருக்கும் சூழலை அவளுக்கு ஞாபகப்படுத்தினான். கலங்கிய விழிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவனை விட்டு விலகி நின்றவள் அவனை நிமிர்ந்து பார்க்க வெட்கம் கொண்டாள்.

"இதேது வேறு இடமாக இருந்தால் நடப்பதே வேறு." அவனது வார்த்தைகளில் அவனை ஏறிட்டு பார்த்தவளின் முகம் வெட்கத்தில் செவ்வானமாய்ச் சிவந்து போனது.

அப்போது மணி அடிக்கும் சத்தம் கேட்டது. அவள் பதட்டத்துடன், "ஐயோ, கிளாசுக்கு நேரமாச்சு." என்க...

"சரி, போ..." என்றபடி அவன் வழிவிட்டான். அவள் அவனைத் தாண்டி செல்ல... அவன் அவளது கைப்பிடித்துத் தடுத்து நிறுத்தினான்.

"என்ன?"

"புக் வேண்டாமா?" என்று கேட்டவன் அவள் எடுக்கக் கஷ்டப்பட்ட புத்தகத்தை மிகவும் எளிதாக எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"தேங்க்ஸ்." என்றபடி திரும்பியவள் பின்பு ஒரு நொடி யோசித்துவிட்டு மீண்டும் அவன் புறம் திரும்பி,

"உன் பெயர் என்ன?" என்று கேட்க... அதைக் கேட்டு முதலில் திகைத்தவன் பின்பு,

"விஸ்வஜித்..." என்றான் அழகான புன்னகையோடு...

தொடரும்...!!!

## அத்தியாயம் : 9

"அம்மா..." காரில் இருந்த அபிநயா வெளியில் பார்த்தபடி உரக்க கத்தினாள்.

"எதுக்குடி இப்படிக் கத்துகிற? பேசாம அடங்கி உட்காரு." வேதா எரிச்சலுடன் மகளை அடக்கினார். உச்சி வெயிலில் சாலையின் வாகன நெரிசலில் கார் சிக்கக் கொண்டதில் அவர் கடுப்பாகி இருந்தார். காரின் ஏசியில் இருந்து வந்த குளுமை கூட அவரைக் குளிர்விக்கவில்லை.

"அம்மா, துளசி..." என்று மீண்டும் அபிநயா கூவ... துளசி என்றதும் வேதாவின் விழிகள் கூர்மை அடைந்தது.

"எங்கேடி?"

"அதோ அங்கே..." மகள் கை காட்டிய திசையில் பார்த்த வேதா திகைத்துப் போனார்.

அங்கே சாலையோரம் இருந்த இளநீர் கடையில் இளநீர் வாங்கிக் குடித்துக் கொண்டிருந்தாள் துளசி. அவள் தனியே இளநீர் வாங்கிக் குடித்துக் கொண்டிருந்தால் இந்தளவிற்கு அவர் திகைத்து இருக்க மாட்டார். ஒரு இளநீரில் இரண்டு உறிஞ்சு குழாய் போட்டு, ஒரு இளைஞனுடன் சிரித்துப் பேசியபடி அவள் இளநீர் குடித்துக் கொண்டிருந்தது கண்டு வேதா கடும் கோபம் கொண்டார். அதுவும் அந்த இளைஞனின் அழகு அவரைக் கொதிப்படைய செய்தது.

'கருவாச்சிக்கு வந்த வாழ்வை பாரேன்.' அவர் மனதிற்குள் நக்கலாய் நினைத்துக் கொண்டார்.

"அம்மா, அக்கா லவ் பண்றாளா?" அபிநயா தனது சந்தேகத்தை அன்னையிடம் கேட்க...

"அது எதுக்கு உனக்கு? பேசாம இரு." என்று அவர் மகளை அடக்கினார்.

"மாமா, சூப்பரா இருக்காரும்மா. என்னா அழகு..." என்று அவள் விஸ்வஜித்தை புகழ்ந்து பேசினாள்.

"வாயை மூடுடி கழுதை." அவர் மகளை அடக்கவும், வாகன நெரிசல் சரியாகவும் சரியாக இருந்தது. வேதா துளசியைப் பார்த்தபடி காரை எடுத்தார்.

வீடு வரும் வரை அவர் பெருத்த யோசனையுடன் வந்தார். வீட்டின் முன் காரை நிறுத்தியவர் இறங்க போன மகளின் கையைப் பிடித்துத் தடுத்தார்.

"என்னம்மா?"

"இந்த விசயம் நமக்குள் இருக்கட்டும். அப்பாவுக்குத் தெரிய வேண்டாம்."

"சரிம்மா." தந்தை சகோதரியை அடித்து விடுவாரோ என்றெண்ணி அவள் அதற்குச் சம்மதித்தாள்.

"துளசி கிட்டேயும் இதைப் பத்தி கேட்க கூடாது."

"எதுக்கும்மா?" அபிநயாவுக்கு அழகான மாமாவை பற்றி அக்காவிடம் கேட்க நிறையக் கதைகள் இருந்தது.

"அவளுக்குச் சர்பரைஸ் கொடுக்கத் தான்." என்று புன்னகையுடன் கூறிய அன்னையை அபிநயா முழுவதும் நம்பினாள். ஆனால் வேதாவின் திட்டமோ வேறு மாதிரியாக இருந்தது.

கடைசிவரை அபிநயாவால் துளசியிடம் அவளது மாமாவை பற்றிக் கேட்க முடியாது போனது. துளசி திருமணமே வேண்டாம் என்று தனிமரமாக இருக்க முடிவு செய்த போது அபிநயாவால் அவளிடம் அவளது காதலை பற்றிப் பேச முடியவில்லை. காதல் கொடுத்த காயத்தால் தான் துளசி இப்படி மாறி போனாளோ? என்று அபிநயாவுக்குச் சந்தேகமாக இருந்தது. பதினைந்து வயதில் பார்த்த விஸ்வஜித் உருவம் அபிநயாவின் ஞாபகத்தில் இருந்து மறைந்து போனது. இப்போது அன்னை அவளிடம் விஸ்வஜித்தின் புகைப்படத்தைக் காட்டிய போது அவளுக்குச் சுத்தமாய் ஞாபகம் இல்லை. அது வேதாவிற்கு மிகவும் வசதியாகி போனது.

என்சிசி முகாமிற்குச் சென்றுவிட்டு திரும்பிய துளசி விஸ்வஜித்தின் கைகளைப் பற்றியபடி கண் கலங்க அமர்ந்திருந்தாள். ஒரு வார காலமாக மலை கிராமம் ஒன்றிற்கு என்சிசி மாணவர்கள் சென்றிருந்தனர். அதில் துளசியும் அடக்கம். ஏற்கெனவே அதில் அனுபவம் பெற்றவன் என்கிற முறையில் விஸ்வஜித் ஒருங்கிணைப்பாளராய் அவர்களுடன் இணைந்திருந்தான். இந்த ஒரு வாரமும் எப்படிப் போனது? என்று கேட்டால் துளசிக்குத் தெரியாது. சேவை நேரம் போக மீதியிருந்த நேரம் முழுவதும் அவள் விஸ்வஜித்துடன் இருந்தாள். நள்ளிரவில் யாருக்கும் தெரியாது வெளிவந்து பௌர்ணமி நிலவின் ஒளியில் அவனுடன் கதை பேசிய பொழுதுகளை அவளால் மறக்க முடியாது. இப்படிப் பொக்கிசமாய்ப் பாதுகாக்க கூடிய பொழுதுகளைச் சுமந்து கொண்டு சந்தோசமாய் வந்தவள் இப்போது பிரிவு என்கிற துயர் தாங்காது கண் கலங்கி போனாள்.

"எதுக்குடி கண் கலங்கிற?" விஸ்வஜித் அவளிடம் கேட்க...

"இப்போ பரீட்சை முடிஞ்சதும் லீவு விட்டுருவாங்க. அதுக்குப் பிறகு நாம எப்போ சந்திக்கிறது?"

"இதே சென்னையில் தான் நீயும், நானும் இருக்கப் போகிறோம். நினைச்சப்போ எல்லாம் நாம சந்திச்சுக்கலாம்." என்று அவன் அவளைத் தேற்றினான்.

"அப்படி எல்லாம் முடியாது. நான் வெளியில் வர்றதுக்கு எங்கப்பா காரணம் கேட்பார்."

"ஓ... அப்போ சரி. நாம தினமும் ஃபோனில் பேசிக்கலாம்."

"ம்... ஓகே." என்றவள்,

"ஏனோ தெரியலை விஷூ... மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு. அழுகை அழுகையா வருது." என்றவள் எந்நேரமும் வெடித்துச் சிதற தயாராக இருக்கிறாள் என்பதை அவளது கண்களில் கரை கட்டியிருந்த கண்ணீர் கூறியது.

"ப்ச், நீ இப்படி வருத்தப்பட்டா எனக்கும் வருத்தமா இருக்கு துளசி." என்றவன் அவளை இயலாமையுடன் பார்த்தான். அவளை அணைத்து, முத்தமிட்டு ஆறுதல் கூற அவனது மனம் துடித்தது. ஆனால் இருவரது வயது கருதி அவன் அமைதி காத்தான். இருவருக்குமே அதற்கான வயதும் இல்லை, பக்குவமும் இல்லை என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்.

"இல்லை விஷ்ணு... நான் வருத்தப்படலை. இங்கே பார்... நான் சிரிச்சுட்டேன்." என்று கூறியபடி அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு அவள் அவனைக் கண்டு புன்னகைக்க... அதில் அவன் தன்னையே தொலைத்தான்.

"இப்போ தான் என் துளசி அழகா இருக்கிறாள்."

"போ விஷ்ணு... நீ பொய் சொல்ற. நீ தான் அழகு. உன்னோட கம்ப்பேர் பண்ணும் போது நான் சுமார் தான்." அவனது கையோடு தனது கையை ஒட்டி வைத்தபடி அவள் கூறினாள். அவளுக்கு அவனது சிவந்த கரத்தின் முன் அவளது மாநிற கை அழகின்றிக் காணப்பட்டது.

"என் துளசி மனசு அழகு. அது எந்தப் பெண்ணிடத்திலும் இல்லை." அவன் அவளது அக அழகில் உருகி போனான். அவனது காதலில் அந்த நொடி மரித்தால் கூட மகிழ்ச்சியாக மரித்துப் போவாள் துளசி. அவள் மனம் நெகிழ அவனைப் பார்த்திருந்தாள்.

அதன் பிறகு வந்த நாட்கள் அவளுக்குப் பரீட்சையில் சென்றது என்றால், அவனுக்கு நேர்முகத் தேர்வு, பரீட்சை என்று விரைவாகச் சென்றது. கல்லூரி விடுமுறையில் அவர்கள் இருவரும் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் அமையாது போனது. ஆரம்பத்தில் அவளோடு அலைப்பேசியில் பேசி கொண்டிருந்தவன் பிறகு அவளிடம் பேசவும் இல்லை. அவள் பேசவில்லை என்பதே சரியாக இருக்கும். அவளிடம் இருந்து ஒரு குறுஞ்செய்தி மட்டுமே வந்தது. தான் உலகச் சுற்றுலா செல்வதால் வந்து பேசுவதாக... அவன் சிறு கவலையுடன் அதைப் பார்த்தவன் பின்பு 'டேக் கேர் அன்ட் என்ஜாய்' என்று பதிலுக்குக் குறுஞ்செய்தி அனுப்பி

வைத்தான். அவனுக்கு அவளது பெயர் மட்டுமே தெரியும். அவளது தந்தை பற்றியோ, அவளது உயரம் பற்றியோ அவனுக்குத் தெரியாது. கடைசிவரை அவன் அதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படவே இல்லை.

விடுமுறை முடிந்து கல்லூரி தொடங்கும் நாள் விஸ்வஜித் சந்தோசமாகக் கல்லூரிக்கு கிளம்பி சென்றான். அவனது படிப்பு முடிந்தாலும் துளசியைக் காண்பதற்காகவே அவன் அங்குச் சென்றான். அவளைப் பார்க்க போகும் சந்தோசம் அவனிடத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது. காலையில் கல்லூரி சென்றவன் எப்போதும் போல் தனது தந்தைக்கு உதவி செய்யப் போனான். துளசி கல்லூரி வர இன்னமும் நேரமிருந்தது. அப்போது அங்கு வந்த அவனது தந்தை,

"விச்சு, வடை போட ஆள் இல்லை." என்று கூற...

"அதனால் என்னப்பா... நான் போடுறேன்." என்றவன் தனது சட்டையைக் கழற்றி அங்கிருந்த ஆணியில் மாட்டிவிட்டு எண்ணெய் சட்டி முன் வந்தமர்ந்தான்.

வெகு லாவகமாக அதே சமயம் விரைவாக அவன் வடையைத் தட்டி போட்ட அழகை பார்த்து ரசித்த அவனது தந்தை,

"விச்சு, கொஞ்சம் இங்கே இருந்து பார்த்துக்கோ. நான் இப்போ வந்திர்றேன்." என்க...

"சரிப்பா..." என்றவன் தனது வேலையில் கவனமானான்.

வடை எல்லாம் போட்டு முடித்தவன் கடைசி ஈடு வடையை எண்ணெய் சட்டியில் சுட்டுக் கொண்டிருந்தான். அப்போது,

"விஷூ..." என்ற குரல் கீச்சிட்டது. அது யாரென்பதை உணர்ந்தவனாய் அவன் மகிழ்ச்சியோடு திரும்பி பார்த்தான்.

"வா துளசி..." அவன் விரிந்த புன்னகையுடன் அவளை வரவேற்க...

"இங்கே என்ன பண்ற?" அவனது முகத்தில் தெரிந்த மகிழ்ச்சிக்கு நேர்மாறாய் அவளது முகம் அருவருப்பில் சுளித்திருந்தது.

"பார்த்தா தெரியலை. வடை சுடுறேன்."

"அதான் ஏன்னு கேட்கிறேன்?" அவளது குரலில் தெரிந்த பேதத்தில் அவனது விழிகள் யோசனையாய்ச் சுருங்கியது. அந்நேரம் அவனது தந்தை உள்ளே வந்தார்.

"நீ போய் வெளியில் வெயிட் பண்ணு துளசி. இதோ நான் வந்திர்றேன்." என்று அவன் கூற... அவள் பதில் ஏதும் சொல்லாது சென்றுவிட்டாள்.

கல்லூரி மாணவர்கள் இது போல் உள்ளே வருவது சகஜம் என்பதால் அவனது தந்தை அவளைச் சந்தேகமாகப் பார்க்கவில்லை. வடையை எடுத்துத் தட்டில் போட்டவன் அடுப்பை அணைத்துவிட்டு சட்டையை அணிந்து கொண்டு கிளம்பினான். வெளியில் வந்தவனின் பார்வை மரத்தடியை அலசியது. ஓரமாக இருந்த மரத்தடியில் நின்றிருந்த துளசியைக் கண்டதும் அவனது முகம் மலர்ந்தது பின்பு அவளது பேச்சு ஞாபகம் வர அவனது முகம் யோசனையானது.

துளசி அருகில் வந்து பார்த்த போது அவளது தோற்றம் அவனுக்கு மிகவும் வித்தியாசமாய் இருந்தது. அவள் கருத்து, மெலிந்து பார்ப்பதற்கு எப்படியோ இருந்தாள்.

"துளசி, உடம்பு சரியில்லையா?" அவன் தனது யோசனையைத் தள்ளி வைத்துவிட்டு பதட்டத்துடன் கேட்டபடி அவள் அருகில் வர...

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை. நான் நல்லா தான் இருக்கேன்." என்றவள் அப்படியே பின்வாங்கினாள்.

"பொய் சொல்ல ஆரம்பிச்சிட்ட..." என்றவனின் பார்வை அவளைத் துளைத்தெடுத்தது.

"நீ சொன்ன பொய்யை விடவா?" அவள் அவனை உறுத்து விழித்தாள்.

"நான் என்ன பொய் சொன்னேன்?" அவன் புரியாது அவளைப் பார்த்தான்.

"நீ சமையல்க்காரன்னு ஏன் என் கிட்ட சொல்லலை." அவளது வார்த்தையில் அவன் அதிர்ந்து போனான்.

"சமையல் வேலை ஒண்ணும் கேவலம் இல்லை." தனது அதிர்வை மறைத்துக் கொண்டு ரோசமாய்க் கூறியவன்,

"நான் ஒண்ணும் பொய் சொல்லை. நான் இங்கே படிச்சேன். அதனால் நான் இங்கே படிக்கிறவன்னு உன் கிட்ட சொன்னேன். அதே போல் நீ சமையல்க்காரனான்னு கேட்டிருந்தால், ஆமாம்ன்னு சொல்லியிருப்பேன். இதை எதுக்கு நான் ஒளிச்சு மறைச்சு வைக்கணும். இந்தக் காலேஜ்க்கே இந்த விசயம் தெரியுமே."

"யாருக்கு தெரிந்தால் என்ன? நீ என் கிட்ட இதை முதலிலேயே சொல்லி இருக்கணுமா? வேண்டாமா?"

"சரி... அதுக்கு என்ன இப்போ? இப்போ தெரிஞ்சு போச்சு இல்லையா? என்ன செய்வதாய் உத்தேசம்?" அவன் இரு கரங்களைக் கட்டியபடி அவளைக் கூர்ந்து பார்த்தான். அவளும் சளைக்காது அவனது பார்வையைத் தாங்கி நின்றாள்.

"நாம பிரிஞ்சிரலாம்."

"என்ன சொன்ன? திரும்பச் சொல்லு?" அவன் கோபத்துடன் அவள் அருகில் வந்து அவளைப் பிடித்து உலுக்கினான்.

"ப்ச், என்னைத் தொடாதே. கேவலம், ஒரு சமையல்க்காரன் என்னைத் தொடுறது எனக்கு அருவருப்பா இருக்கு." அவளது வார்த்தைகளில் அவன் அதிர்ந்து போனவனாய் தனது கைகளைத் தானாக விலக்கினான்.

"நான் யார் தெரியுமா? பெரிய மல்டி மில்லியனரோட பொண்ணு. என் கால் தூசியைத் தொட கூட உனக்கு

அருகதை இல்லை."

"துளசி, நீயா இப்படிப் பேசுறது? சும்மா விளையாட்டுக்கு தானே இப்படிப் பேசுற." இப்போதும் அவனால் அவள் பேசியதை நம்ப முடியவில்லை.

"நான் தான் பேசுறேன். மறைக்காம உண்மையைச் சொல்லு. நான் பணக்காரின்னு தெரிஞ்சு தானே நீ என் பின்னாடி சுத்தின. லவ் பண்ணின மாதிரி நடிச்ச. உனக்கு வேண்டியது பணம் தானே. எவ்வளவு வேணும்ன்னு சொல்லு." என்றவள் தனது கைப்பையில் இருந்து காசோலையை எடுத்தாள்.

அதைக் கண்டவனின் காதல் மெல்ல மெல்ல மரணித்துக் கொண்டிருந்தது. கடைசியில் என்ன வார்த்தை சொல்லிவிட்டாள்? பாவி... அவனது மனம் கோபமாய்க் குமுறியது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 10

'போதும் நிறுத்து' என்பது போல் தனது கையை உயர்த்தித் துளசி பேசுவதைத் தடுத்தான் விஸ்வஜித். அவளது பேச்சில் அவனது தேகம் எல்லாம் அதிர்ந்தது. அவள் தன்னோடு காதலோடு பேசியது, பழகியது எல்லாம் பொய்யா? தனது காதலை அவள் கொஞ்சமும் உணரவில்லையா? அவளுக்காக உயிரையும் கொடுக்கத் துடிக்கும் அவனது காதல் அவளது கண்ணுக்கு தெரியவில்லையா? காதலுக்குக் கண் இல்லை என்பது மெய் தானோ? அதனால் தான் அவளது கண்ணுக்கு அவனது காதல் தெரியவில்லை போலும்.

"உண்மையைச் சொன்னால் கசக்கிறதா?" அப்போதும் அவள் அடங்காது எகிறினாள்.

"உன்னைப் பத்தி எனக்கு என்ன தெரியும்? துளசிங்கிற உன் பெயரை தவிர... உன்னை உனக்காக மட்டும் தான் நான் காதலித்தேன்." என்ன தான் அவள் மீது கோபம் இருந்த போதும் அவள் மீது கொண்ட காதல் அவனை நிதானம் இழக்க செய்யவில்லை.

"இது எல்லாம் நம்பும்படியாக இல்லை. நீ பார்த்தவுடன் கவர்ந்து இழுக்கும் அளவுக்கு எனக்குச் சிவப்பு தோல் இல்லை. நீ மயங்கும் அளவுக்கு நான் உலக அழகியும் இல்லை. அப்புறம் எதுக்காக நீ என்னைக் காதலித்தாய்?"

"துளசி நான்..." மேலே பேச முயன்றவனைக் கை நீட்டி தடுத்தவள்,

"அக அழகுன்னு பொய் சொல்ல போறியா? இதை நான் நம்பணுமாக்கும். உன்னை மாதிரி ஆண்களுக்கு இது தான் பிழைப்பு. பணக்கார பெண்ணைப் பார்த்து காதல் வலை வீசி காதலிப்பது போல் நடித்துப் படுக்கையில் அவளைச் சுகித்து விட்டு, அதை ஃபோட்டோ, வீடியோ எடுத்து மிரட்டி பணம் சம்பாதிப்பது..." மேலே அவள் பேசும் முன் அவன் அவளது கன்னத்தில் ஓங்கி அறைந்திருந்தான்.

"இதுக்கு மேல ஒரு வார்த்தை பேசாதே. உன் அந்தஸ்துக்கு ஒத்து வராத, உன் கால் தூசி பெறாத இந்தச் சமையல்க்காரனை பிடிக்கலைன்னா பிடிக்கலைன்னு சொல்லிக்கிட்டு போய்க்கிட்டே இரு. அதுக்காக என் காதலை கொச்சைப்படுத்தாதே."

அவனை ஒரு பார்வை பார்த்தவள் அங்கிருந்து விறுவிறுவெனச் செல்ல... அப்போது தான் அவள் தன்னை விட்டு பிரிந்து செல்வது அவனது புத்திக்கு உறைத்தது.

"துளசி, துளசி..." என்றபடி அவன் அவள் பின்னேயே சென்றான்.

அவள் முன் வந்து வழி மறுத்தார் போன்று நின்றவன் சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தான். அந்தக் கணம் அவன் தனது தன்மானத்தை எல்லாம் பார்க்கவில்லை. இருபத்திரண்டு வயது இளைஞனாய் அவன் தனது காதலுக்காகக் காதலி முன் மண்டியிட்டு காதலை யாசித்தான்.

"துளசி, நீயும், நானும் அப்படியா காதலிச்சோம். நீ என் உயிர்டி. நீ இல்லைன்னா நான் செத்து போவேன்டி. ப்ளீஸ், புரிஞ்சிக்கோ." என்று அவன் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான்.

அவளோ கொஞ்சமும் இரங்காது அவனைப் பார்த்தவள், "உன்னைக் கல்யாணம் பண்ணினா நான் செத்து போவேன். எனக்கு ஈக்குவல் ஸ்டேட்டஸ் இல்லாத உன்னை எப்படி நான் கல்யாணம் பண்றது? எங்க ஹை சொசைட்டி மக்கள் கிட்ட உன்னை எப்படி அறிமுகப்படுத்துறது? சாதாரணச் சமையல்க்காரன், கேன்டீன் வச்சுப் பிழைப்பு நடத்தறவன் என் கணவன் என்றா?" என்றவளது குரலில் அப்படியொரு எகத்தாளம் வழிந்தது.

"இது தான் உன்னுடைய பிரச்சனையா? எனக்குக் கொஞ்சம் டைம் கொடு. நான் உன்னளவுக்குப் பணக்காரனாகி காட்டுறேன்." என்றவனைக் கேலியாய் நோக்கியவள்,

"இது என்ன சினிமாவா? ஒரே பாட்டில் கோடீஸ்வரனாக மாறுவதற்கு... நடக்கிறதை பேசு." என்றவள் அவனது கையை உதறிவிட்டு சென்றாள்.

அவனோ செய்வதறியாது திகைத்து போய் அப்படியே மண்டியிட்ட வாக்கில் சிலையாய் சமைந்து இருந்தான். அப்போது அவனது தோள் மீது ஒரு கரம் வந்து படிந்தது. ஏறிட்டு பார்த்தவன் அங்குத் தனது தந்தையைக் கண்டதும்,

"அப்பா..." என்று அவரது கால்களைக் கட்டி கொண்டு கதறி அழுதான். அறிவழகன் கீழே அமர்ந்து மகனை தாயாய் மடி தாங்கி கொண்டார். அவன் அழுது முடிக்கும் வரை அவர் அமைதியாக இருந்தார்.

"இப்போ என்ன செய்யப் போகிற விச்சு?"

"தெரியலைப்பா..." அவனது வயதிற்கு அவனுக்கு அனுபவம் போதவில்லை.

"அந்தப் பொண்ணு மேல் கோபம் வருதா?" அவரது கேள்விக்கு அவன் ஆமென்பது போல் தலையாட்டினான்.

"அவள் முகத்தில் ஆசிட் அடிக்கணும், அவளைக் கொலை பண்ணணும்ன்னு வெறி வருதா?"

"அப்பா..." அவன் திகைத்து போய் அவரை நிமிர்ந்து பார்த்தான்.

"பதில் சொல்லு..."

"அவள் என் உயிர்ப்பா. அவளைக் கஷ்டப்படுத்திப் பார்க்க என்னால் முடியாது." அவனது விழிகள் கலங்கி சிவந்தது. அவளைக் கொன்றுவிட்டு அவன் எப்படி உயிர் வாழ்வான்?

மகனது பதிலில் தந்தையின் மனம் குளிர்ந்தது. தனது வளர்ப்புச் சோடை போகவில்லை என்று... அவனது தோளை மெல்ல தட்டி கொடுத்தவர்,

"இந்தக் காலத்து பிள்ளைங்க காதலுக்கு என்ன அர்த்தம்ன்னு தெரியாமலேயே காதலிக்கிறாங்க. அதனால்

தான் இப்போது உள்ள காதல் தோற்றுப் போகிறது. காதல் தோற்பது இல்லை. காதலர்கள் தான் தோற்றுப் போகிறார்கள். ஒரே நாளில் காதல், ஒரே நாளில் ப்ரேக்அப்... இன்றைய காதல் இது தான்." என்றவரை பார்த்து,

"நான் அப்படி இல்லைப்பா. அவளை உயிருக்கு உயிரா காதலிச்சேன்." என்றான் அவன் வேதனையோடு...

"அப்போ உன் அந்தஸ்தை உயிர்த்திக்கோ. இப்படிக் கோழை மாதிரி அழாதே."

"அப்பா..." அவன் திகைப்பாய் அவரைப் பார்த்தான்.

"அவள் நிலையில் இருந்து யோசித்துப் பார். அவளது வசதிக்கு உன்னைக் கல்யாணம் பண்றது என்பது அத்தனை எளிதா?" அவன் இல்லை என்று தலையாட்டினான்.

"அவள் இடத்தில் உன் தங்கையை வைத்து பார். நம்மை விட வசதி குறைவான பையனை அவள் காதலித்தால் நாம அதுக்குச் சம்மதிப்போமா?"

"முதலில் கஷ்டமா தான் இருக்கும். ஆனா மதுவுக்காக அதை ஏத்துக்கலாம்ப்பா. வேணும்ன்னா அந்தப் பையனுக்கு நாம ஏதாவது செய்யலாம்."

"நமக்கே கஷ்டமா இருக்கும் போது, அவ்வளவு வசதியான பெண்ணின் தகப்பனுக்கு உங்க காதலை ஏற்க கஷ்டமா இருக்காதா?"

மகாபாரதத்தில் அர்ஜூனுக்குத் தக்க சமயத்தில் உபதேசம் செய்து தைரியமூட்டிய கிருஷ்ண பரமாத்மா போல் அவனது தந்தை அவனுக்குத் தக்க சமயத்தில் ஆறுதல் கூறித் தேற்றினார். அதில் தெளிவு பெற்றவன் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான முயற்சியில் இறங்கினான். அதற்காக அவன் துளசியை மறந்தான் இல்லை. அவனது மனதின் ஓரத்தில் அவளைப் பற்றிய நினைவுகள் கரையானாய் அரித்துக் கொண்டு இருந்தது.

அந்த வயதில் அவளது வார்த்தைகள் அவனுள் பெருத்த காயத்தை ஏற்படுத்தி இருந்தது. அவள் எதனால் இப்படி எல்லாம் பேசினாள்? என்று அவன் அவளது நிலையில் இருந்து சிறிதும் யோசிக்கவில்லை. பணத்தைப் பிரதானமாக எண்ணி கொண்டு அவள் தன்னை அம்போவென விட்டு விட்டு சென்றுவிட்டாள் என்கிற கோபம் மட்டுமே அவனது மனதில் இருந்தது.

அவனது தந்தை அறிவழகன் மகனது காதல் தோல்வியை மனைவி, மகளிடம் கூறவில்லை. அவரது மனதில் வைத்து ரகசியம் காத்தார். அதைக் கண்டு அவன் தந்தையை நன்றியோடு பூஜித்தான். காலம் மகனது மனதினை மாற்றி இருக்கும் என்று எண்ணி அவர் பல வருடங்கள் கழித்து அவனிடம் திருமணம் பற்றிப் பேசினார். அவனோ துளசியை மறக்க முடியாது என்று உறுதியாக மறுத்துவிட்டான். துளசியைப் பற்றி விசாரித்து அவளது வீட்டாரிடம் அவளை அவனுக்கு மணக்க கேட்கவா? என்று அவர் கேட்க...

"என்னை வேண்டாம்ன்னு சொல்லிட்டு போனவள் போனதாகவே இருக்கட்டும். மீண்டும் அவளைத் தேடி போய் அவமானப்பட வேண்டாம். இடைப்பட்ட காலத்தில் அவளுக்குக் கல்யாணமாகி இருக்கலாம். அவளது வாழ்க்கையில் என்னால் குழப்பம் வேண்டாம்ப்பா." என்று அவன் தெளிவாக உரைத்துவிட்டான்.

அதில் அவருக்கு வருத்தமே. ஆனாலும் மகனது மனம் புரிந்து அமைதி காத்தார். மகன் திருமணம் செய்யவில்லையே என்கிற குறையோடு தான் அவர் உயிர் நீத்தார்.

விஸ்வஜித்தை பிரிந்து வந்த துளசி முதலில் செய்தது அந்தக் கல்லூரியை விட்டு நின்றது. அதன் பிறகு அவளது வாழ்க்கை படிப்பு, தொழில் என்று விரைவாகச் சென்றது. விஸ்வஜித்தின் காதல் அவளது மனதில் அழியாத ஓவியமாகப் பதிந்துவிட்டது. அது கொடுக்கும் வலியை புறந்தள்ளிவிட்டு, அதை ரசிக்கப் பழகி கொண்டாள்.

அவனது காதலை போற்ற துவங்கினாள். அதனால் அவளுக்குக் காதல் வலியை தரவில்லை. மாறாக வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கும் தைரியத்தைக் கொடுத்தது.

காலங்கள் மாறிய போதும் அவர்களது காதல் இன்னமும் மாறவில்லை. விஸ்வஜித்தின் காதலை அவனது கோபம் மறைத்தது. துளசியின் காதலை அவளது திமிர் மறைத்தது. இருவருமே தங்களது காதலை போலி கவசம் அணிந்து வெளிப்படுத்தாது காத்தனர்.

**************************

கடந்த காலத்தை நினைத்து பார்த்த துளசி படுக்கையில் வந்து படுத்தாள். இழப்பின் வலியை தாங்கி கொள்ள இயலாது அவளது விழிகளில் இருந்து வழிந்த விழிநீர் தலையணையை நனைத்தது.

'ச்சீ, நீ இவ்வளவு தானா துளசி? உன்னுடைய விதி பத்து வருடங்களுக்கு முன் எழுதப்பட்டது. அதை மாற்றி அமைக்க இறைவனால் கூட முடியாது. அதனால் நீ விஷ்ஷுவை விட்டு விலகி இருப்பது தான் அவனுக்கு நல்லது. அவன் உன் காதலன் இல்லை. அவன் உன் தங்கையின் வருங்காலக் கணவன். அந்தப் பார்வையில் மட்டும் அவனைப் பார். மறந்தும் உனது உணர்வுகளை வெளிப்படுத்தி விடாதே. ஜாக்கிரதை...' என்று அவளது மனசாட்சி அவளை எச்சரித்தது.

உடனே அவள் தனது விழிகளைத் துடைத்து கொண்டாள். அவனது வாழ்க்கை சிறக்க வேண்டும் என்று எண்ணி தானே அவள் அவனை விட்டுப் பிரிந்தது. இப்போது அவனது வாழ்க்கை சிறக்க போவதை நினைத்து தான் சந்தோசப்பட வேண்டுமே தவிர, வருந்த கூடாது என்று தன்னைத் தானே தேற்றி கொண்டாள்.

அதே போல் விஸ்வஜித்தும் துளசியைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தான். அவனைக் காணாது அவள் தவித்த தவிப்பு பொய் இல்லை. தான் அவளைக் கண்டு

கொள்ளாததைக் கண்டு அவளது முகம் சுருங்கி போனது பொய்யில்லை. ஆனால் அதன் பின் அவள் பேசிய திமிர் பேச்சுக்களும் பொய்யில்லை. யாரோ ஒருவனுக்கு வாய்ப்பு தராதவள்... தான் அவளது தங்கைக்குக் கணவனாக வர போகிறவன் என்று தனக்கு அந்த வாய்ப்பை எதற்காகத் தந்தாள்? இதில் அவளது உண்மை முகம் எது?

அன்றிருந்த இருபத்திரண்டு வயது விஸ்வஜித்திற்கு அதிகம் யோசிக்கத் தெரியவில்லை. காதல் தோல்வியில் துவண்டவன் எதையும் ஆராய்ந்து பார்க்கும் மனநிலையில் இல்லை. ஆனால் இன்று இருக்கும் விஸ்வஜித்திற்கு எதையும் ஆராய்ந்து பார்க்கும் திறமை இருந்தது. அவனது மனதில் ஏதோ சரியில்லை என்று தோன்றியது.

எல்லாக் குழப்பத்தையும் மீறி அவனுள் ஒரு விசயம் வேதனையைத் தந்தது. அது, துளசி ஒரு விதவை என்பது... அவளது கணவன் எப்படி இறந்தான்? என்று அவனுள் பெருத்த கேள்வி எழுந்தது. மீண்டும் மீண்டும் அதையே நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்தவனுக்கு அப்போது தான் ஒரு விசயம் மெல்ல புலப்படத் துவங்கியது. அன்றைய நிகழ்வுகளை எல்லாம் ஒன்றாகக் கோர்த்து பார்த்தவன் முகத்தில் வெளிச்சம் பரவியது.

அந்தக் கணம் அவனது மனதில் எல்லையில்லா கேள்விகள் எழுந்தது. அவனது அனைத்து கேள்விகளுக்கும் விடை அவளிடத்தில்... நிச்சயம் அவளிடம் இருந்து விடையைப் பெற்று கொள்வான், அவனது ஸ்டைலில்...! அவன் விரிந்த புன்னகையுடன், நிம்மதியுடன் உறங்கி போனான்.

வேதாவோ தூக்கம் வராது புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தார். விஸ்வஜித்தின் பார்வை அவருள் பெருத்த சந்தேகத்தை உண்டு பண்ணியது. துளசி அவனை உதாசீனம் செய்த போதும் அவனது காதல் மாறவில்லையோ? அப்படி மாறாது இருந்து, அவன் அவளைத் திருமணம் செய்து கொண்டால்??? அவர் அதிர்ச்சியில் எழுந்தே விட்டார்.

"நோ... கூடவே கூடாது. இதற்காகவா நான் இத்தனை கஷ்டப்பட்டது. என் சந்தோசத்தைச் சீரழிச்சவன் பொண்ணு சந்தோசமா வாழ்வதா? இவ்வளவு சொத்தும் துளசிக்குப் போய்ச் சேருவதா? ம்ஹூம், கூடவே கூடாது. துளசியின் காதல், சொத்து, சந்தோசம் எல்லாம் என் மகளுக்கு மட்டுமே போய்ச் சேரணும். என் மகள் சந்தோசமா வாழணும். அதைப் பார்த்து துளசி வெந்து சாகணும். துளசியோட வேதனையைப் பார்த்து அவளைப் பெத்தவன் வேதனைப்படணும். செத்து போனாலும் நீ நிம்மதியா இருக்கக் கூடாது வரதா..." வேதா ஆக்ரோசத்துடன் கத்தினார்.

விதி செய்த சதியல்ல... இது மனிதன் செய்த சதி. விதிக்கும், மதிக்கும் மேலே இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதைப் பெரும்பாலானோர் மறந்து போகின்றனர், இறைவன் தனது இருப்பினை உணர்த்தும் வரை...!!!

தொடரும்...!!!

## அத்தியாயம் : 11

"அபி..." என்றழைத்தபடி அபிநயாவின் அறைக்குள் நுழைந்தாள் துளசி. கட்டிலில் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த அபிநயா அக்காவை கண்டதும் உற்சாகமாய்,

"வா துளசி... இங்கே வந்து உட்கார்." என்று தனது பக்கத்தில் இருந்த இடத்தைச் சுட்டி காட்டினாள்.

புன்னகையுடன் தங்கை அருகில் அமர்ந்த துளசி அவளை வாஞ்சையுடன் பார்த்து, "இன்னமும் தூங்காம என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?" என்று கேட்க...

"தூக்கம் வரலை... அதான் புக்ஸ் படிச்சிக்கிட்டு இருக்கேன்."

"அப்போ நான் கொஞ்ச நேரம் பேசலாமா?"

"என்னக்கா இது? புதுசா பெர்மிசன் எல்லாம் கேட்டுக்கிட்டு? பேசுக்கா."

"வந்து... விஸ்வஜித் பத்தி நீ என்ன நினைக்கிற?" துளசி சற்று தயக்கத்துடன் ஆரம்பித்தாள்.

அபிநயா தனது கையில் அலைப்பேசியை எடுத்துக் கொண்டு அதை நோண்டியபடி, "ஹேன்ட்சம் மேன்... ரொம்பக் கண்ணியமா நடந்துக்கிறார். எனக்குப் பிடிச்சியிருக்கு." என்றாள்.

"தட்ஸ்குட் அபி..." என்ற துளசி,

"கல்யாணத்துக்கு அப்புறம் அவர் மனசு கோணாம நடந்துக்கோ. உங்களுக்கு இடையில் சின்னச் சண்டையோ, விரிசலோ வராம பார்த்துக்கோ. எதுவாக இருந்தாலும் உடனே பேசி தீர்த்துக்கோ. கோபப்படாதே. அவர் கோபப்பட்டாலும் நீ அனுசரிச்சு போ." என்று அடுக்கி கொண்டே போக...

"அக்கா, ஸ்டாப், ஸ்டாப்..." என்று அவள் பேசுவதைத் தடை செய்தவள்,

"அக்கா, முதல்ல நீ பொண்ணு வீட்டுக்காரி மாதிரி பேச கத்துக்கோ. இதை எல்லாம் நீ எனக்குச் சொல்ல கூடாது. மாப்பிள்ளை கிட்ட சொல்லணும். அவர் கிட்ட சொல்லி என்னைக் கண்கலங்காம பார்த்துக்கச் சொல்லு. அதை விட்டுட்டு எனக்கு எதுக்கு அட்வைஸ் பண்ற?" தங்கை படபடத்ததில் துளசி 'ஙே' என்று விழித்தாள்.

"என்னடி இப்படிச் சொல்ற?"

"போக்கா... நீ எனக்குச் சப்போர்ட் பண்ணாம எனக்கு வர போற கணவனுக்குத் தான் சப்போர்ட் பண்ற."

"அதில்லை அபி..."

"நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்." அபிநயா முகத்தைத் தூக்கி வைத்து கொண்டாள். அவளது தாடையைத் தொட்டு தன் பக்கம் திருப்பிய துளசி,

"என் வாழ்க்கையில் தான் கல்யாணம், குழந்தை இப்படி எதுவுமே நடக்காம போயிருச்சு. உன் வாழ்க்கையாவது சந்தோசமா அமையணும்ன்னு நான் நினைச்சது தப்பா அபி." அக்காவின் வார்த்தைகளில் தங்கை அப்படியே கரைந்து விட்டாள்.

"சாரிக்கா... நான் ஏதோ தெரியாம பேசிட்டேன்."

"பரவாயில்லை விடு. கல்யாணம் முடிஞ்ச பத்தாவது மாசத்தில் எனக்கு ஒரு மகனையோ, மகளையோ பெத்து கொடுத்திரு. உன் குழந்தையை எனக்குக் கொடுப்ப தானே?"

"நீ கேட்டா உயிரை கூடத் தருவேன்க்கா... என் குழந்தையைத் தர மாட்டேனா."

"அப்போ உன் முதல் குழந்தையை எனக்குத் தத்து கொடுத்திரு அபி."

"நிச்சயமாக்கா..." என்ற அபிநயா,

"அக்கா, நான் இப்படிக் கேட்கிறேன்னு தப்பா நினைச்சுக்காதே." என்று பீடிகை போட...

"உன்னைப் போய்க் கோபித்துக் கொள்வேனா? சொல் அபி..."

"நீ ஏன் கல்யாணம் பண்ணிக்கக் கூடாது? அப்போ உனக்குன்னு ஒரு குழந்தை பிறக்கும் இல்லையா?" அதைக் கேட்டு விரக்தி புன்னகை சிந்திய துளசி,

"அதை எல்லாம் நான் மறந்து ரொம்ப நாளாச்சு. நீ நான் சொன்னதை மறந்திராதே. சரி, நேரமாச்சு. நீ தூங்கு. குட்நைட்." என்றபடி தங்கையிடம் இருந்து விடைபெற்றாள்.

துளசி சென்றதை உறுதிப்படுத்திக் கொண்ட அபிநயா எழுந்து சென்று அறை கதவை தாளிட்டவள் பின்பு கையிலிருந்த அலைப்பேசியை எடுத்துக் காதில் வைத்தாள்.

"மாமா, அக்கா சொன்னதை எல்லாம் கேட்டீங்க தானே."

"ம், கேட்டேன் அபி..." மறுபுறம் விஸ்வஜித்தின் குரல் கம்பீரமாக ஒலித்தது.

"இப்போ என்ன பண்ண போறீங்க மாமா?"

"எல்லாம் நான் பார்த்துக்கிறேன்."

"மாமா, உங்க கையில் தான் என் வாழ்க்கையே அடங்கி இருக்கு." என்று அவள் கண்களில் கண்ணீர் மல்க கூற...

"அசடு மாதிரி அழாதே அபி... என் மேல் பாரத்தைப் போட்டுட்டு நீ நிம்மதியா இரு."

"மாமா, அக்கா ரொம்பப் பாவம்."

"பாவம்ன்னு சொல்ல மாட்டேன். அதிகப்பிரசிங்கித்தனம்ன்னு சொல்வேன்."

"மனசுக்குள் எதையோ நினைச்சு மறுகுகிறாள். அதை எப்படியாவது கண்டுபிடிங்க."

"நிச்சயமாய்... நோயை கண்டுபிடித்தால் தானே மருந்து கொடுக்க முடியும்."

"உங்க மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு மாமா. குட் நைட்." என்றவள் அழைப்பை துண்டித்து விட்டாள்.

விஸ்வஜித் அலைப்பேசியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். துளசி பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. அவளது வேதனையை எண்ணி அவனது முகத்தில் வேதனை படிந்தது.

"விச்சு..." அன்னையின் குரலில் அவன் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்தான்.

"இங்கே என்ன நடக்குது விச்சு?"

"ம்மா..."

"நான் எல்லாத்தையும் கேட்டுட்டேன்."

அவன் அலைப்பேசியை 'ஸ்பீக்கர் மோட்'இல் போட்டு இருந்ததால் அவர் துளசி மற்றும் அபிநயா பேசியதை கேட்டு விட்டார்.

"உண்மையை மறைக்காம சொல்லு."

இனி மறைக்க ஒன்றும் இல்லை என்று எண்ணிய விஸ்வஜித் அன்னையிடம் எல்லாவற்றையும் கூறினான். அதைக் கேட்ட விசாலம் மிகவும் வேதனை கொண்டார்.

"உங்கப்பாவுக்கும், உனக்கும் நான் வேத்து மனுசியா போயிட்டேன்ல்ல." அவர் விழிகள் கலங்க...

"அம்மா, அப்படி எல்லாம் இல்லைம்மா." அவன் அவரது கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"நீ மனசுக்குள் கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்தப்போ நான் மட்டும் சந்தோசமா இருந்திருக்கேனே விச்சு. ரொம்பக் கஷ்டமா இருக்குப்பா."

"அப்படி எல்லாம் இல்லைம்மா." அவன் மறுத்துப் பேசினான்.

"சரி, போனதை விடு... இப்போ என்ன செய்யப் போகிற?"

"எதுவாக இருந்தாலும் துளசி தான் என்னுடைய மனைவி. அதில் எந்தவித மாற்றமும் இல்லை." அவனது உறுதியை கண்டு தாயின் மனம் குளிர்ந்தது.

"இவ்வளவு காதலை வச்சிக்கிட்டு எப்படித் தான் ரெண்டு பேரும் பிரிஞ்சு இருக்கீங்களோ?" அவர் அவனது தலையை வாஞ்சையுடன் கலைத்து விட்டபடி மெல்ல சிரித்தார்.

"துளசியோட மனசில் என்ன இருக்குன்னு இப்போ வரை எனக்குப் புரியலைம்மா." அவன் புரியாது குழம்பினான்.

"மக்கு, மக்கு..." என்றபடி அவனது தலையில் செல்லமாகக் கொட்டியவர்,

"அவள் மனசில் நீ தான் இருக்கிற." என்க... அதைக் கேட்டு அவனது முகம் மலர்ந்தது.

"இன்னமும் அவள் உன்னை மறக்கலை. அவள் மனசில் நீ தான் இருக்கிற. அப்படி இருந்தும் அவள் உன்னை விட்டு பிரிந்து போகும் முடிவை எடுத்து இருக்கிறாள்ன்னா? எதுவோ ஒண்ணு இடிக்குதே."

"அது தான்ம்மா எனக்கும் புரியலை."

"எனக்குப் புரிஞ்ச விசயத்தை நான் சொல்லவா?"

"சொல்லுங்கம்மா..." அவன் ஆவலுடன் அவரது முகத்தைப் பார்த்தான்.

"அவள் அவளோட நல்லதுக்காக உன்னை விட்டு பிரிஞ்சி போகலை. உன்னோட நல்லதுக்காகத் தான் உன்னை விட்டு பிரிஞ்சு போயிருக்கிறாள். அதுக்கான காரணம் எனக்குத் தெரியாது. அதை நீ தான் கண்டுபிடிக்கணும்."

"இவ்வளவு சொல்லிட்டீங்கல்ல... இனி உங்க மகனோட ஆக்சனை பாருங்க. ஜமாய்ச்சிர்றேன்." என்று அவன் உற்சாகமாகக் கூவ... அவனது உற்சாகம் கண்டு அவருக்கும் மகிழ்ச்சி தொற்றிக் கொண்டது.

***************************

வி.டி புட் ப்ரொடக்ஷனை அபிநயா பெயருக்கு மாற்றும் விழாவும், அதன் முதலாளியாக அவள் பொறுப்பு ஏற்பதை சிறப்பிக்கும் விழாவும் ஒரே நேரத்தில் எடுக்கப்பட்டுக் கொண்டாடப்பட்டது. அதற்குத் துளசி மற்றும் விஸ்வஜித் குடும்பத்தினர் அங்கு வருகை தந்திருந்தனர்.

"வாங்க... வாங்க..." என்று தன்னை வரவேற்ற துளசியைக் கண்டு அவன் இமைக்க மறந்தான். அவள் பட்டுப்புடவையில் அத்தனை அழகாக இருந்தாள்.

"டேய் மகனே, வழியுதுடா." விசாலம் மகனது விலாவில் இடித்து அவனது ஜொள்ளை இடித்துரைத்தார். அதில் தன்னுணர்வு பெற்றவன் துளசியிடம் சிறு தலையசைப்பை பதிலாகக் கொடுத்தவன் உள்ளே சென்றான்.

"விச்சு, அண்ணியோட பார்வை உன் பக்கம் தான் இருக்கு." மதுரா கூறியதை கேட்டு அவன் அபிநயா பக்கம் பார்த்தான்.

"அங்கே இல்லை விச்சு. இங்கே..." என்றவள் துளசியை நோக்கி அவனது முகத்தைத் திருப்பினாள்.

"உனக்கு எப்படித் தெரியும்?" அவன் திகைப்புடன் கேட்க...

"நான் தான் சொன்னேன்டா." என்றபடி அங்கு வந்த விசாலம்,

"நாம பண்ண போகிற காரியத்துக்கு மருமக கிட்ட இருந்து தர்ம அடி கிடைக்கப் போறது உறுதி. அதான் எனக்குத் துணையா என் மகளைச் சேர்ந்துக்கிட்டேன்." என்று அசராது கூற...

"அம்மா, நீங்க அம்மா இல்லை. என்னோட எதிரி." மதுரா கோபத்தில் பல்லை கடித்தாள்.

"காதல் வரலாற்றில் இது எல்லாம் சகஜம் மங்கி." விஸ்வஜித் அவளது தோளில் கை போட்டு அவளைச் சமாதானப்படுத்தினான்.

"எல்லாம் என் நேரம்..." என்று நொடித்துக் கொண்ட மதுராவின் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தே இருந்தது.

"டேய் அண்ணா, எனக்கு வைர ஆரம் கன்ஃபார்ம் தானே." என்று அவள் கண்சிமிட்ட...

"டபுள் கன்ஃபார்ம்..." என்று அவனும் கண்சிமிட்டி சிரித்தான்.

இதை எல்லாம் ஏக்கத்துடன் பார்த்தபடி நின்றிருந்தாள் துளசி. அவளது பார்வையை அவன் உணர்ந்தாலும் எதையும் செய்ய இயலாதவனாய் போட்டுக் கொண்டிருக்கும் வேடத்திற்கு ஏற்ப அபிநயா அருகில் போய் நின்றான். அதைக் கண்டு துளசியின் முகம் கருத்துப் போனது.

விழா தொடங்கும் முன் அவசரமாக ஒரு இளைஞன் அங்கு வந்து சேர்ந்தான். வியர்த்து விறுவிறுத்து ஓடி வந்தவனைக் கண்டு அபிநயா முறைத்து பார்த்தாள். 'ப்ளீஸ்' என்று கண்களால் அவளிடம் கெஞ்சியபடி அவன் அவளை நோக்கி வந்தான். அபிநயாவிடம் பேச வந்தவனை,

"ப்ரோ, இப்போ பேசினால் பிரச்சனையாகிரும். பிறகு பேசுங்க..." என்று தடுத்த விஸ்வஜித் அவனைத் துளசியை நோக்கி தள்ளி கொண்டு சென்றான்.

"இவர் மிஸ்டர். கௌதம்... நம்மளோட மொத்த யுனிட்டுக்கும் என் சார்பாக நியமித்து இருக்கும் மேனேஜர்."

"ஓ..." என்றபடி துளசி அவனை யோசனையுடன் பார்த்தாள்.

"மேம், நான் நல்லா வேலை செய்வேன்." என்று கௌதம் ஆர்வக்கோளாறில் உளற...

"அவங்க உன் கிட்ட கேட்டாங்களா? உன்னை வேலைக்கு வைத்திருப்பது நான்... என்ன புரிஞ்சதா?" விஸ்வஜித் அவனது காதில் ரகசியமாய்க் கூறியவன் கௌதமை அங்கிருந்து அப்புறப்படுத்தினான்.

"ப்ரோ, என்ன ப்ரோ இது? யார் கூடவும் என்னைப் பேச விட மாட்டேங்கிறீங்க?" கௌதம் பாவமாகக் கேட்டான்.

"உன் ஆளு உனக்குக் கிடைக்கணுமா? வேண்டாமா?"

"கிடைக்கணும், கிடைக்கணும்..." கௌதம் நாலாப்புறமும் தலையாட்டினான்.

"அப்போ வாயை வச்சிக்கிட்டு சும்மா இருக்கணும்." என்ற விஸ்வஜித் தனது வேலையைப் பார்க்க போய்விட்டான்.

நிறுவனத்தை அபிநயா பெயருக்கு மாற்றியதும் அவளை 'எம்டி' நாற்காலியில் அமர சொல்ல... அபிநயாவோ விஸ்வஜித்தை அமர சொன்னாள்.

"நானா?" அவன் தயங்கினான்.

"உங்களை விடப் பொருத்தமானவங்க வேறு யார் இருக்கா?" என்று அபிநயா கேட்க...

துளசி அதற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை. மகள் மற்றும் மருமகன் வசம் தொழில் வந்தது குறித்து வேதாவுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. துளசியின் சந்தோசத்தைப் பறிப்பதில் அவருக்கு அத்தனை சந்தோசம்.

விஸ்வஜித் துளசியைப் பார்த்தபடி நாற்காலியில் அமர்ந்தான். அவன் கம்பீரமாக அமர்ந்திருப்பதைக் கண்டு துளசியின் விழிகள் கலங்கி போனது. அவளது கலக்கத்தை அவன் உணர்ந்தான்.

'எதற்கடி இந்தத் தவிப்பு?' அவன் மனதிற்குள் புலம்பி தவித்தான். துளசியோ அவனை மனநிறைவோடு பார்த்திருந்தாள்.

அப்போது காதல் கணக்கில் அவள் விட்ட பிழையை இப்போது நேர்செய்து விட்டதாய் அவளுள் நிறைவு தோன்றியது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 12

தன் முன்னிருந்த தொடுதிரையில் உணவு நிறுவனத்தின் திட்டங்களை, அதன் செயல்பாடுகளைப் பற்றி விளக்கி கொண்டிருந்தாள் துளசி. விஸ்வஜித் சார்பாகக் கௌதம் அங்கு வந்திருந்தான். அவனுக்கு நேர் எதிரே அபிநயா அமர்ந்திருந்தாள். அபிநயா அக்கா சொல்வதைக் கவனமாகக் கேட்டு கொண்டிருந்தாள். இல்லை, இல்லை... அப்படி நடித்துக் கொண்டிருந்தாள். ஏனெனில் கௌதம் அவளையே பார்ப்பதை அவள் உணர்ந்திருந்தாள். இனிய படபடப்பில் அவளால் எதையும் கவனிக்க முடியவில்லை.

கௌதமோ யாரையும் சட்டை செய்யாது அபிநயாவை சைட் அடித்துக் கொண்டிருந்தான். அவளைக் கண்டாலே அவன் அவனாக இருப்பது இல்லை. 'பைத்தியமாக்குகிறாள்' என்று அவன் முணுமுணுத்துக் கொண்டான். அவனது சேட்டையைத் துளசி பார்த்து விட்டாள். நேரே கௌதம் அருகே வந்தவள் ஓங்கி அவனது கன்னத்தில் அடித்தாள். நல்லவேளை இவர்கள் மூவரை தவிர வேறு யாரும் அங்கு இல்லை. கௌதம் கன்னத்தைப் பிடித்தபடி அதிர்ச்சியில் விழித்தான்.

"இங்கே பார்... வேலையைப் பார்க்க வந்தா அதை மட்டும் பார். அதை விட்டுட்டு அங்கே என்ன பார்வை? அவள் யாருன்னு தெரியுமா? உங்க எம்டியை கல்யாணம் பண்ண போறவங்க... உன் வருங்கால முதலாளியம்மா. அவங்களை இப்படித் தான் அசிங்கமா பார்த்து வைப்பியா? இனி ஒரு நொடி கூட நீ இங்கே நிற்க கூடாது. விஷூ கிட்ட நான் பேசிக்கிறேன். ஐ சே கெட்அவுட்." துளசி அவனை வெளியில் போகும்படி கையை வாயில் புறமாய் நீட்டினாள்.

அக்காவின் ருத்ரதாண்டவத்தில் அபிநயா பேச மறந்து பயந்து போய் எழுந்து நின்றாள். கௌதம் அப்போதும் அபிநயாவை முறைத்தபடி வெளியில் சென்றான்.

"ராஸ்கல், இங்கே என்ன பார்வை வேண்டி கிடக்கு? முன்னாடி பார்த்து நட." அதற்கும் துளசி எகிறினாள்.

கௌதம் போனதும் துளசி தங்கையிடமும் சத்தம் போட்டாள்.

"ஒருத்தன் உன்னைத் தப்பா பார்க்கிறான்னா அவனது கன்னத்தைப் பழுக்க வைக்க வேண்டாமா? இப்படியா தேமேன்னு இருப்பது?"

"நான் கவனிக்கலை துளசி." அபிநயா மென்று விழுங்கினாள். தங்கை மீது தவறு இருக்காது என்பதை உணர்ந்து துளசி அமைதியானாள்.

"சரி, நீ போ..." என்றவள் தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்துவிட்டாள்.

வெளியில் வந்த அபிநயா கௌதமை தேடினாள். அவன் அவளது அறையில் அவளுக்காகக் காத்திருந்தான். அது தெரியாது அவள் அவனுக்கு அழைக்க... அழைப்பை எடுத்தவன் அவளை அறைக்கு வர சொன்னான். அவள் உள்ளே நுழைந்ததும் தான் தாமதம் அடுத்த நொடி கதவை தாளிட்டவன் அவளை அணைத்துக் கொண்டு அவளது முகம் முழுவதும் முத்தமிட்டு தனது உரிமையை நிலைநாட்டினான். முதலில் திமிறியவள் பின்பு அவனிடம் காதலாய் சரணடைந்தாள். அதில் அவனது மனம் சிறிது சமன்பட்டது. அவளை விடுவித்தவன் அவளை முகத்தைக் கைகளில் தாங்கி கொண்டான்.

"நான் யாருடி உனக்கு? உன்னைப் பார்க்க எனக்கு உரிமை இல்லையா? நாலு வருசமா நாய் மாதிரி உன் பின்னாடி சுத்தி வந்து உன் காதலை அடைந்தவன் நான். எனக்கு ஏக்கம் இருக்காதா? ஆசை இருக்காதா?"

"கௌ, ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க? உங்களுக்கு இல்லாத உரிமையா?"

கௌதம் இலண்டனில் மென்பொருள் பொறியாளராகப் பணியாற்றுகிறான். தோழனாய் அறிமுகமாகி பிறகு காதலனாய் மாறியவன். அவளது நட்பை பெற கூட அவன் இந்தளவிற்குக் கஷ்டப்படவில்லை. ஆனால் அவளது

காதலை பெற அவன் அந்தளவிற்குக் கஷ்டப்பட வேண்டி இருந்தது. பல பரீட்சைகள் வைத்து அவனைப் பரிசோதித்த பின்னரே அவள் அவனைத் தனது காதலனாக ஏற்றுக் கொண்டாள். அவளது இந்த ஜாக்கிரதை உணர்வு அவளது அக்காவின் வாழ்க்கையைப் பார்த்து வந்த படிப்பினை என்றால் அது மிகையில்லை.

"இப்பவே வா... நாம காதலிக்கிறதை உன் அக்கா கிட்ட சொல்லிரலாம்."

"ப்ளீஸ் கௌ, அக்கா வாழ்க்கைக்காகக் கொஞ்சம் பொறுமையா இரு. மாமா, எப்படியாவது அக்கா மனசை மாத்திருவாரு." என்றவள்,

"அக்கா அடிச்சதுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன். சாரி கௌ..." அவள் மன்னிப்பு வேண்டியபடி அவனது கன்னத்தில் இதழ்களைப் பதிக்க... அவன் மயக்கத்துடன் கன்னத்தைத் தடவியபடி,

"இதுக்காவே நிறைய அடி வாங்கலாம் போலிருக்கே." என்று கூற...

"அப்போ அக்காவை கூப்பிடவா?" அவள் குறும்புடன் கேட்க...

"ஐயோ..." அவன் பயத்துடன் கன்னத்தைப் பிடித்துக் கொண்டான். அதைக் கண்டு அவள் வாய்விட்டு சிரித்தாள்.

"துளசி நல்லவள் தான். என் மேல் இருக்கும் அக்கறையில் அடித்து விட்டாள்."

"ம், புரியுது. அண்ணியார் அன்னைக்குச் சமம். சோ, நோ ப்ராப்ளம். நான் பண்ணியதும் தப்பு தானே. இடம், பொருள் பார்த்து நடந்து இருக்கணும். அது என்னமோ தெரியலை... உன்னைப் பார்த்தாலே டெம்ப்ட் ஆகிர்றேன்."

"இன்னும் கொஞ்ச நாள் தான் கௌ..."

"அப்படி நினைச்சு தான் மனசை தேத்திக்கிறேன்." என்றவன் கிளம்பத் தயரானான்.

"துளசி கண்ணில் படாமல் வெளியில் போங்க. உங்களைத் திரும்பப் பார்த்தால் அடி கன்ஃபார்ம்." என்று கூறி அவள் சிரிக்க...

"அடிப்பாவி..." என்றவன் கதவை திறந்து தலையை மட்டும் வெளியில் நீட்டி இரு பக்கமும் பார்த்துவிட்டு,

"உங்கக்கா இல்லை... நான் கிளம்பறேன்." என்று அவளிடம் விடைபெற்றுச் சென்றான்.

கௌதம் சென்றதும் அபிநயா விஸ்வஜித்திற்கு அழைத்தான். அவன் அழைப்பை எடுத்ததும் அவள் நடந்த விசயத்தைக் கூறினாள்.

"மாமா, அக்காவுக்குச் சந்தேகம் வந்திருச்சு. அக்காவையாவது சமாளிச்சிரலாம். அம்மாவுக்குத் தெரிஞ்சால் அவ்வளவு தான். அவங்களைச் சமாளிக்க முடியாது. ஏதாவது பண்ணுங்க."

"நான் பார்த்துக்கிறேன்." என்றவன் அழைப்பை துண்டித்தான்.

அபிநயா மட்டும் புரிதலுள்ள பெண்ணாய் இல்லாவிட்டால் இப்போது அனைத்துமே தவறாகி போயிருக்கும். அபிநயா ஊரில் இருந்து வந்ததும் மறுநாள் அவனைச் சந்திக்க வந்துவிட்டாள். அவளே பேச வந்தது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அதனால் அவனே பேச்சை ஆரம்பித்தான்.

"உன் அக்காவாகத் துளசி இருக்கும் போது என்னால் உன்னைக் கல்யாணம் பண்ண முடியாது." என்று அவன் ஆரம்பிக்க...

"அப்போ என் அக்கா துளசியாக இல்லாமல் இருந்தால் என்னைக் கல்யாணம் பண்ணிக்குவீங்களா?" அவளது கேள்வியில் முதலில் திகைத்தவன் பின்பு வாய்விட்டுச் சிரித்தான்.

"முடியவே முடியாது." என்றவனைக் கண்டு அவள் புருவத்தைச் சுருக்கினாள்.

அவன் தங்களது காதல் கதையை அவளிடம் கூறினான். அதைக் கேட்டவள் ஆச்சரியத்தில் விழி விரித்தாள்.

"ஹே... அந்த ஹேன்ட்சம் மாமா நீங்க தானா? பத்து வருசத்துக்கு முன்னே உங்களைப் பார்த்தது இப்போது ஞாபகத்தில் இல்லை. அதனால் வந்த குழப்பம. சாரி..."

"நீ என்னைப் பார்த்திருக்கியா?"

"ம், நான் மட்டுமல்ல... அம்மாவும் பார்த்தாங்க."

"ஓ..." அவனது சுதி இறங்கி போனது.

ஒருவேளை வேதா தங்களது காதலை துளசி அப்பாவிடம் கூறி அதனால் துளசியின் வீட்டில் பிரச்சனை ஏற்பட்டு இருக்குமோ? அதனால் தான் அவள் தன்னை விட்டு விலகி போனாளோ? என்று யோசித்தவன் சிறிதும் வேதாவை சந்தேகப்படவில்லை. ஏனெனில் அபிநயாவை போன்று வேதாவும் தன்னை மறந்திருப்பார் என்றே நினைத்தான்.

அதே நேரம் அன்னை கூறியதும் அவனது நினைவுக்கு வந்தது. அவளது தந்தை தன்னைக் கொன்றுவிடுவதாய் மிரட்டி இருக்கலாம். அதைக் கண்டு பயந்து போய்த் துளசி தனக்காகக் காதலை துறந்து இருக்கலாம். அவன் யோசித்த வரையில் இவ்வளவு தான் அவனது அறிவுக்கு எட்டியது. பெரும்பாலான திரைப்படங்களில், கதைகளில் அப்படித் தானே காட்டுகிறார்கள். ஆனால் மனித மனங்கள் கதைகளில் கூடக் காண முடியாத அளவுக்கு வக்கிரம் நிறைந்தது. ஆனால் அந்த நல்லவன் நல்லதை மட்டுமே யோசித்தான்.

"இந்த மாதிரியான அல்ப காரணத்துக்காக எல்லாம் உன்னைக் கை விட்டு விடுவேனாடி. நீ மறுத்தாலும், உன கழுத்தில் நான் தாலி கட்ட போவது உறுதி." என்று அவன் உறுதியாகக் கூறிக் கொண்டான்.

******************************

திருமணத்திற்குப் புடவை எடுக்க எல்லோரும் சென்றிருந்தனர். விஸ்வஜித் தனது அத்தனை வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு தன்னவளுக்காக அங்கு வந்திருந்தான். அவனுடன் கௌதமும் வந்திருந்தான். அங்குச் செல்ல முதலில் மறுத்த துளசியை அபிநயா தான் வற்புறுத்தி அழைத்து வந்தது.

உள்ளே நுழைந்ததும் கௌதமின் விழிகள் அபிநயாவை தேடி நாலாப்புறமும் சுழன்றது. அதைக் கவனித்த விஸ்வஜித்,

"ஏற்கெனவே வாங்கின அடி போதாதா?" என்று அடிக்குரலில் ரகசியம் பேச...

"ஆத்தி..." கௌதம் பயத்துடன் தனது கன்னத்தைப் பிடித்தான்.

"அது..." விஸ்வஜித் அவனைக் கண்டு சிரிக்க... அவனை நக்கலாய் பார்த்த கௌதம் வாய்விட்டுச் சிரித்தான்.

"இப்போ எதுக்குடா சிரிக்கிற?"

"எனக்கே அடி பலமா விழுந்ததுன்னா? உங்களை நினைச்சேன்... சிரிச்சேன்." என்று நமட்டுச் சிரிப்புச் சிரித்தான் கௌதம்.

"அடிக்கிற கை தான் அணைக்கும்." மையலுடன் கூறிய விஸ்வஜித்தை வியப்பாய் பார்த்த கௌதம்,

"ப்ரோ, ஒரு மார்க்கமா தான் இருக்கீங்க. எதுக்கும் நான் பத்தடி தள்ளியே வர்றேன்." என்று தள்ளி நிற்க...

"வாடா அரட்டை..." அவனது தோளில் கை போட்டு அணைத்துச் சென்றான் விஸ்வஜித். விஸ்வஜித்திற்கு ஏனோ கௌதமை கண்டதும் பிடித்து விட்டது. அவனது துறுதுறு, கலகல சுபாவமே அதுக்குக் காரணம்.

"ப்ரோ, உங்க லெவல் என்ன? என் லெவல் என்ன? நீங்க பணக்காரர். நான் அநாதை. என்னைப் போய் உங்களுக்கு ஈக்குவலா ட்ரீட் பண்றீங்களே?" கௌதம் கண் கலங்கினான்.

"நீ அநாதைன்னு யார் சொன்னது? உனக்கு அண்ணன் நானிருக்கேன், உன் அண்ணி இருக்கிறாள்." என்று விஸ்வஜித் அவனைத் தேற்றினான்.

"மற்றும் நம் உறவினர்கள் எல்லாம் இருக்காக..." நகைச்சுவை பாணியில் இழுத்து கூறிய கௌதமை கண்டு சிரித்தான் விஸ்வஜித்.

இதை எல்லாம் கவனித்தபடி துளசி அமர்ந்திருந்தாள். விஸ்வஜித் அவளைக் கண்டு கொள்ளாது அபிநயாவை பார்த்துப் புன்னகை புரிந்தவன் அவள் அருகில் போய் நின்று கொள்ள... வேதாவின் முகம் திருப்தியை காட்டியது. பிறகு புடவையைத் தேர்ந்து எடுப்பதில் நேரம் சென்றது. விஸ்வஜித் ஒரு புடவையைக் கையில் எடுத்தவன் அபிநயாவின் புறம் திரும்பி,

"இது நல்லாயிருக்கா?" என்று கேட்டான்.

கண்ணாடிக்கு முதுகு காட்டி நின்ற அபிநயா மீது அந்தப் புடவை வைத்து பார்த்தவனின் விழிகள் கண்ணாடியில் தெரிந்த துளசியின் பிம்பத்தைப் பார்த்தது. அவன் உண்மையில் புடவையை வைத்துப் பார்த்தது துளசியின் பிம்பத்தின் மீது தான். கண்ணாடி வழியாகப் பார்க்கும் அவனுக்கு மட்டுமே அது புரியும். மற்றவர்களுக்கு அவன் அபிநயா மேல் புடவை வைத்து அழகு பார்க்கின்றான் என்றே தோன்றும்.

துளசி அப்படி நினைத்து தான் விழிகள் கலங்க அமர்ந்திருந்தாள். என்ன தான் மனதினை சமாதானப்படுத்திய போதும் அவளால் இழப்பின் வலியில் இருந்து மீள முடியவில்லை. அவளது கலக்கம் புரிந்த போதும் அவனால் எதுவும் செய்ய இயலாத நிலை.

"மாமா, இது எல்லாம் ரொம்ப ஓவர்." அபிநயாவின் குரலில் தன்னுணர்வு பெற்றவன்,

"ஏன்?" என்று கேட்க...

"பொண்ணு என்னை விட உங்க பொண்டாட்டிக்கு ஸ்பெசலா அதிக விலையில் புடவை வாங்கிக் கொடுக்கிறீங்க?"

"ஹா ஹா... அவள் எனக்கு எப்போதுமே ஸ்பெசல் தான்." என்றவன் கையிலிருந்த புடவையைப் பில் போட கொடுத்தான்.

இருவரும் சிரித்துப் பேசுவதைக் கண்டு முள்ளின் மேல் அமர்ந்திருப்பது போன்று துளசி அவஸ்தையுடன் அமர்ந்திருந்தாள். அவளுக்குத் தெரியாதே, இது எல்லாம் கௌதம், அபிநயா திருமணத்திற்காக வாங்குகிறார்கள் என்று.

அபிநயா வாட்ஸ்அப் மூலம் கௌதமுக்கு குறுஞ்செய்தி அனுப்பித் தனது புடவையைத் தேர்ந்தெடுத்து கொண்டாள். இது எதையும் அறியாத வேதா வழக்கம் போல் இறுமாப்பாய் அமர்ந்து இருந்தார்.

அடுத்து நகை கடைக்குச் சென்றனர். அங்கு நுழைந்ததும் மதுரா அண்ணனிடம், "அண்ணா, வைர ஆரம்..." என்று கண்சிமிட்டி குறும்பாய் கேட்க...

"வாங்கிக் கொடுக்கிறேன்டி மங்கி..." என்றவன் சிரிப்புடன் தங்கையை அழைத்துச் சென்றான்.

கௌதம் சார்பில் அபிநயாவுக்கு வேண்டிய நகைகளை விஸ்வஜித் வாங்கினான். இறுதியில் மாங்கல்யம் தேர்ந்தெடுக்க ஆரம்பித்தனர். என்ன முயன்றும் துளசியால் மனதினை கட்டுப்படுத்த முடியவில்லை. இத்தனை ஆண்டுகளாய் அவனைப் பிரிந்திருந்த போதும், அவனுக்குத் திருமணமாகி இருக்கலாம் என்று எண்ணி இருந்த போதும் அவள் இத்தனை துயர் அடையவில்லை.

ஆனால் இப்போது நேரில் பார்க்கும் போது அவளால் இதைச் சிறிதும் தாங்கி கொள்ள முடியவில்லை.

மனம் படபடக்க, வியர்த்து வழிய, இரத்த அழுத்தம் ஏறுக்குமாறாய் எகிற, அவளது இதயத் துடிப்பு தாறுமாறாய் துடித்ததில் அவள் அப்படியே மயங்கி கீழே சரிந்தாள்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 13

மருத்துவமனை வரந்தாவில் தவிப்புடன் அமர்ந்திருந்தான் விஸ்வஜித். உள்ளே துளசிக்குச் சிகிச்சை நடந்து கொண்டிருந்தது. திடுமென அவள் மயக்கம் அடைந்து கீழே விழுந்தது கண்டு அவன் துடிதுடித்துப் போனான். அந்த நொடி அவன் யாரையும் சட்டை செய்யவில்லை. அவளை அப்படியே கைகளில் ஏந்தி கொண்டு தனது காரை நோக்கி ஓடினான். அவன் பின்னாலேயே கௌதம், அபிநயா ஓடிவர... மற்றவர்கள் திகைத்து போய் நின்றிருந்தனர். வேதா முகம் இறுக அமர்ந்திருந்தார்.

துளசியைக் காரிலேற்ற உதவிய அபிநயா தானும் உடன் செல்ல எண்ணி காரில் அமர போனாள். அவளைத் தடுத்தவன்,

"நீ கௌதம் கூடப் போய்த் தாலி செலக்ட் பண்ணு." என்று அவளைப் போகச் சொல்ல...

"அக்கா, இப்படி இருக்கும் போது...?"

"துளசியை நான் பார்த்துக்கிறேன்." என்றவன் காரை கிளப்பிக் கொண்டு சென்றுவிட்டான்.

மருத்துவமனையில் துளசியைச் சேர்த்த பிறகே அவனால் மூச்சு விட முடிந்தது. இருந்தாலும் அவனது கலக்கம் முற்றிலும் அகலவில்லை. அதற்குள் எல்லோரும் அங்கு வந்துவிட்டனர். வேதா இறுக்கமான முகத்துடன் ஓரமாக அமர்ந்து கொண்டார். அவருக்கு நடப்பது எதுவும் சரியாகப் படவில்லை. எங்கோ தவறு நடக்கிறது என்று அவரது உள்ளம் எச்சரித்தது.

"துளசி இப்போ எப்படி இருக்கிறாள்?" அபிநயா கவலையுடன் கேட்க...

"டாக்டர் ஒண்ணும் சொல்லை." என்று விஸ்வஜித் வெறுமையாய் தலையசைத்தான்.

சற்று நேரத்தில் அங்கு வந்த மருத்துவர் விஸ்வஜித்திடம், "பயப்பட ஒண்ணுமில்லை. அனிமீக்கா இருப்பதால் வந்த மயக்கம் இது." என்று கூற... அதைக் கேட்டு விஸ்வஜித் சற்று ஆசுவாசமானான்.

அப்போது அங்கு விரைந்து வந்த வேதா, "துளசியை நாங்க எப்போ வீட்டுக்கு கூட்டிட்டுப் போகலாம் டாக்டர்." என்று கேட்டார்.

துளசி இங்கே இருந்தால் அவளைப் பற்றிய முழு விபரங்கள் விஸ்வஜித்துக்குத் தெரிந்து விடுமோ? என்று அவர் பயந்தார். அதன் பிறகு அந்த ஆண்டவனே வந்து தடுத்தாலும் விஸ்வஜித், துளசி ஒன்று சேர்வது உறுதி. இதற்காகவா அவர் இத்தனை பாடுபட்டார்? ம்ஹூம், அவர்கள் இணையக் கூடவே கூடாது. அவர் மனதிற்குள் உறுதி எடுத்துக் கொண்டார்.

"பேஷண்ட்க்கு மயக்கம் தெளிஞ்சதும் கூட்டிட்டு போங்க." டாக்டர் கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

"நீங்க வேணும்ன்னா கிளம்புங்க. நாங்க எங்க பொண்ணைப் பார்த்துக்கிறோம்." வேதா விஸ்வஜித் வீட்டாரிடம் கூறினார். குறிப்பாக விஸ்வஜித்திடம்...

அதற்கு மேல் அங்கு நிற்காது விஸ்வஜித் குடும்பித்தினர் கிளம்பினர். அன்னை மற்றும் தங்கையைக் கோகுலுடன் அனுப்பி வைத்த விஸ்வஜித் தனது காரை நோக்கி நடந்தான். அவனது சோர்வுற்ற நடையைக் கண்ட அபிநயா அவனை நோக்கி ஓடி வந்தாள்.

"மாமா, மாமா..." அவளது அழைப்பில் நின்றவன் அவளைத் திரும்பி பார்த்தான்.

"நீங்க கவலைப்படாதீங்க மாமா... முதல்ல நான் கூட என்னமோன்னு பயந்துட்டேன். இப்போ டாக்டர் சொன்னதும் தான் நிம்மதியாச்சு. அக்கா அனிமீக்கா இருக்காள்ன்னு எனக்குத் தெரியும். அதுக்காக அவள் நிறைய டேப்லெட்ஸ் எடுத்துக்கிட்டு இருக்காள்."

"காலேஜ் படிக்கும் போது நல்லா தானே இருந்தாள்." அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

"அவள் செகண்ட் இயர் போகும் போது அவளுக்கு ஆக்சிடெண்ட் ஆச்சு. அப்போ அவளுக்கு வயித்தில் ஆபரேசன் பண்ணினாங்க. அதனால் அவள் அனிமீக்கா ஆகிட்டாள்."

"எதுக்காக ஆபரேசன் பண்ணினாங்க?" அவன் பரபரப்புடன் கேட்டான்.

"எனக்கு முழு விபரம் தெரியலை. அம்மாவுக்குத் தான் தெரியும்."

வேதாவிடம் துளசி பற்றிப் பேசி அவருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்த அவன் விரும்பவில்லை. அப்படி அவன் பேசினால் அபிநயா காதலுக்குப் பிரச்சனை ஏற்படும்.

"எந்த ஹாஸ்பிட்டல்? எந்த டாக்டர்ன்னு தெரியுமா?"

அபிநயா சொன்னதை மனதிற்குள் கவனமாகக் குறித்துக் கொண்டவன் அடுத்த அரை மணி நேரத்தில் அந்த மருத்துவமனையில் இருந்தான். யார் யாரை எல்லாமோ பிடித்துத் துளசி சம்பந்தப்பட்ட கோப்புகளைத் தேடி எடுத்துவிட்டான். அதற்கே அன்றைய நாள் முழுவதும் ஓடி போயிற்று. மறுநாள் துளசிக்குச் சிகிச்சை அளித்த மருத்துவரை சந்திக்க வேண்டி அனுமதி வாங்கி விட்டான்.

இரவு களைத்து போய் வீட்டுக்கு வந்தவனிடம் விசாலம் ஒன்றும் பேசவில்லை. உணவை பரிமாறியவர் அவனைக் கண்டு,

"எல்லாம் சரியாகும்." என்றார் ஆறுதலாக... அவன் சிறு தலையசைப்புடன் எழுந்து சென்றுவிட்டான்.

அறைக்குச் சென்றவன் அபிநயாவுக்கு அழைத்தான். அப்போது அவள் துளசியின் அருகில் இருந்தாள். அக்காவை அருகில் வைத்துக் கொண்டு அவளைப் பற்றி விஸ்வஜித்திடம் பேச முடியாது என்று எண்ணியவள்,

"மாமா ஃகால் பண்றாங்க..." என்றவள் துளசியின் பதிலை எதிர்பாராது அலைப்பேசியை எடுத்துக் கொண்டு தனது அறைக்கு ஓடினாள். அதைக் கண்டு துளசியின் முகம் சுருங்கி போனது.

மூச்சு வாங்க அலைப்பேசியை உயிர்ப்பித்த அபிநயா, "நல்ல நேரம் பார்த்து ஃபோன் பண்ணினீங்க." என்று சலித்துக் கொள்ள...

"துளசி பக்கத்தில் இருந்தாளா?"

"ஆமா..."

"இப்போ துளசி எப்படி இருக்கிறாள்?"

"நல்லா ஜம்முன்னு ஆபிஸ் வொர்க் பார்த்துக்கிட்டு இருக்கிறாள்."

"அதைத் தூக்கி தூர போட சொல்லிட்டு அவளை ரெஸ்ட் எடுக்கச் சொல்லு."

"அதை நீங்களே சொல்றது."

"ப்ச், சொன்னதைச் செய் அபி."

"ம், ம்... செய்யறேன். எனக்கு ஹனிமூனுக்குச் சுவிஸ்க்கு டிக்கெட் போட்டு கொடுங்க."

"உனக்கு மட்டும் தானே? போட்டுட்டா போச்சு." அவன் சிரியாமல் கூற...

"மாமா, என் கௌதமுக்கும் சேர்த்து தான்."

"ஹா ஹா... சுவிஸ் என்ன... அந்த மூனுக்கே டிக்கெட் போட்டு தர்றேன். முதல்ல போய்த் துளசியைக் கவனி." என்றவன் சிரித்தபடி அலைப்பேசியை அணைத்தான்.

அவன் மனதிற்குள் ஏதோ பாரமாய் இருந்தது. நாளை எல்லாம் நல்லவிதமாய் அமைய வேண்டும் என்று அவன் கடவுளை வேண்டி கொண்டான்.

மறுநாள் அவன் மருத்துவரை சென்று சந்தித்தான். துளசியின் கோப்புகளைப் படித்துப் பார்த்தவர், "ஆமா, நான் தான் இந்தக் கேசை டீல் பண்ணினேன். ஆக்சிடெண்ட் கேஸ். வயிற்றில் பலமா அடிப்பட்டு ரொம்ப ஆபத்தான நிலையில் இங்குக் கொண்டு வந்து சேர்த்தாங்க. சின்னப் பொண்ணு, வாழ வேண்டிய வயசு." அவர் துளசிக்காக வருத்தப்பட்டார். அவன் திகைப்புடன் அவரைப் பார்த்திருந்தான்.

"என்ன டாக்டர் சொல்றீங்க?"

அவர் துளசியின் உடல்நிலையைப் பற்றி விளக்க, விளக்க அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. அதற்கு மேல் அவனால் அங்கு உட்கார முடியவில்லை. யாரும் இல்லாத தனிமையான இடத்திற்குச் சென்று ஓவென்று அழ வேண்டும் போலிருந்தது. அவனுக்கே இப்படி என்றால்? துளசிக்கு அதுவும் அந்த வயதில் எப்படி இருந்திருக்கும்? இதைப் புரிந்து கொள்ளவே அவளுக்கு வயது போதாதே. அந்தத் துயரான நிலையிலும் அவனது நலனை எண்ணி அவள் முடிவெடுத்தது கண்டு அவனது மனம் காதலாய் கசிந்து உருகியது. உடல் துயரோடு, மனத்துயரையும் அவனது கண்மணி எப்படித் தாங்கினாளோ? இந்தக் கணமே அவளைத் தன்னுடன் அழைத்துப் போக வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.

எப்படி மருத்துவரிடம் விடைபெற்றான்? எப்படிக் காரை ஓட்டி கொண்டு வந்தான்? இது எதுவுமே அவனுக்குத் தெரியாது. வீட்டுக்கு வந்தவன் நேரே தனது அறைக்குச் செல்ல... இந்த நேரம் மகன் வீட்டிற்கு வந்திருப்பதைப் புதிராகப் பார்த்த விசாலம்,

"விச்சு, என்னடா இந்த நேரத்தில் வீட்டுக்கு வந்திருக்க...?" என்று கேட்க...

"தலைவலிம்மா... ஒரு மணி நேரத்துக்கு என்னை யாரும் தொந்தரவு செய்யாதீங்க." என்றவன் விறுவிறுவென்று சென்றுவிட்டான்.

அறைக்கு வந்து கட்டிலில் அமர்ந்தவன் மனதில் இருந்த துக்கத்தை எல்லாம் அழுது கரைக்க எண்ணி ஓவென்று அழ முயன்றான். ஆனால் அவனால் அழ முடியவில்லை. துக்கம் அதிகமாகும் போது மனம் ஒருவித மரத்த நிலைக்குச் சென்றுவிடும். அது போன்றதொரு ஒரு மனநிலையில் அவன் இருந்தான். அவர்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலைமை? எதற்கு இந்தக் கொடிய தண்டனை? காதலித்ததைத் தவிர அவர்கள் வேறென்ன தவறு செய்தார்கள்? வெகு நேரம் பிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்திருந்தவன் பிறகு தன்னைத் தேற்றிக் கொண்டு அடுத்து என்ன செய்யலாம்? என்று யோசிக்க ஆரம்பித்தான்.

********************

கடற்கரை ஓரமாய் நின்றிருந்த விஸ்வஜித்தின் கார் அருகில் தனது காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கினாள் துளசி. காற்றில் படபடத்த புடவை முந்தானை இழுத்துப் பிடித்துக் கொண்டவள், விஸ்வஜித் எதற்காகத் தன்னை இங்கே வர சொன்னான்? என்று குழப்பத்துடன் யோசித்தபடி சுற்றிலும் பார்த்தாள்.

அங்குத் தொலைவில் விஸ்வஜித் நின்றிருப்பது தெரிந்தது. அவனைக் கண்டதும் அவள் அவனை நோக்கி நடந்தாள். அருகில் செல்ல செல்ல தான் அவளுக்கு அங்கு நடப்பது புரிந்தது. அவளது குழப்பம் இன்னமும் அதிகரித்தது. ஏனெனில் அங்குப் புரோகிதர் அமர்ந்து தர்ப்பணத்திற்கான வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இவளை கண்டதும் விஸ்வஜித் புன்னகையுடன், "வாங்க வாங்க..." என்று வரவேற்றான்.

"இங்கே எதுக்கு வர சொன்னீங்க?"

"இன்னைக்குத் தை அமாவாசை. அதான் அப்பாவுக்குத் திதி கொடுக்க வந்தேன்."

"அதுக்கு எதுக்கு நான்?" அவள் சற்று சிடுசிடுப்புடன் கேட்டாள். அவள் அவனது உறவை துண்டிக்க நினைக்க... இது என்ன புதுக் கதை? என்று அவளுக்கு எரிச்சலாக வந்தது.

"அப்படியே உங்க ஹஸ்பெண்ட்க்கும் திதி கொடுக்கலாமேன்னு நினைச்சேன் மிஸஸ். துளசி." கடைசி வார்த்தையை அவன் அழுத்தம் திருத்தமாய் உச்சரிக்க... அவள் விதிர்த்து போய் அவனைத் திரும்பி பார்த்தாள்.

"நீங்க எதுக்கு அவருக்குக் கொடுக்கணும்? தேவையில்லை."

"நான் ஒண்ணும் அடுத்தவன் இல்லை. உங்க வீட்டு மருமகனாகப் போகிறவன். உங்க கணவருக்குச் சகோதரன் முறை வேண்டும். அதனால் தாராளமாகச் செய்யலாம். வேணும்ன்னா புரோகிதரை கேட்டு பாருங்க."

"அதான் தேவையில்லைன்னு சொல்றேன்ல." அவள் சிடுசிடுத்தாள்.

"நீ பயப்படுற துளசி." அவன் மரியாதை பன்மையில் இருந்து ஒருமைக்குத் தாவினான்.

"நான் எதுக்குப் பயப்படணும்?" அவள் சற்றும் சளைக்காது பதில் கூறினாள்.

"உயிரோடு இருக்கிறவனுக்குத் திதி கொடுக்க நீ பயப்படுற." அவனது வார்த்தைகளில் அவள் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்.

"என்ன உளர்றீங்க?"

"நான் உளறலை. நீ உளறியதில் இருந்து நான் கண்டுபிடித்து விட்டேன்."

அன்று நட்சத்திர உணவு விடுதியில் அவள் முதலில் திருமணமாகவில்லை என்று கூறினாள். பிறகு கிளம்பும் போது விதவை என்று கூறிவிட்டு சென்றாள். அதைத் தான் அவன் குறிப்பிட்டுச் சொன்னான்.

"என்ன கண்டுபிடிச்சீங்க?" துளசியின் தேகம் பயத்தில் நடுங்க துவங்கியது.

"உனக்கு இன்னமும் கல்யாணம் ஆகலைன்னு."

"இப்போ எதுக்கு இந்தத் தேவையில்லாத ஆராய்ச்சி." என்று அவனிடம் சிடுசிடுத்தவள்,

"நான் வர்றேன்." என்றவள் அவனைத் திரும்பியும் பாராது நடக்கத் துவங்கினாள். அவள் பின்னேயே வேக நடையுடன் வந்து இணைந்து கொண்டவன்,

"உண்மையை ஒத்துக்கணும் பேபி." என்க...

"நான் உண்மையைத் தான் சொல்றேன்."

"பொய் சொல்றடி... பத்து வருசமா பொய் சொல்லி என்னை ஏமாத்தி இருக்க. இதுக்கு உனக்குத் தண்டனை இருக்குடி."

அவனது வார்த்தைகளில் திடுக்கிட்டு அவனைப் பார்த்தவள் அவனுக்குப் பதில் கூறாது விறுவிறுவெனக் கடற்கரை மண்ணில் கால் புதைய நடந்தாள்.

'அவள் பொய் சொன்னாள்ன்னு கண்டுபிடிக்கவே உனக்குப் பத்து வருசமாகி இருக்கு. இந்த லட்சணத்தில் நீ அவளுக்குத் தண்டனை கொடுக்கப் போறியா. கர்ர்ர்... தூ...' அவனது மனசாட்சி காறி துப்பியது.

"காதல் வாழ்க்கையில் இது சகஜமப்பா..." அவன் அசடு வழிந்தான்.

"நாழியாகிருச்சு... சித்த வர்றேளா?" புரோகிதரின் அழைப்பில் அவன் தனது தந்தைக்குத் திதி கொடுக்கச் சென்றான்.

தந்தையின் புகைப்படத்தின் மீது பூக்களைப் போட்டு கொண்டிருந்தவன் மனதிற்குள், 'அப்பா, நீங்க ஆசைப்பட்ட மாதிரி அவள் கண்முன்னாடி முன்னேறி காட்டி விட்டேன். அதே போல் அவளை என் மனைவியாக்கி காட்டுகிறேன்.

இப்போ உங்களுக்குச் சந்தோசம் தானேப்பா?' அவன் தனது தந்தையிடம் கேட்டான்.

மகனது தியாகத்தை நினைத்து அந்தத் தந்தையின் ஆன்மா நிச்சயம் எல்லையில்லா உவகை அடைந்திருக்கும். அவர் மகனை ஆசிர்வதிப்பது போல் மெல்லிய மழை சாரல் வானில் இருந்து பன்னீராய் தூவியது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 14

"இங்கே எதுக்கு வர சொன்னீங்க கௌ? யாராவது பார்த்து விட்டால்..." அபிநயா சற்று கலவரத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"யார் பார்த்தால் எனக்கு என்ன?" என்று அவளை உரசி கொண்டு அமர்ந்த கௌதம்,

"ரசகுல்லா மாதிரி இருக்கடி... அப்படியே கடிச்சு திங்கணும் போலிருக்கு..." என்று அவளைப் பார்த்து மையலுடன் கூற...

"என்னது?" அவள் அவனைக் கண்டு முறைக்க...

"ஹி ஹி... இப்போ இல்லை ரசகுல்லா... கல்யாணத்து அப்புறமா சொன்னேன்." அவன் அசடு வழிய...

"அதானே பார்த்தேன்." அவள் நிம்மதி பெருமூச்சு விட...

"எங்கே பார்க்கிற...? நீ பார்க்காதது தான் என் பிரச்சனையே." அவன் வாய்க்குள் புலம்பினான்.

"எல்லாம் கொஞ்சம் நாள் தான் கௌதம். அப்புறம் நீயும், நானும் மட்டும் தான். கல்யாணம் முடிஞ்சதும் நாம பழையபடி லண்டனுக்குப் போயிரலாம். நமக்கு இந்த ஊர் செட்டாகாது."

"இப்போ தான்டி என் பொண்டாட்டியா பேச ஆரம்பிச்சு இருக்கிற. என் வருமானத்துக்குள், என் வசதிக்கு ஏற்ப என் மனைவியா நீ வாழ்ந்தால் போதும். இத்தனை சொத்துக்களோடு உன்னைப் பார்க்கிறப்போ யாரோ ஒருத்தி மாதிரி ஃபீல் வருது."

அவனது வருத்தம் புரிந்து அவள் அவனது கரத்தோடு தனது கரத்தை கோர்த்து கொண்டாள். இது தான் சாக்கு என்று அவன் அவளைத் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அவனை முறைக்க முயன்று தோற்றவள் பின்பு சிரித்து விட்டாள். அதைக் கண்டு அவனும் புன்னகைத்தான்.

"எனக்கு ஒரு உண்மையைச் சொல்லு... எப்போ தான் உன் மாமா உங்கக்கா கழுத்தில் தாலி கட்ட போகிறார்."

"துளசியைப் பத்தி உங்களுக்குத் தெரியாது கௌ. அவள் பிடிவாதம் பிடித்தால் பிடித்தது தான். அவள் மனதை யாராலும் மாற்ற முடியாது. ஒருவேளை அவள் அவரை விட்டு போன மாதிரி அவளே அவர் கிட்ட வரணும்ன்னு நினைக்கிறரோ என்னமோ? அவங்களுக்குள்ள ஏதோ பிரச்சனை இருக்கு. ஆனா அது என்னன்னு தான் தெரியலை. நான் பார்த்த வரை மாமா ஓகே. அக்கா கிட்ட தான் ஏதோ பிரச்சனை இருக்கு."

"அப்போ அவங்க சேர்றது கஷ்டம் தான்." என்றவனின் வாயில் அடித்தவள்,

"இப்படி எல்லாம் பேசினீங்க, கொன்னுருவேன். அதெல்லாம் ஒண்ணு சேருவாங்க. எனக்கு நம்பிக்கை இருக்கு. அவங்களுக்குள்ள ஆயிரம் பிரச்சனை இருந்தாலும் அதை விட அதிகமாய்க் காதல் இருக்கு. அது அவங்களை ஒண்ணு சேர்த்து வைக்கும்."

"எப்படியோ நம்ம ரூட் சரியானால் போதும்." என்றவன் தன் முன்னால் இருந்த ஐஸ்க்ரீமை எடுத்து அவளுக்கு ஊட்டிவிட்டான். அவளும் சிரித்தபடி பதிலுக்கு அவனுக்கு ஊட்டிவிட்டாள்.

மாதர் சங்க உறுப்பினர்களுடன் அங்கு ஏதேச்சையாக வந்த வேதா இந்தக் காட்சியைக் கண்டு திகைத்துப் போனார். அவர் தனது கூட்டத்தை முடித்துக் கொண்டு சத்தம் இல்லாது அங்கிருந்து வெளியேறி விட்டார். தான் அபிநயாவை பார்த்து விட்டதை அவர் காட்டி கொள்ளவில்லை. வீட்டிற்கு வந்தவர் கோபத்துடன் யோசித்தார்.

கௌதமும், அபிநயாவும் காதலர்கள். கௌதமை அறிமுகப்படுத்தியது விஸ்வஜித். அப்படி என்றால் அவர்கள் காதலிப்பது விஸ்வஜித்திற்குத் தெரிந்து இருக்கிறது. விஸ்வஜித்தின் குறிக்கோள் துளசி மட்டும்

தான் என்பது அவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகத் தெரிந்து போனது. விஸ்வஜித்தின் பார்வை எப்போதும் துளசி மேல் இருப்பது, அவள் மயங்கிய போது அவன் பதட்டத்துடன் அவளைத் தூக்கி கொண்டு மருத்துவமனைக்கு ஓடியது என்று எல்லாம் அவரது நினைவில் எழுந்து அவரைக் கோபத்தில் குமுற செய்தது. விஸ்வஜித் திட்டம் போட்டு காய் நகர்த்துவது அவருக்குப் புரிந்து போனது.

"எனக்கே ஆப்பு அடிக்கிறாயா, சின்னப் பயலே." அவர் விஸ்வஜித்தை திட்டி தீர்த்தார்.

விஸ்வஜித் மீதிருந்த அவரது ஆத்திரம் எல்லாம் அப்படியே துளசி மீது திரும்பியது. அவளைக் கொன்றுவிடும் அளவிற்குக் கொலைவெறி எழுந்தது. அவளைக் கொன்று விஸ்வஜித்தை தவிக்க விட எண்ணியது அவரது கொடூர மனம்.

"அவளைக் கொல்வதால் எனக்கு என்ன லாபம்? அவளை வதைப்பது தான் என் ஒரே நோக்கம். அதுக்கு உன்னைத் தான்டா கொல்ல வேண்டும். உன்னைக் கொன்று அவளைத் தவிக்க வைக்கிறேன். என்னை ஏமாத்தியதுக்கு உனக்கான தண்டனை இது." என்று அவர் ஆக்ரோசமாய்க் கத்தினார். அவரது மனதில் இருந்த பழிவெறி எதைப் பற்றியும் ஆராய விடவில்லை.

மறுநாளே விஸ்வஜித்தின் கார் விபத்திற்குள்ளானது. அவன் விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் இருக்கிறான் என்கிற செய்தி கேட்டதும் துளசியால் தான் போட்டுக் கொண்டிருந்த முகமூடியை தொடர முடியவில்லை. நெஞ்சமெல்லாம் துயரம் அடைக்க, இதயம் தடதடக்க அவள் மருத்துவமனை நோக்கி காரை செலுத்த ஆரம்பித்தாள்.

"விஷ்வுக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாது." அவளது இதழ்கள் ஓயாது புலம்பி தவித்தது.

மருத்துவமனையில் அவன் இருக்கும் அறையைத் தேடி ஓடியவள் அவனது அறையைக் கண்டுபிடித்ததும் அதனுள் புயல் போல் உள்ளே நுழைந்தாள். அங்கிருந்த விசாலம் அவர்களுக்குத் தனிமை கொடுக்க எண்ணி வெளியில் சென்றார். கட்டிலில் கண்மூடி படுத்திருந்த விஸ்வஜித்தை பார்த்தவள் வேகமாய் அவன் அருகே வந்து,

"விஷூ..." என்றபடி அவனது முகத்தைத் தனது தளிர் கரங்களால் வருடி கொடுத்தாள்.

ஆழ்ந்த நித்திரையில் இருந்தவன் அவளது அழைப்பில் மெல்ல மூடிய விழிகளுக்குள் கருமணியை உருட்டினான்.

"என்னை விட்டுட்டு போயிராதே விஷூ. உன் துளசி வந்திருக்கேன். ப்ளீஸ், கண் முழிச்சு பாரு." அவள் அழுதபடி அவனை அழைத்தாள். அதில் முழுவதுமாய் விழிப்பு தட்டியவன்,

"அடடே, என் துளசியா அழுவது? நம்ப முடியவில்லை... வில்லை, வில்லை..." என்று ராகம் இழுத்தபடி படுக்கையில் இருந்து எழுந்தமர்ந்து சோம்பல் முறித்தான்.

"விஷூ... நீ... உனக்கு... விபத்து." அவன் நன்றாக இருப்பதைக் கண்டு அவள் அதிர்ந்து போய் விழித்தாள்.

"ஹா ஹா... நம்பிட்டியா?" என்று அவன் சத்தம் போட்டு சிரிக்க...

"ப்ராடு, ஏமாத்துக்காரன்... பொய்யாடா சொன்ன." அவள் அவனைச் சராமாரியாகத் தாக்க...

"ஐயோ..." என்று அவன் அலறினான்.

"என்ன விஷூ...?" அவள் பயத்துடன் அவனைப் பார்த்தாள்.

"அங்கே அடிப்பட்டு இருக்கு." என்றவன் கையில் போடப்பட்டு இருந்த கட்டினை காட்டினான்.

"விபத்து உண்மை தான். நான் கார் ஓட்டிக்கிட்டு போகும் போது நேரெதிரே லாரி ஒண்ணு தாறுமாறா வந்தது.

ஆனால் நான் சுதாரிச்சிட்டு காரை ஒடிச்சுத் திருப்பிட்டேன். அதனால் பெரும் விபத்துத் தவிர்க்கப்பட்டது. லேசான காயம் தான்."

"ஓ..." அவள் சக்தி எல்லாம் வடிந்தார் போன்று அமர்ந்தாள்.

"பின்னே ஏன் கண்மூடி படுத்திருந்த?" அவள் அவனிடம் சிடுசிடுத்தாள்.

"கொஞ்ச நாளா சரியா தூக்கம் இல்லை. இங்கே ஏசி குளிரில், சத்தம் இல்லாத தனிமையில் அப்படி ஒரு தூக்கம் வந்தது. அதான் கொஞ்சம் அசந்துட்டேன். விட்டா, நீ எனக்குப் பாடை கட்டியிருப்ப போலிருக்கே." அவன் கிண்டலடித்துச் சிரிக்க... அவள் தனது கரம் கொண்டு அவனது வாயை பொத்தியவள்,

"ப்ளீஸ் விஷூ... வலிக்குது." என்று அவள் தனது விழிகளில் வலியை தேக்கி அவனைப் பார்த்து கூற...

"நீ பண்ணியதும் எனக்கு அப்படித் தான்டி வலிக்குது." அவனும் வலியோடு கூற... அதில் நிகழ்காலம் அவளுக்கு உறைத்ததில் அவள் தனது கரத்தை வெடுக்கென்று விலக்கி கொண்டாள்.

"ஒரு தடவை தொட்டாலும் தொட்டது தான். நீ என்னைத் தொட்டது தொட்டது தான். என்னைத் தொட்டதால் உன் கற்பு போய்விட்டது. அதனால் நீ என்னைத் தான் கல்யாணம் பண்ணி ஆகணும்." அவன் நமட்டு சிரிப்போடு கூற... அதைக் கேட்டு அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது.

"லூசு மாதிரி உளறாதே." அவள் கோபம் கொண்டு கத்தினாள்.

"நீ என்னைக் காதலிக்கிற தானே துளசி?" அவனது வார்த்தைகள் கூர்மையாய் வெளிவந்தது. அதில் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தவள்,

"இல்லை..." என்று மறுத்தாள் அழுத்தம் திருத்தமாய்...

"அப்போ எதுக்கு என்னைப் பார்க்க வந்த? நான் உயிரோடு இருந்தால் என்ன? செத்தால் என்ன? போ, இங்கிருந்து போடி..." அவனும் பதிலுக்குக் கத்தினான்.

"நான் உன்னைக் கேவலப்படுத்தி இருக்கேன். அவமானப்படுத்தி இருக்கேன். அப்படி இருந்தும் நான் தான் உனக்கு வேணுமா?" என்றவளை அவன் உறுத்து விழித்தான். அவனது உறுதியில் அவளது உறுதி குலைவது போல் ஒரு தோற்றம்.

"நான் உனக்குத் தகுதி இல்லாதவள் விஷு..." உணர்வுகள் துடைத்த முகத்துடன் அவள் கூறினாள்.

"அதை நான் சொல்லணும் துளசி."

"என்னை அவ்வளவு பிடிக்குமா விஷு?"

"உன்னை மட்டும் தான் எனக்குப் பிடிக்கும்."

"அப்போ நான் எதைச் சொன்னாலும் செய்வியா?"

"அது நீ சொல்லும் விசயத்தைப் பொறுத்து இருக்கு."

"நீ அபியை கல்யாணம் பண்ணி குழந்தை, குட்டின்னு சந்தோசமா இருக்கணும்." என்றவளை அவன் முறைத்துப் பார்த்தான். அவள் சட்டென்று அவனது கையை எடுத்து தனது தலை மீது வைத்துக் கொண்டு,

"சத்தியம் பண்ணு விஷு." என்று கூற...

"சத்தியம் பண்ணு விஷு..." அவளைப் போல் அவன் கூறி கிண்டலடிக்க...

"ப்ளீஸ் விளையாடாதே. கல்யாணம் பண்றேன்னு சொல்லு." என்றவளின் விழிகளுக்கு ஊடுருவி பார்த்தது அவளது இதயத்தைப் படிக்க முனைந்தபடி,

"நிச்சயம் கல்யாணம் பண்ணிக்குவேன்." என்று கூற... அதில் முகம் மலர்ந்தவள்,

"தேங்க்ஸ் விஷூ. இப்ப தான் சந்தோசமா இருக்கு." என்று புன்னகைத்தவள் அவனிடம் விடைபெற்று சென்றாள்.

காதலன் திருமணம் செய்து கொள்ளப் போவதை நினைத்துச் சந்தோசப்படும் முதல் காதலி இவளாகத் தான் இருக்க முடியும் என்று அவன் மனதிற்குள் சலித்துக் கொண்டான்.

"மருமக பொண்ணு என்னடா சொல்றா?" என்று கேட்டபடி விசாலம் அங்கு வந்தார்.

"வேறென்ன சொல்வாள்... கல்யாணம் பண்ணிக்கச் சொல்கிறாள்."

"அப்போ துளசி கல்யாணத்துக்குச் சம்மதிச்சிட்டாளா?"

"உங்க மருமக சம்மதிச்சிட்டாலும்... அவளுக்குச் சக்களத்தி வேணும்ன்னு சொல்லிட்டு போறாள்."

"அடேய் விச்சு, யாருக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டம் அடிக்கும். மேலிடமே க்ரீன் சிக்னல் காட்டியிருக்கு. ஜமாய்டா ராசா." என்று விசாலம் கண்சிமிட்டி சிரிக்க...

"அம்மா..." என்று அவன் கத்திய கத்தலில் அவர் நமட்டு சிரிப்போடு வாயை மூடி கொண்டார்.

அதன் பிறகு வந்த நாட்கள் அமைதியாகச் சென்றது. அலுவலகத்தில் இருந்த விஸ்வஜித்திற்குக் காவல்நிலையத்தில் இருந்து அழைப்பு வந்தது. எடுத்து பேசியவனின் முகம் இருண்டு போனது. இனியும் தாமதிப்பது நல்லதல்ல என்று நினைத்தவன் தனது அடுத்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்தான்.

**********************

அலுவலகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்த துளசி வீட்டில் வேதா இல்லாததை உணர்ந்து 'அவர் எங்கே?' என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது அவளது அலைப்பேசி அழைத்தது. அபிநயா தான் அவளுக்கு அழைத்திருந்தாள். அதை எடுத்தவள்,

"என்ன அபி?" என்று கேட்க...

"அக்கா, ஐயம் சாரிக்கா..."

"எதுக்குடி?"

"அக்கா, எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பம் இல்லை. நான் காதலித்த கௌதமை கல்யாணம் பண்ண போகிறேன். காளிகாம்பாள் கோவிலில் வைத்து இன்னைக்கு எங்களுக்குக் கல்யாணம். முடிந்தால் இங்கே வந்து எங்களை ஆசிர்வாதம் பண்ணுக்கா."

"ஏய், என்னடி சொல்ற?" துளசியால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. அவளுக்குத் தங்கையை நினைத்து ஏற்பட்ட கவலையை விட விஸ்வஜித்தை நினைத்து தான் பெரும் கவலையாக இருந்தது.

"பத்து டூ பதினொண்ணு தான் முகூர்த்தம். நீ கண்டிப்பா வாக்கா." என்றவள் அழைப்பை துண்டித்து விட்டாள்.

"ச்சே..." என்றவள் வேதாவை மறந்து தனது காரை நோக்கி ஓடினாள்.

ஒருவழியாகப் போக்குவரத்து நெரிசலில் நீந்தி அடுத்த அரை மணி நேரத்தில் கோவிலுக்குப் போய்ச் சேர்ந்தாள். அபிநயாவை தேடியபடி வந்தவளின் முன்னே அபிநயாவே தரிசனம் தந்தாள். பட்டு புடவை கட்டி அழகாக இருந்த தங்கையைக் கண்டு நியாயத்திற்கு அவள் மகிழ்ந்திருக்க வேண்டும். மாறாக ஓங்கி அவளது கன்னத்தில் ஒரு அறை விட்டாள்.

"உன் சந்தோசம் தான் உனக்கு முக்கியமா போயிருச்சா? உனக்கு நிச்சயிக்கப்பட்ட விஷூவை கொஞ்சமாவது நினைச்சு பார்த்தியா? ஏற்கெனவே மனக்கஷ்டத்தில் இருக்கும் அவருக்கு நீயும் கஷ்டம் கொடுக்கிறியா?" என்று கோபமாய்ப் பேசியவளை கையமர்த்தித் தடுத்த அபிநயா,

"என்னை விட, என் மனசை விட உனக்கு அவர் தான் முக்கியமா போயிட்டாரா?" என்று கோபத்துடன் கத்த...

"அது வந்து..." துளசி பதில் சொல்ல முடியாது திணறினாள்.

"ஏன்னு நான் சொல்லட்டா? நீ அவரைக் காதலிக்கிற. உனக்கு அவரை ரொம்பப் பிடிக்கும். அதான் தங்கை என் மனசை விட அவர் மனசை நீ பார்க்கிற."

"ஆமாம்டி, எனக்கு விஷ்ஷோவோட வாழ்க்கை முக்கியம். அவனோட சந்தோசம் முக்கியம். அவனோட வாரிசுகள் முக்கியம். போதுமா?"

"போதுமே... இது போதுமே..." என்று கண்சிமிட்டி சிரித்த தங்கையைத் துளசி புரியாது பார்க்க...

"அங்கே பார் புரியும்..."

அபிநயா காட்டிய திசையில் பட்டு வேட்டி, பட்டுச் சட்டை அணிந்து கம்பீரமாக விஸ்வஜித் நடந்து வந்து கொண்டிருந்தான். துளசி திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

"எனக்கு எது எல்லாம் முக்கியம்ன்னு நீ சொன்னது கேட்டு ரொம்பச் சந்தோசமா இருக்கு துளசி. ஆனா எனக்கு என்ன முக்கியம்ன்னு நான் சொல்லட்டா? எனக்கு நீ முக்கியம். நீ எனக்கு மனைவியாக வருவது மட்டுமே முக்கியம்." என்றவன் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு சுவாமி சந்நிதானத்தை நோக்கி விறுவிறுவென நடந்தான். துளசி திக்பிரம்மை பிடித்தார் போன்று அவன் இழுத்த இழுப்பிற்கு உடன்பட்டாள்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 15

தனது கழுத்தில் இருந்த தாலியை நம்ப முடியாது பார்த்த துளசி பின்பு விஸ்வஜித்தை ஏறிட்டு பார்த்தாள். அவளது விழிகள் கலங்கி சிவந்தது. 'ஏன்டா இப்படிப் பண்ணின?' அவள் கோபமாய் அவனைப் பார்க்காது... அவனிடம் விழிகளால் யாசித்தாள். அதை அவன் சிறிதும் கண்டு கொள்ளவில்லை.

"உனக்குப் பண்ணிய சத்தியத்தை நிறைவேற்றி விட்டேனா பேபி?" அவனது கேள்விக்குப் பதில் தெரியாது விழித்தவளை கண்டு,

"அதாம்மா, கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னது." என்று கண்சிமிட்டி குறும்புடன் சிரித்த விஸ்வஜித் குதூகல மனநிலையில் இருந்தான்.

அவனது காத்திருந்த காதல் அவனது கை வந்து சேர்ந்து விட்டது. இதை விட அவனுக்கு வேறென்ன வேண்டும். இனி எல்லாவற்றையும் தன்னவளின் துணை கொண்டு அவன் எதிர் கொள்வான். அவள் அவனுடன் இருப்பதே அவனது பெரும் பலம். அதை அவன் இப்போது நன்கு உணர்ந்திருந்தான். திடுமென வாழ்க்கையே வண்ணமயமாகி விட்டது போல் ஒரு தோற்றம் அவனுள்...

"என் வாழ்க்கையை நேர் செய்ய நினைச்சு உன் வாழ்க்கையைப் பாழாக்கிட்டியே விஷ்ஷு?" அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது.

"ஷ், துளசி... அம்மா, மதுரா, அபிநயா எல்லோரும் நம்மளையே பார்க்கிறாங்க பார்." அவன் அவளுக்கு அறிவுறுத்த... அவளுக்கு இருந்த மனநிலையில் அவனுக்கு எப்படித் தன் விசயம் தெரியும்? என்பதை யோசிக்க மறந்தாள்.

அப்போது தான் துளசி சுற்றிலும் கவனித்தாள். விசாலம், மதுரா இவர்களைப் புன்னகையுடன் பார்த்திருப்பதைக் கண்டு வியப்புற்றாள். விஸ்வஜித் அவளை ஏற்றுக்

கொண்டது அவள் மீது கொண்ட காதலால் என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவனது குடும்பத்தினர் அவளை ஏற்றுக் கொண்டது அவளுக்குப் பெரும் வியப்பாக இருந்தது. அவர்களது மகனை அவமானப்படுத்திய பெண்ணை இன்முகத்துடன் ஏற்றுக் கொள்ளும் அவர்களைக் கண்டு அவளது மனம் நெகிழ்ந்தது. அவர்களுக்காக அவள் முகத்தைச் சந்தோசமாக வைத்து கொண்டாள். ஆனாலும் மனதின் ஓரம் முணுக்முணுக்கென்று வலித்தது.

"எல்லோருக்கும் நம் காதல் தெரியும்." விஸ்வஜித் அவளது மனதினை படித்தவனாய் அவளது காதுகளில் ரகசியம் பேசினான்.

"அப்போ மண்டபம் புக் பண்ணியது, அழைப்பிதழ் அடித்தது எல்லாம்..." அவள் புரியாது அவனைப் பார்த்தாள்.

"கௌதம், அபி கல்யாணத்துக்குத் தான்... கௌதமுக்கு யாரும் கிடையாது. நாம் தான் எல்லாம் எடுத்து செய்யணும்."

விஸ்வஜித் சொன்னதும் துளசி கௌதமை திரும்பி பார்த்தாள். அவனோ கன்னத்தில் கை வைத்தபடி அவளைப் பயத்துடன் பார்த்தான். அவன் அருகில் வந்தவள் அவனிடம்,

"சாரி..." என்க...

"இட்ஸ் ஓகே அண்ணி. அண்ணாவை அடிக்காம பத்திரமா பார்த்துக்கோங்க. என் கண்ணையே உங்க கிட்ட ஒப்படைக்கிறேன்." என்று அவன் விழிகளைத் துடைத்தபடி வசனம் பேச... எல்லோரும் வாய்விட்டு சிரித்து விட்டனர்.

இருவரும் விசாலம் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினர். அவர்,

"சீக்கிரம் பேரனையோ, பேத்தியையோ பெத்து கொடுங்க..." என்று ஆசிர்வதிக்க... அதைக் கேட்டு துளசியின் முகம் ஒரு மாதிரியாய் மாறியது. அவளது முக

மாற்றத்தை உணர்ந்த விஸ்வஜித் அவளது கையை ஆதரவாகப் பிடித்துக் கொண்டான். அது அவளுக்குச் சற்று ஆறுதலை கொடுத்தது.

மணமக்கள் வீட்டிற்குக் கிளம்பினர். கௌதம் கார் ஓட்ட முன்னால் அபிநயா அமர்ந்து கொண்டாள். பின்னால் விஸ்வஜித், துளசி இருவரும் அமர்ந்திருந்தனர். அவள் வெளியில் தெரிந்த கோவில் கோபுரத்தை அண்ணாந்து பார்த்தாள். அவள் இங்கே வரும் போது இருந்த மனநிலை என்ன? இப்போது அவள் செல்லும் மனநிலை என்ன? அந்த நிலையிலும் அவளால் விஸ்வஜித் மீது கோபம் கொள்ள முடியவில்லை. அவனைக் கண்டு அவளுக்குப் பாவமாக, இரக்கமாக இருந்தது.

அவளது பத்து வருட காதல், திருமணத்தில் முடிந்த சந்தோசம் அவளிடம் இல்லை. மாறாகக் கணவனின் வாழ்க்கையைப் பாழாக்கி விட்டோமே என்கிற பரிதவிப்பே அவளிடம் அதிகம் காணப்பட்டது. அவளின் விழிகளில் இருந்து கண்ணீர் துளிகள் கன்னத்தில் உருண்டோடியது. அவளையே பார்த்துக் கொண்டிருந்த விஸ்வஜித் அவளது கண்ணீரை தனது கையில் தாங்கி கொண்டான்.

"போதும் துளசி... நீ இதுவரை அழுதது போதும். உன் துன்பத்தைத் தனியே தாங்கியது போதும். இனி இன்பமோ, துன்பமோ நான் எப்போதும் உன்னுடன் இருப்பேன்." என்றவனது கரங்கள் அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டது.

கணவனது தொடுகையில், வார்த்தையில் துளசி அப்படியே உடைந்து போனாள். அவனது சட்டை காலரை பற்றியபடி சிறு குழந்தை போல் அவள் அவனது நெஞ்சில் சாய்ந்து தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள். அவளது துயரம் உணர்ந்தவனாய் அவன் ஆறுதலாய் அவளது முதுகினை நீவி விட்டான்.

முன்னால் இருந்த இருவருக்கும் துளசி அழும் சத்தம் கேட்டாலும் திரும்பி பார்க்கவில்லை. விஸ்வஜித் அவளைப்

பார்த்து கொள்வான் என்று நம்பிக்கை கொண்டனர். விஸ்வஜித் வீடு வந்ததும் அபிநயா,

"அக்கா, மாமா வீடு வந்தாச்சு." என்று கூற...

சட்டென்று துளசி விஸ்வஜித்தை விட்டு விலகி அமர போனாள். அவன் அவளை விலகாது தடுத்தவன் அவளது கழுத்தில் இருந்த மாலையைச் சரி செய்தவன் பின்பு அழுததில் கலைந்திருந்த அவளது கேசத்தை ஒதுக்கி விட்டு அவளது முன்நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டவன்,

"கடந்த காலத்தை மறந்துவிடு துளசி. இப்போது நீயும், நானும் கணவன் மனைவி... நம்முடைய சந்தோசமான வாழ்க்கையை மட்டும் நினைத்து பார். என்னை நம்பி வா... உன்னைக் காலம் முழுவதும் கண் கலங்காம பார்த்து கொள்வேன்." என்று காதலோடு கூறினான்.

"உன்னை நம்பாமலா விஷூ..." என்றவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

"த்ச்சு... சொன்னேன் தானே." அவன் அவளைச் செல்லமாய்க் கடிந்தான்.

"நீ சந்தோசமா இருந்தால் தான், நான் சந்தோசமா இருப்பேன். எனக்காக ப்ளீஸ்..." அவன் இறைஞ்சுதலாய் கேட்க...

"உனக்காக எதையும் செய்வேன் விஷூ..." என்றவள் காரை விட்டு கீழிறங்கினாள்.

மதுரா ஆரத்தி கரைத்து வரவேற்க... மணமக்கள் இருவரும் வலதுகாலை எடுத்து வைத்து உள்ளே நுழைந்தனர். விசாலம் மருமகளைப் பூஜையறையில் விளக்கேற்ற சொல்ல... துளசி பூஜையறையை நோக்கி சென்றாள். அவளைப் பின்தொடர்ந்து வந்த விஸ்வஜித் அங்கிருந்த தனது தந்தையின் புகைப்படத்தைப் பார்த்தபடி,

"அப்பா தான் நீ இந்த வீட்டு மருமகளா வரணும்ன்னு ரொம்ப ஆசைப்பட்டார்." என்று கூற... அதைக் கேட்டு அவள்

ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"என்னுடைய சந்தோசம் நீ தான் என்பது அவருக்குத் தெரியும். அவர் இறக்கும் வரை அவர் ஆசைப்பட்டது நடக்கவில்லை." அவன் பெருமூச்சு விட்டான்.

அதைக் கேட்டு துளசியின் விழிகள் கலங்கியது. மௌனமாக விளக்கேற்றியவள் அறிவழகன் புகைப்படத்தின் முன் கை கூப்பி நின்றாள்.

'தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள் மாமா. நான் வேண்டும் என்றே உங்க மகனை விட்டு பிரியவில்லை. என் சூழ்நிலை அப்படி... அவரது வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்று தான் பிரிந்தேன். ஆனால் இப்போது எல்லாமே மாறிவிட்டது. உங்க மகனது வாழ்க்கையைப் பாழாக்கி விட்டேனோ என்று என் உள்ளம் குற்றவுணர்ச்சியில் குறுகுறுக்கிறது. நான் என்ன செய்வேன்?' அவள் விழிகள் கலங்கி நின்றாள்.

"துளசி..." கணவனது அழைப்பில் அவள் அவனைத் திரும்பி பார்த்தாள்.

"வா..." என்று கூப்பிட... அவள் மௌனமாக அவன் பின்னே சென்றாள்.

மணமக்களுக்குப் பால், பழம் கொடுத்ததும் துளசியை ஓய்வு எடுக்கக் கூறினர். அவளோ வேண்டாம் என்றுவிட்டு எல்லோருடனும் அமர்ந்து இருந்தாள். இவ்வளவு களேபரத்தில் அவளுக்கு வேதாவை பற்றிய நினைவு வரவில்லை. இப்போது ஞாபகம் வந்ததும் அவளது முகம் பயத்தில் வெளிறிப் போனது. அபிநயாவுக்குப் பேசிய மணமகனை அவள் மணம் முடித்து இருக்கிறாள் என்று தெரிந்தால் அவர் என்ன கூறுவாரோ? ஆத்திரத்தில் முகத்தில் காறி துப்புவாரோ? அவளுக்குப் பயத்தில் தேகம் நடுங்கியது.

"துளசி, என்னாச்சு?" அவளது மாற்றத்தை உணர்ந்து விஸ்வஜித் அவளது தோள் பற்றி உலுக்கினான்.

"அம்மா..." அதுக்கு மேல் அவளது வாயில் இருந்து வார்த்தை வரவில்லை. அதைக் கேட்டதும் விஸ்வஜித்தின் முகம் இறுகி போனது.

"அவங்க இங்கே இருந்தால் நம் கல்யாணம் நடக்காது என்பது எனக்குத் தெரியும். அதனால் அவங்களை இரண்டு நாள் பயணமாகப் பெங்களூர் அனுப்பி இருக்கிறேன்." என்று கூறினான். இதையே தான் அவன் அபிநயாவிடம் கூறி இருந்தான். ஆனால் உண்மை நிலவரம் என்ன? என்பது அவனுக்கு மட்டும் தானே தெரியும்.

அதில் சற்றுச் சமாதானம் அடைந்தாலும், "அவங்க என்னை ரொம்பக் கேவலமா நினைப்பாங்களோ? அசிங்கமா திட்டுவாங்களோ? என்னை ஒரு மாதிரி பெண் என்று..." மேலே கூற போனவள்,

"துளசி..." விஸ்வஜித்தின் அதட்டலில் அப்படியே வாயை மூடி கொண்டாள்.

"நீ துளசியைப் போன்று பவித்ரமானவள். உன்னைப் பற்றித் தவறாகப் பேச இங்கு யாருக்கும் அதிகாரம் இல்லை. அது உன் அம்மாவாக இருந்தாலும் கூட..." அவன் அடக்கப்பட்ட கோபத்துடன் கூறினான். அதன் பிறகு அவள் வாயை திறக்கவில்லை.

அபிநயா வீட்டிற்குக் கிளம்பும் முன் அக்காவை தனியே சந்தித்து, "மாமா ரொம்ப நல்லவருக்கா. அவரை மட்டும் நீ யோசி. அது போதும். பெஸ்ட் ஆஃப் லக்." என்று அவளை வாழ்த்திவிட்டு கிளம்பினாள்.

இரவு வந்ததும் உணவை முடித்துக் கொண்டு மதுரா கணவன், குழந்தையோடு அவளது வீட்டிற்குக் கிளம்பிவிட்டாள். விசாலமும் தனது அறைக்குச் சென்றுவிட்டார். விஸ்வஜித்தும், துளசியும் மட்டும் அங்குத் தனித்து இருந்தனர்.

"வா துளசி... நம் அறைக்குப் போகலாம்." அவன் அவளது கைப்பிடித்து அழைத்துச் சென்றான்.

அவனது அறைக்குள் நுழைந்தவளுக்குக் கட்டிலை கண்டதும் அழுகை முட்டி கொண்டு வந்தது. தனது இயலாமையை அவனிடத்தில் கோபமாய்க் காட்ட துவங்கினாள். அறை கதவை சாற்றிவிட்டு திரும்பியவனின் நெஞ்சில் அவள் மாறி மாறி அடிக்கத் துவங்கினாள். அவளது செய்கையில் முதலில் திகைத்தவன் பின்பு அமைதியாக அவ்வளவு அடிகளையும் தாங்கி கொண்டு நின்றான். அப்படியாவது மனைவியின் மனப்பாரம் குறைந்தால் போதும் என்றே அவன் நினைத்தான். சில நிமிடங்களில் ஓய்ந்து போனவளாய் அவள் முகத்தை மூடி கொண்டு அழுதாள்.

"ப்ச், இப்போ எதுக்கு இந்த அழுகை?" அவன் அவளைப் பிடித்திழுத்து தனது கையணைப்பில் கொண்டு வந்தான். முதலில் திமிறியவள் பிறகு அவனது நெஞ்சில் முகம் புதைத்து அழுதாள். அவன் அவளை ஆறுதலாய் அணைத்தபடி அழைத்துக் கொண்டு வந்து கட்டிலில் அமர வைத்தான்.

"எதுக்குடா என்னைக் கல்யாணம் பண்ணின? என்னால் உனக்கு எந்தச் சுகத்தையும் கொடுக்க முடியாது. என்னால் உனக்கு வாரிசு பெற்று கொடுக்க முடியாது. நான் தரிசு நிலம். எனக்கு, எனக்கு..." என்று மேலே சொல்ல முடியாது தேம்பியவளை கண்டு,

"எனக்கு எல்லாம் தெரியும் துளசி..." என்க... அவள் அதிர்வுடன் அவனை ஏறிட்டு பார்த்தாள்.

"எல்லாம் தெரிஞ்சிருந்தும் ஏன் இப்படிப் பண்ணின?" அவள் மனத்தாங்கலுடன் கேட்டாள்.

"பத்து வருசத்துக்கு முந்தி நடந்த விபத்தில் உனக்கு வயிற்றில் அடிப்பட்டதில் உன்னுடைய கர்ப்பப்பை சிதிலமடைந்து போயிருச்சு. அதனால் அதை நீக்கிட்டாங்க. உன்னால் தாயாக முடியாது. இதுக்காகத் தான் நீ என்னை விட்டு பிரிஞ்சு போன. எல்லாம் எனக்குத் தெரியும் துளசி." அவன் கூறியதை கேட்டு அவளது விழிகளில் கண்ணீர்

வழிந்தது. அப்போதும் அவனுக்கு அது எப்படித் தெரியும்? என்று அவள் யோசிக்கவில்லை.

"காதல்ன்னா என்னடி நினைச்ச? வெறும் செக்ஸ்க்காக மட்டும் தான்னு நினைச்சியா? உன்னுடைய உடம்புக்காகத் தான் நான் உன் பின்னாடி அலைஞ்சேன்னு நீ நினைச்சியா? அவ்வளவு தானா என் காதல் மீதான உன் மதிப்பீடு." அவன் விரக்தியாய் கேட்டான்.

"உன் நல்லதுக்காகத் தான் விஷ்ணு..." அவள் தயங்க...

"எதுடி என் நல்லது? என்னை உயிரோடு கொன்னுட்டு போறதா? உன்னைப் பிரிஞ்சதுக்குப் பிறகு நடைபிணமா அலைஞ்சேனே. அது உனக்குத் தெரியுமா? பணம் இல்லைங்கிறதுக்காக என்னை விட்டு போய்விட்டாளான்னு தினம் தினம் மனசுக்குள் அழுதேனே. அது உனக்குத் தெரியுமா?"

"தெரியும் விஷ்ணு... நீ ரொம்ப நல்லவன். என்னை விட்டு பிரிஞ்சா நீ தாங்க மாட்டேன்னு எனக்கு நல்லா தெரியும். தெரிஞ்சு தான் விலகி போனேன். ஏன்னா நீ குழந்தை, குட்டின்னு சந்தோசமா வாழணும் விஷ்ணு. உன்னோடு உன் குடும்பத் தலைமுறை முடிந்து போறதை நான் விரும்பலை. உன் குடும்பம் வாழையடி வாழையாகத் தழைச்சு வாழணும். அதுக்காகத் தான் நான் உன்னை விட்டு பிரிஞ்சு போனது. காதல் நல்லதை மட்டும் தான் நினைக்கும். நான் உனக்கு நல்லதை மட்டும் தான் நினைத்தேன்."

"குழந்தை மட்டும் தான் வாழ்க்கையா?" அவன் ஆதங்கத்துடன் கேட்டான்.

" நிச்சயம் விஷ்ணு... குழந்தைகள் மட்டும் தான் வாழ்க்கை. இன்னும் சில வருடங்களில் நமக்கு ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க சலிப்படைந்து போகலாம். அப்போ நிச்சயம் குழந்தை இல்லாத ஏக்கம் தலை தூக்கும். குழந்தைங்க வாழ்க்கையில் ஒரு அங்கம்." என்றவளை கூர்மையாகப் பார்த்தவன்,

"என் வாழ்க்கையில் நீ மட்டும் தான் அங்கம். குழந்தைகள் இல்லை. என் காதலை, என் மனசை நீ புரிஞ்சிக்கிற வரைக்கும் நாம் தள்ளியே இருப்போம். குழந்தைகள் வேண்டாம். நீ தான் வேணும்ன்னு நீ என்னைத் தேடி வரப்போ நாம நம்ம வாழ்க்கையை ஆரம்பிப்போம்." என்றவன் கட்டிலில் மறுபக்கம் வந்து படுத்துக் கொண்டான்.

துளசி செய்வதறியாது அவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்!

தொடரும்...!!!

## அத்தியாயம் : 16

அதிகாலையில் வழக்கம் போல் எழுந்த துளசி முதலில் தான் எங்கிருக்கிறோம்? என்று தெரியாது திகைத்தவள் பின்பு எல்லாம் ஞாபகத்தில் வர சட்டென்று திரும்பி பார்த்தாள். அங்கு விஸ்வஜித் சீரான மூச்சுடன் மல்லாக்க படுத்திருந்தான். மின்விசிறி காற்றில் முன்னுச்சி முடி அலைபாய அவன் தூங்கி கொண்டிருந்தவிதம் அத்தனை அழகாக இருந்தது. 'இவன் என்னவன்!' என்கிற பெருமை அவளது முகத்தில் தானாக வந்து ஒட்டி கொண்டது. மெல்லிய புன்னகையுடன் எழுந்தவள் குளியலறைக்குள் புகுந்தாள். குளித்து முடித்து வந்தவள் அபிநயா முன்னேற்பாடாய்க் கொண்டு வைத்திருந்த தனது உடமைகளில் இருந்து புடவையை எடுத்து கட்ட துவங்கினாள். அவள் அறையை விட்டு வெளியேறும் போது தான் விஸ்வஜித் எழுந்தான். அவன் எழுவதைக் கண்டு அவள் அப்படியே நின்றாள்.

விஸ்வஜித் தன் கண் முன்னால் அழகு ஓவியமாக நின்றிருக்கும் மனைவியை நம்ப முடியாது பார்த்தான். எத்தனை நாள் கனவு இது! இன்று நிறைவேறி இருப்பதை நினைத்து அவன் எல்லையில்லா உவகை அடைந்தான். அவனின் பார்வையை உணர்ந்தவள் அவன் அருகில் வந்தாள்.

"குட்மார்னிங் விஷூ." என்க... அவன் இன்னமும் நம்ப முடியாதவனாய் அவளை அதிசயமாய்ப் பார்த்திருந்தான். அவன் முன் தன் கையை நீட்டி,

"தொட்டு பாரேன்." அவள் கூறியதும் அவனது முகத்தில் வெளிச்சம் பரவியது. அவளது கையைப் பிடித்தபடி,

"முடிவை மாத்திக்கிட்டியா...?" அவன் வாயெல்லாம் பல்லானான்.

"சும்மா தான் தொட்டு பார்க்க சொன்னேன். நீ நம்பாத மாதிரி என்னைப் பார்த்த இல்லையா? அதுக்குத் தான்..."

என்றவளை கண்டு அவனது முகம் காற்று போன பலூனாய் சுருங்கி போனது.

"இதுக்குத் தொட சொல்லாமல் இருந்திருக்கலாம்."

அவன் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு எழுந்தான். சிறு பிள்ளை போன்ற அவனது செயலில் அவளது இதழ்களில் தானாகப் புன்னகை அரும்பியது. அவனது கையைப் பிடித்தவள் அவனது புறங்கையில் தனது இதழ்களை அழுத்தமாய்ப் பதித்துவிட்டு ஓடிவிட்டாள். அவளது செயலில் இனிமையாக அதிர்ந்தவன் பின்பு தனக்குள் புன்னகைத்துக் கொண்டான்.

"பரவாயில்லை, நாட் பேட்... ஒருநாள் இரவில் பெரிய மாற்றம் தான்." அவன் தோள்களைக் குலுக்கியபடி குளியலறைக்குள் புகுந்தான்.

கீழே வந்த துளசி விசாலம் சமையலறையில் இருப்பதைக் கண்டு அங்கு நுழைந்தாள். தயங்கியபடி வந்த மருமகளைக் கண்டு புன்னகைத்தவர்,

"வாம்மா துளசி..." என்க... அதில் சற்று தெளிந்தவள் அவரைப் பார்த்து புன்னகைத்தாள்.

"இங்கே சமையல் வேலைக்கு மட்டும் ஆள் கிடையாது. ஆனா மசாலா அரைக்க, காய் வெட்டி கொடுக்க ஆள் இருக்கு. நமக்கு அடுப்பில் வச்சு இறக்கிறது ஒண்ணு தான் வேலை. உங்க வீட்டில் சமையல் வேலைக்கு எல்லாம் ஆள் இருக்கா?"

"ம்..." என்று அவள் மெல்ல தலையாட்டினாள்.

"நீ பெரிய கம்பெனியை நிர்வாகம் பண்ணுகிறவள்ன்னு சொன்னால் யாரும் நம்ப மாட்டாங்க." என்றவரை அவள் புரியாது பார்க்க...

"அவ்வளவு சாஃப்ட்டா இருக்க..." என்றவர் அவளது கன்னத்தை வாஞ்சையுடன் வருடினார். பிறகு திரும்பி பாலை காய்ச்சியவாறு,

"விச்சுவுக்கு நாம சமைச்சால் தான் ரொம்பப் பிடிக்கும். அவன் ஹோட்டல் நடத்தினாலும் அங்கே எல்லாம் சாப்பிட மாட்டான். எவ்வளவு லேட்டான்னாலும் வீட்டுக்கு வந்து தான் சாப்பிடுவான். ஆமா, உனக்குச் சமைக்கத் தெரியுமா?" என்று கேட்க…

"தெரியாது…" என்றவள் விழித்தாள்.

"ம்மா, நான் என்ன சமையலுக்கா ஆள் எடுத்து இருக்கேன்? துளசிக்குச் சமைக்கத் தெரியலைன்னா என்ன? எனக்குத் தான் நல்லா சமைக்கத் தெரியுமே. நான் செஞ்சிட்டு போறேன்." என்றபடி அங்கு வந்து சேர்ந்தான் விஸ்வஜித்.

"ரொம்ப நல்லதா போச்சு விச்சு. இன்னையில் இருந்து நீயே சமைச்சிரு. காலையில் வடை, பூரி, பொங்கல், இட்லி, சட்னி, சாம்பார் வச்சிரு." என்றவர் இருவருக்கும் தனிமை கொடுக்க எண்ணி அங்கிருந்து அகல…

"ம்மா… இது அநியாயம்." என்று அவன் அவரைக் கண்டு கத்த…

"இது தான் நியாயம் மை சன். பொண்டாட்டிக்காகச் சமைக்கிறவன் அம்மாவுக்காகச் சமைச்சா ஒண்ணும் குறைஞ்சி போக மாட்ட."

"மாமியார் கெத்து… உங்களை…" என்று முணுமுணுத்தபடி திரும்பியவன் தனக்கு முதுகு காட்டி நின்று கொண்டிருந்த மனைவியைக் கண்டதும் அவனுள் உல்லாசம் வந்து ஒட்டி கொண்டது. விசிலடித்தபடி அவள் பின்னால் வந்து நெருக்கமாய் நின்றவன்,

"ஹேய் பொண்டாட்டி… திரும்பி நின்னுக்கிட்டு என்னடி பண்ற?" என்றபடி அவளைத் தன்புறமாய்த் திருப்பியவன் அவளது விழிகளில் இருந்து கண்ணீர் வழிவதை கண்டு திகைத்தான்.

"இப்ப எதுக்குடி அழுற?"

"உங்களுக்கு நல்ல மனைவியா தான் இருக்க முடியலை. அட்லீஸ்ட் சமைச்சாவது கொடுக்கலாம்ன்னா... அதுவும் எனக்குத் தெரியாது. நான் சுத்த வேஸ்ட்." கண்களைக் கசக்கி கொண்டு அழுதவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"சமைச்சா தான் நல்ல மனைவின்னு யார் சொன்னது?" அவள் பேந்த பேந்தவென்று விழித்தாள்.

"காலேஜ் படிக்கும் போது போண்டாவை சாப்பிட்டுட்டு உள்ளே எப்படி உருளைக்கிழங்கை வச்சாங்கன்னு நீ கேட்டப்பவே எனக்குத் தெரியும்டி... உனக்குச் சாப்பிட மட்டும் தான் தெரியும். சுட்டுப் போட்டாலும் சமைக்க வராதுன்னு." அவன் தன்னைக் கேலி செய்வதைக் கண்டு மீண்டும் அவளது விழிகளில் கண்ணீர் நிரம்பியது.

"திரும்பவும் அழுகையா?" போலி சலிப்புடன் அவன் வினவ...

"இல்லை... பொண்டாட்டிக்கு சமைச்சு கொடுக்கும் கணவன் எத்தனை பேருக்கு அமையும். நீங்க ரொம்ப நல்லவங்க. அதை நினைச்சு நான் வடிக்கும் ஆனந்த கண்ணீர் இது." என்று அவள் பதிலுக்கு அவனைக் கிண்டலடித்தாள்.

"ஆகமொத்தம் சமைக்கப் பழகும் ஐடியா இல்லை... அப்படித்தானே?"

"அதான் நீங்க இருக்கீங்களே..." அவளிடம் பழைய குறும்பு திரும்பியது. அதைக் கண்டு ரசித்தவனாய் அவன்,

"அடிங்..." என்றபடி அவளை நோக்கி கையை ஓங்கி கொண்டு வர...

"அத்தை..." என்றபடி அவள் வரேவற்பறையை நோக்கி ஓடினாள்.

விசாலம் இருவரையும் மனநிறைவோடு பார்த்திருந்தார். மகனது வாழ்வு சரியானதில் அவருக்கு அத்தனை நிம்மதி.

ஒருவரை ஒருவர் விரட்டி கொண்டு வந்தவர்கள் தங்களது அறைக்கு வந்து தான் ஓட்டத்தை நிறுத்தினர். மூச்சு வாங்க நின்றிருந்தவளிடம்,

"நாம ரெண்டு பேரும் வெளியில் போகணும் கிளம்பி வா." என்றுரைத்துவிட்டு அவன் அறையை விட்டுச் சென்றான். அவனது கண்ணியம் கண்டு தனக்குள் புன்னகைத்து கொண்டவள் உடை மாற்ற துவங்கினாள்.

பதினைந்து நிமிடங்கள் கழித்து மீண்டும் உள்ளே வந்தவன் கண்ணாடி முன் நின்று கொண்டிருந்தவளின் அழகினை கண்டு கண்ணிமைக்க மறந்தான். அவனையும் அறியாது அவனது கால்கள் அவளை நோக்கி சென்றது. தன் பின்னால் வந்து நின்ற கணவனது கம்பீரமான அழகினை கண்ணாடி வழியே ரசித்தவள் பின்பு தனது உருவத்தை அவனோடு ஒப்பிட்டு பார்த்து முகம் சுருங்கினாள்.

"என்னாச்சு...?" அவன் புருவங்களை உயர்த்தினான்.

"நான் உங்களுக்குக் கொஞ்சமும் பொருத்தம் இல்லையோ? கருப்பா, குண்டா, அசிங்கமா இருக்கேன்ல."

"லூசு, யாருடி அப்படிச் சொன்னது?" என்றவன் அவள் அருகில் வந்து நின்றபடி அவளைக் கண்ணாடியில் பார்த்தவன் அவளது நெற்றியை நோக்கி விரலை கொண்டு போனான். அவன் நுனிவிரல் கூட அவளைத் தீண்டவில்லை. ஆனால் தீண்டியது போல் அவள் தான் உள்ளம் உருகி நின்றாள்.

"பிறை நெற்றி, துறுதுறுவென்று அலைபாயும் மானின் விழிகள், கத்தி போல் காதலாய் என்னை வெட்டி சாய்க்கும் கூரிய பார்வை, அழகான நாசி, ஆப்பிள் கன்னங்கள், செர்ரி பழ உதடுகள், சங்கு கழுத்து, அப்புறம்..."

அதற்குக் கீழே இறங்க போனவனின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியவளின் முகத்தில் நாண புன்னகை. அவள் அழகோ? அழகு இல்லையோ? அது அவளுக்குத் தெரியாது. ஆனால் அவன் அவளை ரசித்து வர்ணித்ததில் தான்

அழகாய் மாறிவிட்டது போல் அவளுள் ஒரு பிரம்மை. அது அவளது முகத்தில் வெட்கமாய்ப் படர்ந்தது.

"நான் உன்னைத் தொட கூட இல்லைடி. எதுக்கு என் கையைப் பிடிச்சு தடுக்கிற? இன்னும் சொல்ல வேண்டியது நிறைய இருக்கு." அவனது குரலில் விசமம் வழிந்தது.

"ப்ச், போ விஷூ..." அவன் புறம் திரும்பி அவனது நெஞ்சில் நாணத்துடன் முகம் புதைத்து கொண்டாள் அவள்.

இருவரும் கிளம்பி கீழே வந்தனர். விசாலம் அவர்களைப் பார்த்து, "சாப்பிடுங்க..." என்றுவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

உணவு மேசையில் விஸ்வஜித் அமர... துளசி அவனுக்குப் பரிமாறினாள். அவளது கைப்பிடித்துத் தன்னருகில் அமர வைத்தவன் அவளுக்கு உணவு பரிமாறி,

"நீயும் சாப்பிடு." என்றான்... அவள் உண்ண போகும் போது,

"துளசி..." என்று அவளை அழைத்தவன்,

"ஆ காட்டு..." என்க...

அவள் புரியாது அவன் சொன்னதைக் கேட்டு வாய் திறந்தாள். விஸ்வஜித் அங்கிருந்த குலோப்ஜாமூனை எடுத்து அவளது வாயில் வைத்து அடைத்தான். அவனது செய்கையில் திகைப்பில் விழி விரித்தபடி வாயில் இருந்த குலோப்ஜாமூனை அவள் உண்ண துவங்கினாள். அனுமார் போன்று கன்னத்தை உப்பலாக வைத்துக் கொண்டு அவள் உண்டதை கண்டு அவன் கண்ணில் சிறு சிரிப்புடன் பார்த்திருந்தான்.

"விஷூ, ஏன் அப்படியே கொடுத்த?" இதழோரம் சீனிப்பாகு வழிய பேசியவளை பார்த்தவனின் பார்வை மெல்ல கணவன் பார்வையாக மாற ஆரம்பித்தது. அவன் அவள் முகம் நோக்கி குனிய...

"விஷூ..." அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

பழைய நினைவுகள் இருவரது மனதிலும் அலை மோதியது. முன்பு அவள் இது போல் குலோப்ஜாமூனை சீனிப்பாகு வழிய வழிய உண்ட போது இதே மாதிரி தான் அவன் தனது ஆவலை அடக்க முடியாது அவளது முகம் நோக்கி குனிந்துவிட்டான். பின்பு அவளது வயதினை கருத்தில் கொண்டு அவளது இதழோரம் வழிந்த பாகை தனது கை விரல்களில் வழித்து எடுத்து தனது வாயில் வைத்து ருசித்துக் கொண்டான். அதை நினைத்தபடி அவள் அவனைப் பார்த்தாள். அவளது மனதினை படித்தவனாய் அவன் குறும்பு சிரிப்புடன்,

"நீ நினைப்பது காதலன் விஷூ செய்வது. ஆனால் கணவன் விஷூ வேற மாதிரி..." என்றவன் அவளது இதழ் நோக்கி குனிந்தான். மீண்டும் அவன் நிமிர்ந்த போது அவனது உதடுகளில் சீனிப்பாகு ஒட்டியிருந்தது. அவனது செயலில் நாணத்துடன் முகம் கவிழ்ந்தவள்,

"நேத்து யாரோ கண்ணியம் காப்பேன்னு சொன்னாங்களே. அவங்களை உனக்குத் தெரியுமா விஷூ...?" அவள் தலையைத் தாழ்த்தி கொண்டு மெதுவே முணுமுணுத்தாள்.

"இதுவும் கண்ணியத்தில் அடங்கும்மா... இதைத் தாண்டினால் தான் கண்ணியம் மீறப்படுகிறது என்று அர்த்தம்." அவன் கண்சிமிட்டியபடி தனது அடாவடி செயலுக்கு விளக்கம் கொடுத்தான்.

"போ விஷூ..." அவள் சிணுங்க...

"நீயும் கூட வா... சேர்ந்து போகலாம்." என்றவன் சிரித்தபடி உண்ண துவங்கினான்.

உணவு முடித்துக் கொண்டு கிளம்பியவர்கள் நேரே சென்ற இடம் கோவிலுக்கு. திருமணத்திற்குப் பிறகு அவளை முதன்முறையாக வெளியில் அழைத்துச் செல்வதால் அவன் அவளைக் கோவிலுக்கு அழைத்து வந்திருந்தான். ஏனெனில் அடுத்து அவர்கள் செல்ல போகும் இடம் அப்படி. சாமி கும்பிட்டு முடித்து மீண்டும் காரில் பயணிக்கும் போது அவன் அவளையே திரும்பி திரும்பி பார்த்தபடி வந்தான்.

அவள் கேட்டதற்கு ஒன்றும் இல்லை என்று கூறி மறுத்து விட்டான். சிறிது நேரத்தில் காரை நிப்பாட்டியவன் அவளைக் கீழே இறங்க சொன்னான். அவன் சொன்னதும் மறுபேச்சு பேசாது இறங்கியவள் அந்த இடத்தைக் கண்டதும் திகைத்து போனாள்.

ஏனெனில் அது ஒரு காவல்நிலையம்!

"விஷூ, இங்கே எதுக்கு நாம வந்திருக்கோம்?" அவள் யோசனையுடன் அவனைப் பார்த்தாள்.

"வா, சொல்றேன்..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

அவனைக் கண்டதும் அங்கிருந்த காவலர் பணிவுடன் வணக்கம் வைத்து உள்ளே அழைத்துச் சென்றார். அங்கு அவள் கண்ட காட்சியில் அதிர்ந்து போய் அப்படியே நின்றுவிட்டாள். ஏனெனில் அங்குச் சிறையினுள் இருந்தது வேதா. உடனே சுதாரித்துக் கொண்டு அங்கே விரைந்தவள் கணவனைத் திரும்பி பார்த்து,

"விஷூ, அம்மாவை எதுக்கு அரெஸ்ட் பண்ணியிருக்காங்க?" அவளது தேகம் நடுங்கியது.

"தப்பு செஞ்சவங்க உள்ளே தான் இருக்கணும் துளசி."

"அப்படி என்ன தப்பு செஞ்சாங்க? அம்மா தப்புச் செஞ்சிருக்க வாய்ப்பில்லை." அவள் உறுதியாக மறுத்தாள்.

"உங்க மகள் கேட்கிறாள் இல்லையா? பதில் சொல்லுங்க." விஸ்வஜித் வேதாவை உறுத்து விழித்தான்.

"யாருக்கு யாருடா மகள்? இவள் அந்தாளோட மகள். எனக்கு அபி மட்டும் தான் ஒரே மகள். இவள் இல்லை." என்று கத்திய வேதாவை கண்டு துளசி திகைத்து போனாள். வேதாவிற்குத் தன்னைப் பிடிக்காது என்று அவள் உணர்ந்தே இருந்தாள். ஆனால் இந்தளவு வெறுக்கும் அளவிற்கு அவருக்குத் தன்னைப் பிடிக்காது என்பதை இப்போது தான் தெரிந்து கொண்டாள்.

"இன்னும் நீங்க செஞ்ச தப்பை சொல்லவே இல்லை." விஸ்வஜித் மீண்டும் கேட்டான்.

"நான் செஞ்சது தப்பு இல்லை. சரி... என்னைப் பொறுத்தவரையில் ரொம்பவும் சரி. இதோ நிற்கிறாளே இவள், இவள் தாயாக முடியாததற்குக் காரணம் நான் தான். நான் தான் ஆள் வைத்து விபத்தை உண்டாக்கினது. விபத்தில் மயங்கி கிடந்தவள் வயிற்றில் இரும்பு குழாய் வைத்து அடித்து அவளது கர்ப்பப்பையைச் சேதப்படுத்தி நாசப்படுத்தியதும் நான் தான்." வேதா வெறிப்பிடித்தார் போன்று கத்தினார்.

வேதாவின் கோர முகம் தெரிந்த துளசி உயரழுத்த மின்சாரம் பாய்ந்தது போல் அதிர்ந்து நின்றாள்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 17

துளசி தன்னையும் அறியாது தனது வயிற்றைப் பிடித்துக் கொண்டாள். அவளால் தனது காதுகளை நம்ப முடியவில்லை. அவளது தந்தை வரதராஜனுக்கு வேதா இரண்டாவது மனைவி. துளசிக்கு அவளது அன்னை முகம் கூடச் சரியாக நினைவில்லை. அவள் வேதாவை தான் தனது அன்னையாக நினைத்தாள். ஆனால் வயது ஏற ஏற வேதாவின் ஒதுக்கம் புரிந்து அவளும் ஒதுங்கி கொண்டாள். அதற்காக வேதாவை வெறுக்கவும் இல்லை... ஒட்டி கொள்ளவும் இல்லை. அவளது தந்தை காட்டிய அன்பு, தங்கை அபிநயா காட்டிய பாசம் இதில் அவள் வேதாவின் ஒதுக்கத்தைப் புறம்தள்ள பழகி கொண்டாள். ஆனால் அவரது மனதில் தன் மீது இத்தனை துவேசம் இருக்கும் என்று அவள் கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை. அதுவும் அவளது தாய்மையைக் குலைக்கும் வகையில் அவர் செயல்பட்டதை நினைத்து அவள் மனம் கனக்க, விழிகள் கலங்கி சிவக்க வேதாவை பார்த்தாள்.

"நான் அப்படி என்ன பாவம் பண்ணினேன்?" அவளது குரல் நடுங்கியது.

"நீ பாவம் பண்ணலை. ஆனா உன் அப்பன் பாவம் பண்ணியவன். அதுவும் எனக்கு... அவன் கொஞ்சமும் இரக்கம் இல்லாத பாவி. என் வாழ்க்கையை அழித்த ராட்சசன்"

வேதாவின் வார்த்தைகளைத் துளசியால் நம்ப முடியவில்லை. அவள் அறிந்த வரை இருவரும் நல்ல மாதிரியாகத் தான் குடும்பம் நடத்தி வந்தனர். சிறு சண்டையோ, முகச்சுளிப்போ இருவரிடமும் வந்தது கிடையாது. அப்படி இருக்கும் போது வேதாவின் இந்த வெறுப்பிற்கு என்ன காரணம்? அதை வேதாவே கூறினார்.

"உன் அப்பன் என்னை எப்படிக் கல்யாணம் பண்ணினான் தெரியுமா? சந்தையில் அடிமாடு வாங்குவது போல். ஆமாம், என் அப்பாவுக்குக் கொடுத்த கடனுக்கு ஈடாக உயிருள்ள

என்னை விலையாகக் கேட்டான். நல்லவேளை ஆசைநாயகியா கேட்கலை." என்றவர் தனது விழிகளில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டார்.

விஸ்வஜித் அவரது கண்ணீரை ஆச்சரியமாகப் பார்த்தான். கல்லுக்குள் ஈரம் போலும்! அவனுக்கு அப்படித் தான் தோன்றியது.

"அப்போ எனக்குப் பதினாறு வயசு. என் மாமா பையனை உயிருக்கு உயிரா காதலிச்சேன். அந்தச் சமயம் தான் எங்கப்பாவால் வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாம போச்சு. ஏதேச்சையா எங்கப்பாவுக்குச் சாப்பாடு கொடுக்கப் போன என்னைப் பார்த்து உன் அப்பன் ஆசைப்பட்டு என் அப்பா கிட்ட என்னைக் கல்யாணம் பண்ண கேட்டு இருக்கான். அவரும் கடன் சுமை குறையும்ன்னு என்னைப் பிடிச்சு உன் அப்பன் கையில் கொடுத்துட்டார். அப்போ உங்கப்பா வயசு என்ன தெரியுமா? முப்பது... எனக்குப் பதினாறு. கிட்டத்தட்ட பதினாலு வயசு வித்தியாசம். அந்த முப்பது வயசிலேயே உங்கப்பா தலையில் சொட்டை விழுந்து பார்க்கிறதுக்கு நாற்பது வயசுக்காரன் மாதிரி இருப்பான். நான் எவ்வளவோ எங்கப்பா கிட்ட கெஞ்சினேன், அழுதேன். ஆனா அவர் நான் சொல்றதை காது கொடுத்து கேட்கலை. வேறுவழி தெரியாம உங்கப்பாவை நேரில் சந்திச்சு என் காதலை சொன்னேன். அதுக்கு உங்கப்பன் என்ன சொன்னான் தெரியுமா...?" என்றவர் சில நொடிகள் பழைய ஞாபகத்தில் வேதனையுடன் மூழ்கி மீண்டும் நிகழ்காலத்திற்கு வந்து பின்பு துளசியைப் பார்த்து,

"நீ ரொம்ப அழகா இருக்க... உன்னை விட்டு கொடுக்க என்னால் முடியாது. நீ என் மனைவியா வந்தே தீரணும். அப்படி நீ கல்யாணம் பண்ணிக்கலைன்னா உன் குடும்பமே ஜெயிலுக்குப் போக வேண்டி வரும்ன்னு சொன்னான். அதுக்குப் பிறகு நான் மனசை கல்லாக்கி கிட்டு கல்யாணத்துக்குத் தயாரானேன். எனக்குக் கல்யாணம்ன்னு தெரிஞ்சதும் என் மாமா பையன் என்னை மறக்க முடியாம தூக்கு மாட்டி தற்கொலை

பண்ணிக்கிட்டான். அவனோட பிணத்தின் மீது என் கல்யாணம் நடந்தது. அப்படிப்பட்ட கல்யாணத்தின் மீது வெறுப்பு வராம எப்படி விருப்பு வரும்? ஒவ்வொரு முறை உன் அப்பன் தொடும் போதும் நெருப்பில் குளிக்கிற மாதிரி எரியும். அப்போ எரிய ஆரம்பிச்ச தீ இப்பவரை தணியலை. தணியாது, தணியவே தணியாது." என்று ஆக்ரோசமாய்க் கத்தியவரை கண்டு துளசிக்கு ஏனோ கோபம் வரவில்லை. மாறாக அவள் அவரை இரக்கமாகப் பார்த்திருந்தாள்.

பெண்ணாய்ப் பிறந்தது தவிர வேதா என்ன பாவம் செய்தார்? அந்தக் கணம் தனது தந்தையின் மீது அவளுக்கு அப்படியொரு வெறுப்பு ஏற்பட்டது.

"அந்தத் தீ தான் உன் வாழ்க்கையைக் காவு வாங்க துணிந்தது. ஆம், உன்னை அடித்தால் மட்டுமே உன் அப்பனுக்கு வலிக்கும். அதற்காகத் தான் தக்க தருணம் பார்த்துக் காத்திருந்தேன். எப்படியும் உனக்கு மாப்பிள்ளை பார்ப்பான். எதையாவது காரணம் சொல்லி உனக்கு வரும் வரனை எல்லாம் தட்டிவிட வேண்டும் என்பது தான் எனது எண்ணம். காலம் முழுவதும் நீ கன்னியா இருப்பதைப் பார்த்து பார்த்து உன் அப்பன் இரத்த கண்ணீர் வடிக்கணும்ன்னு நினைச்சேன். ஆனா அதுக்குள்ள நீ இவனைக் காதலிச்சிட்ட... அதான் வேறுவழியைத் தேர்ந்தெடுத்தேன். உனக்கு விபத்து உண்டாக்க செய்தேன். மயங்கி கிடந்த உனது வயிற்றில் வெறிக் கொண்ட மட்டும் இரும்பு குழாய் வைத்து ஓங்கி அடித்தேன். என்னைத் தினம் தினம் கற்பழிச்சவனோட மகளுக்குக் கர்ப்பப்பையே இருக்கக் கூடாதுன்னு முடிவு பண்ணினேன். காலம் முழுவதும் நீ நித்ய கன்னியா இருக்கணும். அதைப் பார்த்து உன் அப்பன் துடிக்கணும்ன்னு நினைச்சேன். அதே மாதிரி உனக்குக் கர்ப்பப்பை எடுத்துட்டாங்கங்கிற விசயம் கேள்விப்பட்டு அதையே நினைச்சு நினைச்சு உங்கப்பன் உயிரை விட்டான். எப்படியோ நான் நினைச்சதை சாதிச்சுக் காட்டிட்டேன். நீ இவனைக் கல்யாணம் பண்ணினாலும் உன்னால் குழந்தை பெத்துக்க முடியாது. போதும், எனக்கு

இது போதும். இந்தச் சந்தோசத்தோடு நான் செத்தாலும் எனக்குப் பரவாயில்லை."

அவரது குரலில் அத்தனை வெறி இருந்தது. ஒரு பெண்ணின் மனதில் இத்தனை துர் எண்ணங்களா? விஸ்வஜித்திற்கு அதிர்ச்சியாக இருந்தது. துளசி மட்டுமே அவரைப் பாவமாய்ப் பார்த்திருந்தாள். ஏனோ அவளுக்குக் கோபம் வர மறுத்தது.

"உங்களுக்குத் துளசி மீது தானே கோபம்... என் மீது என்ன கோபம்? என்னை விபத்தில் கொல்ல துணிந்தது ஏன்?" விஸ்வஜித் அடக்கப்பட்ட கோபத்துடன் வேதாவை பார்த்து கேட்டான்.

அன்று அவனுக்கு நிகழ்ந்த விபத்து தற்செயலாக நடந்த ஒன்றல்ல. திட்டமிட்டு நடந்த ஒன்று. ஆனால் அதிர்ஷ்டவசமாக அவன் சுதாரித்துக் கொண்டு தனது காரை திருப்பி விட்டான். இல்லை என்றால் அன்றே அவனது உயிர் அவனை விட்டுப் போயிருக்கும். அந்த ஆபத்தான கணத்தில் கூட அவன் மறக்காது அந்த லாரியின் எண்ணை மனதில் பதிய வைத்துக் கொண்டான். அதைக் காவல் ஆணையரிடம் கொடுத்து யாரென்று விசாரிக்கச் சொன்னான். அவர்களும் அந்த லாரியை தேடி கண்டுபிடித்து அதன் ஓட்டுநரை பிடித்து விசாரித்ததில் எல்லா விசயமும் வெளிவந்து விட்டது. அடுத்த நொடி அவர்கள் வேதாவை ரகசியமாகக் கைது செய்து அழைத்து வந்தனர். ஏனெனில் இந்த விசயம் துளசிக்கு தெரிய கூடாது என்பதில் விஸ்வஜித் மிகவும் கவனமாக இருந்தான்.

விஸ்வஜித் கூறியதை கேட்டு துளசி அதிர்ந்து போய் வேதாவை பார்த்தாள். "விஷூ சொல்றது உண்மையா?" அவள் குரல் நடுங்க கேட்க...

"ஆமா, உண்மை தான். அவன் பண்ணிய வேலை அப்படி. என் பொண்ணு அபி ராணி மாதிரி வாழ வேண்டியவள். இவன் உன்னைக் கல்யாணம் பண்றதுக்கு என் மகளை

அந்த அன்றாடங்காய்ச்சி கௌதமோடு கோர்த்து விட்டு இருக்கான்."

"அபாண்டமா பேசாதீங்க... அபி கௌதமை காதலிக்கிறாள். அதுக்கு விஷ்ணு என்ன பண்ணுவான்?"

"இந்தச் சொத்துக்கள் உன் அம்மாவோடதா இருக்கலாம். ஆனா இதுக்கு அதிபதியா என் மகள் தான் இருக்கணும். ஏன்னா இது உன் அப்பன் பண்ணிய பாவத்துக்குச் சின்னப் பிராயச்சித்தம்ன்னு வச்சுக்கோ. அப்படிப்பட்ட கோடீஸ்வரியான என் பொண்ணை அந்த அநாதை பயலுக்குக் கொடுப்பதா? நெவர்... அதுக்கு ஆதரவு கொடுத்த இவன் மேல் எனக்குக் கொலைவெறி வந்தது. அப்போ உன்னைக் கொன்னு இவனைப் பழிவாங்க நினைச்சேன். கடைசியில் முடிவை மாத்திக்கிட்டேன். அவனைக் கொன்னு உன்னைக் காலம் முழுவதும் பழிவாங்கணும்ன்னு..." அவர் சொல்லி முடிக்கும் முன் துளசி அவரது கழுத்தை அழுத்தி பிடித்திருந்தாள்.

"நீ எனக்கு எந்தக் கெடுதல் செய்ய நினைச்சிருந்தாலும் நான் பொறுத்து போவேன். ஏன்னா நீ அனுபவிச்ச வலியை ஒரு பெண்ணாய் என்னால் உணர முடியுது. ஆனா என் விஷ்ணு மேல் கை வச்ச உன்னை நான் சும்மா விட மாட்டேன். என்னை என்ன சாதாரணப் பொண்ணுன்னு நினைச்சியா? தி கிரேட் துளசி. உன்னை அடையாளம் தெரியாம அழிக்கவும் எனக்குத் தெரியும்." துளசி ஆவேசமாகப் பேச... அவளது காளி அவதாரம் கண்டு வேதா விக்கித்துப் போய் நின்றார்.

"விடு துளசி... இவங்களைத் தொடுறதே பாவம். இவங்க மேல் கை வைத்து நாம நம்ம வாழ்க்கையை இழக்கணுமா? சட்டம் இவங்களுக்கு வேண்டிய தண்டனையைக் கொடுக்கும். நீ வா, போகலாம்." விஸ்வஜித் அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்.

காரிலேறியதும் துளசியின் விழிகள் கலங்க ஆரம்பித்தது. அதைக் கண்ட விஸ்வஜித், "தி கிரேட் துளசி கண் கலங்கலாமா?" என்று கேலியாய் கேட்க...

"உன்னைப் பார்த்தால் மட்டும் என் தைரியம் எல்லாம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி போயிருது. உன்னைத் தாயாய் நினைத்து சேயாய் உன் மடியில் தஞ்சம் புகத்தான் மனசு சொல்லுது." என்றவளை கண்டு அவன் மனம் நெகிழ தனது இரு கைகளையும் விரித்து அவளை அருகில் அழைத்தான். அவள் விருப்பத்தோடு அவனது கரங்களில் தஞ்சம் புகுந்தாள். அவளுக்கு ஆறுதல் அளிப்பது போல் அவனது கரங்கள் அவளை இறுக அணைத்துக் கொண்டது.

*************************

சென்னையில் பிரதான இடத்தில் இருந்த அந்த மண்டபம் அந்நகரத்தின் முக்கியப் பிரமுகர்களால் நிரம்பி வழிந்தது. மணமேடையில் அமர்ந்திருந்த கௌதம் தனது பக்கத்தில் இருந்த அபிநயாவை விழிகளால் விழுங்கி கொண்டிருந்தான். சும்மாவே அவன் அவளைக் கண்டு ஜொள்ளு விடுபவன். இப்போது கேட்கவா வேண்டும்? இன்னும் சற்று நேரத்தில் மனைவியாகப் போகிற தன்னவளை தைரியமாகச் சைட் அடித்துக் கொண்டிருந்தான். அபிநயாவும் அவனுக்குச் சளைக்காது பதில் பார்வை பார்த்து கொண்டிருந்தாள்.

வேதாவை பற்றித் தெரிந்த அபிநயா தனது அன்னையை முழுவதும் வெறுத்துவிட்டாள். பெண்ணான அன்னை தன் சகோதரிக்கு இழைத்தது பெரும் துரோகம், பாவம். அந்தப் பாவத்தைத் தொலைக்க எத்தனை ஜென்மம் எடுத்தாலும் போதாது. அவள் அன்னையைப் பார்க்க கூட விரும்பவில்லை. அந்தளவிற்கு அவர் மீது அவளுக்கு வெறுப்பு.

வேதா மீதான வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அவருக்கு எதிராகச் சாட்சியங்கள் பலமாக இருப்பதால் அவரால் தண்டனையில் இருந்து தப்ப முடியாது என்று வழக்கறிஞர் கூறி இருக்கிறார். அதனால் விஸ்வஜித், துளசி நிம்மதியாக உணர்ந்தனர். வேதா தனது மனைவிக்குச் செய்த துரோகத்திற்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தே தீருவேன் என்று விஸ்வஜித்தும், அவர் தனது

கணவனுக்கு விளைவித்த ஆபத்திற்காக அவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தே தீருவேன் என்று துளசியும் தங்கள் நிலையில் உறுதியாக இருந்தனர்.

திருமண மண்டபத்தில் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்த துளசியைக் கைப்பிடித்துத் தடுத்து நிறுத்திய விஸ்வஜித்,

"பேசாம ஒரு இடத்தில் உட்கார வேண்டியது தானே. இப்படி வியர்க்க, விறுவிறுக்க வேலை பார்க்க வேண்டுமா?" அவளைச் செல்லமாய்க் கடிந்தான். கணவனது அக்கறை அவளது அடிநெஞ்சு வரை சென்று தித்தித்தது.

"நம்ம வீட்டு கல்யாணத்துக்கு நாம தான் வேலை செய்யணும் விஷூ."

"இதை ஒண்ணு சொல்லிரு." என்றவன் பழச்சாறை வரவழைத்து அவளைப் பருக வைத்த பின்பே அவளை விட்டான். அவள் மயங்கி விழுந்ததில் இருந்து அவனுக்கு அவளது உடல்நலத்தின் மீது எப்போதுமே கவனம் இருக்கும்.

பெற்றோருக்கு பாத பூஜை செய்யும் வைபவத்தில் கௌதம், அபிநயா இருவரும் விஸ்வஜித், துளசிக்கு பூஜை செய்ய வேண்டும் என்று ஏகோபித்த மனதாய் முடிவு எடுத்தனர். விஸ்வஜித், துளசி இருவரும் கண் கலங்க அவர்களது பாத பூஜையை ஏற்றுக் கொண்டனர். பெற்றோர் இல்லாத கௌதம், அபிநயாவுக்கு விஸ்வஜித், துளசி பெற்றோராய் மாறி போயினர்.

கௌதம் அபிநயா கழுத்தில் மங்கலநாண் பூட்டி தனது மனைவியாக்கி கொண்டான். இருவரது முகத்திலும் சந்தோசம் தாண்டவமாடியது.

இரவு கௌதமையும், அபிநயாவையும் அறைக்குள் அனுப்பிவிட்டு துளசி தங்களது அறைக்குள் நுழைந்தாள். விஸ்வஜித் தனக்குள் முணுமுணுத்தபடி அமர்ந்திருந்தான்.

"என்ன முணுமுணுப்பு?" இடுப்பில் கை வைத்து கேட்டபடி அவள் அவன் முன் வந்து நின்றாள்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 18

இப்போது துளசி தனது கூட்டில் இருந்து வெளிவந்து பழைய துளசியாய் மாறி விஸ்வஜித்திடம் பழக ஆரம்பித்து இருந்தாள். அதற்கு விஸ்வஜித்தின் பொறுமையான காதலே காரணம். அவளுக்குத் தனது காதலை உணர்த்தினாலும் பதிலுக்கு அவளிடம் அவன் எதையும் எதிர்பார்க்க மாட்டான். அதுவே துளசியை அவன் பக்கம் மெதுவே சாய வைத்தது. அவளுள் இருக்கும் குறும்பு துளசி மெல்ல மெல்ல எட்டிப்பார்க்க ஆரம்பித்தாள்.

விஸ்வஜித் மனைவியைப் பார்த்து, "ஒண்ணும் இல்லையே." என்றபடி படுக்க ஆயத்தமாக...

"கேட்கிறேன்ல... சொல்லு விஷூ." அவள் விடாப்பிடியாய் கேட்க...

"இன்னைக்குக் கல்யாணமானவன் எல்லாம் ஃபர்ஸ்ட் கொண்டாடுறான். நான் அவனுக்குச் சீனியர். ஆனா என் நிலைமை... ம்ஹூம்..." என்று பெருமூச்சு விட்டவனைக் கண்டு,

"நானா வேண்டாம்ங்கிறேன். நீயா தான் எடுத்துக்கணும்." அவள் குறும்பாய் கண்சிமிட்டி சிரித்தாள்.

"துளசி..." அவன் விழிகள் மின்ன அவளது கைப்பற்றி இழுத்தான்.

பூமாலையாய் தன் மீது விழுந்தவளை இறுக அணைத்து கொண்டவன் அதன் பிறகு விடவே இல்லை. மொட்டு மலர்வது போல் இனிமையாய் தாம்பத்தியம் மலர்ந்தது.

நாட்கள் அது பாட்டிற்குச் சென்றது. கௌதம், அபிநயா மீண்டும் இலண்டனுக்குச் சென்றுவிட்டனர். அபிநயாவுக்குச் சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்கத் துளசி முன் வந்த போது அவள் தடுத்துவிட்டாள்.

"இதெல்லாம் பெரியம்மா சொத்துக்கள். நியாயத்துக்கு உனக்குத் தான் வரணும். எனக்கு உன்னுடைய அன்பு

மட்டும் போதும்." என்று கூறி அபிநயா மறுத்து விட்டாள்.

அதனால் அபிநயாவின் சொத்துக்களை அவளுக்குப் பிறக்க போகும் குழந்தைக்குப் போய்ச் சேருமாறு துளசி எழுதி வைத்து விட்டாள். அக்காவின் அன்பில் அபிநயா நெகிழ்ந்து போனாள். அவர்கள் இலண்டன் சென்று ஒரு மாதமாகப் போகிறது.

அன்று அலுவலகத்தில் இருந்து வந்த விஸ்வஜித் உற்சாகமாய் வந்தான். அவனது உற்சாகம் புரியாது விழித்த துளசியிடம் அவன் தனது கையில் இருந்த பத்திரிக்கையை நீட்டினான். புரியாது அதை வாங்கியவளிடம்,

"இந்த ஆர்ட்டிக்கிளை படிச்சு பாரு." என்க... துளசிக்கு அதன் தலைப்பை பார்த்ததுமே விசயம் என்னவென்று புரிந்து போனது.

"விஷூ, இது சாத்தியமா?"

"சாத்தியம் என்பதால் தானே அவங்க பத்திரிக்கையில் எழுதி இருக்காங்க."

பத்திரிக்கையில் கர்ப்பப்பை தானம் பற்றிய கட்டுரை இடம் பெற்றிருந்தது. கர்ப்பப்பை தொற்று நோய் ஏற்பட்டு அதை இழந்தவர்கள், கர்ப்பப்பை இல்லாது பிறந்தவர்கள், கர்ப்பப்பையில் பிரச்சனை உள்ளவர்கள் என எல்லோருக்கும் இந்தக் கர்ப்பப்பை தானம் மிகப் பெரிய வரப்பிரசாதம் ஆகும். அதைப் பற்றித் தான் அவர்கள் எழுதி இருந்தது. பொதுவாகக் கர்ப்பப்பை தானம் உயிரோடு இருப்பவர்களிடம், அதுவும் இரத்த சம்பந்தப்பட்ட உறவுகளிடம் இருந்து பெறப்பட்டுப் பொருத்தப்படும். ஆனால் இந்தக் கட்டுரையில் பிரேசிலில் உள்ள ஒரு பெண்மணிக்கு இறந்தவரிடம் இருந்த பெறப்பட்ட கர்ப்பப்பை மூலம் குழந்தை பிறந்திருப்பது பற்றி வியப்பாகக் கூறப்பட்டு இருந்தது.

"நாம் ஏன் இதை முயற்சிக்கக் கூடாது துளசி?"

"நிச்சயம் முயற்சிக்கலாம் விஷூ." என்றவளின் வார்த்தைகள் அத்தனை நம்பிக்கையுடன் ஒலித்தது. காதல் கணவனுக்கு வாரிசு பெற்று கொடுக்க வேண்டும் என்கிற தவிப்பு அவளுள் தோன்ற ஆரம்பித்தது.

துளசிக்கு இரத்த சம்பந்த உறவுகள் யாரும் இல்லை. அவளுக்கு இருக்கும் ஒரே சொந்தம் அபிநயா மட்டுமே. அவளும் வாழ வேண்டிய பெண் என்பதால் இறந்த பெண்ணிடம் இருந்து கர்ப்பப்பையைத் தானமாகப் பெற முயற்சித்தனர். இந்தியாவில் இந்த முறை இன்னும் முயற்சிக்கப்பட வில்லை. அதனால் நம் மருத்துவர்கள் துளசியின் மீது தனிக் கவனம் செலுத்தினர். அவர்கள் வேண்டியது போல் இறந்து போன பெண் ஒருவரின் கர்ப்பப்பை கிடைத்தது. அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்தது. கர்ப்பப்பை அவளுக்குப் பொருந்தி போனது விந்தையிலும் விந்தை.

விஸ்வஜித், துளசி மிகவும் சந்தோசமாக இருந்தனர். அதன் பிறகு துளசியைக் கண்ணின் அதைப் போல் பத்திரமாகப் பார்த்துக் கொண்டான் விஸ்வஜித். அடுத்த வந்த ஐந்து மாதங்களில் புதிய உறுப்பை அவளது உடல் நிராகரிக்கவில்லை. அவளுக்கு மாதவிடாய் சுழற்சியும் சரியாக ஏற்பட்டது. இதை அடுத்து, ஏற்கெனவே சேமித்து வைத்திருந்த கருமுட்டை அவளது கர்ப்பப்பைக்குள் செலுத்தப்பட்டது. அதற்கு அடுத்த இரண்டாவது மாதம் துளசி கருத்தரித்தாள்.

பாலைவன நிலமாய் இருந்தவள் பிள்ளை செல்வத்தால் பாலைவன சோலையாய் மாறி போனாள். தாய்மை என்பது மகத்தான வரமல்லவா! துளசியின் வாழ்க்கையே வண்ணமயமாகி போனது. விஸ்வஜித் எல்லையில்லா உவகை அடைந்தான். காதல் மனைவி வயிற்றில் அவனது மகவு! அவனது மகிழ்ச்சியை விவரிக்க வார்த்தைகள் இல்லை.

"தேங்க்ஸ் விஷூ... தேங்க்ஸ்." கண்கள் பனிக்கத் தனக்கு நன்றி கூறியவளை விஸ்வஜித் விழிகள் கலங்க

அணைத்துக் கொண்டான்.

"உனக்கு நீயே நன்றி சொல்வாயா? நீயும் நானும் ஒன்று." எப்போதும் போல் அவள் அவனது காதலில் சுகமாய் நனைந்தாள்.

தொடரும்...!!!

நாட்கள் நடந்து செல்லவில்லை. பறந்து சென்றது. துளசிக்கு ஒன்பதாவது மாதம் நடைப்பெற்ற போது வளைகாப்பை ஜாம் ஜாமென்று நடத்தி முடித்தான் விஸ்வஜித். இதற்காகக் கௌதம், அபிநயா இலண்டனில் இருந்து வந்து போயினர். இதோ துளசிக்கு பிரசவ நாள் நெருங்கி கொண்டிருந்தது. விஸ்வஜித் அடை கோழி போல் அவளின் பின்னேயே பாதுகாப்பாய் சுற்றி வந்தான்.

"அடேய் விச்சு, குட்டி போன பூனை மாதிரி சுத்திக்கிட்டு இருக்கியே. கொஞ்ச நேரம் அவளை ப்ரீயா விடுடா." விசாலம் கூட அவனை அதட்டி பார்த்துவிட்டார். ம்ஹூம், எங்கே அவன் கேட்டால் தானே...

மகனது மனைவி மீதான காதல் கண்டு அவரது மனம் பூரித்துப் போனது. இதே மகன் சில மாதங்களுக்கு முன் துளசிக்குக் கர்ப்பப்பை மாற்று அறுவை சிகிச்சை செய்ய அனுமதி வேண்டி அவரிடம் வந்து நின்ற போது அவர் விசயம் கேள்விப்பட்டு அதிர்ந்து போனார். அவருக்கு அதிர்ச்சியில் பேச்சு வரவில்லை.

"எப்படிடா இவ்வளவு பெரிய விசயத்தை என்னிடம் இருந்து உன்னால் மறைக்க முடிந்தது?" அந்த விசயம் அவருக்குப் பெருத்த மனத்தாங்கலை கொடுத்தது.

"இப்போ கூட இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கிடைத்ததால் தான் நான் உங்க கிட்ட சொன்னது. இல்லை என்றால் இந்த விசயத்தை உங்க கிட்ட சொல்லியிருக்கவே மாட்டேன்."

"அந்தளவுக்கு நான் அந்நியமாகி போனேனா?" அவர் விசனத்துடன் மகனை பார்த்தார். அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு அவர் அருகில் அமர்ந்தவன்,

"அப்படி இல்லைம்மா... உங்களுக்கான ஸ்பேஸ் எப்போதும் என்னிடத்தில் அப்படியே இருக்கும். அதை நிரப்ப துளசியால் கூட முடியாது. அதே மாதிரி அவளுக்கான ஸ்பேஸும் தனி. அதை அவளால் மட்டும் தான் நிரப்ப முடியும். தாயையும், தாரத்தையும் பிரித்துப் பார்த்து நான் குழப்பிக் கொள்ள விரும்பவில்லை. உங்களுக்கு உங்க மகனாய் நான் செய்ய வேண்டிய கடமை இருப்பது போல், அவளுக்குக் கணவனாய் நான் செய்ய வேண்டிய கடமைகள் நிறைய இருக்கும்மா. குழந்தை இல்லை என்பது ஒரு குறை அவ்வளவே. குழந்தை தான் வாழ்க்கை இல்லை. எனக்கு அவள் குழந்தை. அவளுக்கு நான் குழந்தை என்று என்னால் இறுதி மூச்சு வரை வாழ முடியும். ஆனா துளசி குழந்தைக்காக தினம் தினம் மனதிற்குள் வருந்துவதைப் பார்க்க சகிக்கவில்லை. அதுக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்காதான்னு நான் கடவுள் கிட்ட வேண்டாத நாள் இல்லை."

பூஜையறை பக்கம் எட்டிப்பார்க்காத மகன் இப்போது இப்படிப் பேசுவது கண்டு விசாலத்திற்குப் பெரும் வியப்பாக இருந்தது.

"அப்போ தான் பத்திரிக்கையில் வந்த அந்தக் கட்டுரை என் கண்ணில் பட்டது. முயற்சித்துப் பார்க்கலாமே அம்மா." தனது கைகளைப் பிடித்துக் கொண்டு இறைஞ்சுதலாய் கேட்ட மகனிடம் மறுக்க அவரால் முடியுமா?

"உன் விருப்பம் போல் செய் விச்சு. நீயும், மருமகளும் சந்தோசமாய் இருந்தால் அதுவே எனக்குப் போதுமானது. என் பேர பிள்ளைகளை என் கைகளில் அள்ளி எடுத்து கொஞ்சுவதை விட வேறு எனக்கு என்ன வேணும். நீ தாராளமா முயற்சி செய் விச்சு. வெற்றி உன் பக்கம் தான்." என்று சொன்னதோடு அல்லாது விசாலம் மகன், மருமகளது முயற்சிக்கு கடைசிவரை உறுதுணையாக இருந்தார்.

இதோ இப்போது நிறை மாதமாய் மருமகள் வீட்டில் வளைய வருவதைக் கண்டவர் முகத்தில் பெருமை கூத்தாடியது.

குறிப்பிட்ட நன்நாளில் நல்ல நேரம் பார்த்து துளசிக்கு அறுவை சிகிச்சை செய்து குழந்தையை வெளியில் எடுத்தனர். விஸ்வஜித்தை போன்றே அவனது மகள் அத்தனை அழகாய் இருந்தாள். மகளைக் கண்ட துளசிக்குப் பெருமை தாங்கவில்லை. கணவனது காதலுக்குத் தான் நியாயம் செய்து விட்டதாய் அவளுக்குத் தோன்றியது.

"தேங்க்ஸ்டி பொண்டாட்டி." விஸ்வஜித் அவளுக்கு நன்றி தெரிவிக்க...

"யாரோ 'நீ வேறா, நான் வேறா' அப்படின்னு எல்லாம் டயலாக் விட்டாங்க. அது யாரு?" அவள் அவனைக் கேலி செய்து சிரித்தாள்.

"இது வேறு துளசி. தாய்மை என்பது பெண்களுக்கான வரம். அது எத்தனை தவம் இருந்தாலும் ஆணுக்கு கிட்டாது. அதுக்குத் தான் இந்த நன்றி."

"அதுக்குக் காரணம் நீங்க தானே." என்றவளை கண்டு அவன் விசமமாய்க் கண்சிமிட்டி சிரித்தான். அதன் அர்த்தம் புரிந்து அவனது தோளில் இரண்டு அடி போட்டவள்,

"நான் அதைச் சொல்லலை." என்று சிணுங்க...

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா?" என்றவன் அவளை அணைத்துக் கொண்டான்.

தந்தையும் தாயும் அணைத்திருப்பதை உணர்ந்த சின்னச் சிட்டு 'வீல்' என்று வீறிட்டு அழுதது. அதைக் கண்டவர்கள் சிரித்தபடி பிரிந்தனர். விஸ்வஜித் மகளைத் தூக்கி வந்து மனைவியின் கைகளில் கொடுக்க... அவள் மகளை வாங்கிப் பசியாற்ற துவங்கினாள். அதை நிறைவாய் பார்த்தபடி வெளியில் வந்த விஸ்வஜித்தின் மனமும் நிறைந்திருந்தது.

***********************

விஸ்வஜித், துளசியைப் பேட்டி எடுப்பதற்காகப் பிரபல தொலைக்காட்சியில் அழைத்திருந்தனர். துளசியின்

கைகளில் மூன்று மாதமேயான அவர்களது மகள் விஜிதா அழகாய் அமர்ந்திருந்தாள். அவள் தனது பொக்கை வாயை திறந்து புன்னகைத்து எல்லோரின் மனதையும் கொள்ளை கொண்டாள்.

தாய்மை பேறினை அடைய முடியாது துக்கத்தில் துவண்டு கொண்டிருந்த துளசியைப் பிடிவாதமாய் மணம் முடித்து, அவளுக்குத் தாய்மை வரத்தை அளித்ததோடு மட்டும் அல்லாது அவளை இந்தியாவின் தலை சிறந்த தாயாகவும் மாற்றி விட்டான் அவளது கணவன். ஆம், இந்தியாவில் முதல்முறையாக இறந்தவரிடம் இருந்து கர்ப்பப்பை தானம் பெற்று, அதன் மூலம் குழந்தை பெற்றுக் கொண்டது துளசி மட்டுமே. அத்தகைய பெருமையை அவளுக்கு ஈட்டி தந்துவிட்டான் அவளது கணவன். அதை நினைத்து துளசியின் விழிகள் கணவனைக் காதலாய் வருடியது.

பேட்டி எடுப்பவர் வந்து அவர்களைப் பேட்டி எடுக்க ஆரம்பித்தார். சின்னவளை விசாலம் தூக்கி சென்றார். அவர்களது காதல் முதல் கல்யாணம் வரை அலசி ஆராயப்பட்டது. அனைத்தையும் கேட்டவர்,

"ஒரு திருமணப் பந்தத்தில் இத்தனை காதல் இருக்குமா? என்று அதிசயமாக இருக்கிறது. காதல், காதல், காதல்... ப்பா, என்ன மாதிரியான காதல் உங்களுடையது." என்று அவர் எழுந்து வந்து விஸ்வஜித்தை கட்டி அணைத்துக் கொண்டார்.

"உங்களது வாழ்க்கையில் இனி என்றும், எப்போதும் காதல் மட்டுமே இருக்க வேண்டும். அதற்கு என்னுடைய வாழ்த்துக்கள்." என்று கூறி அவர் இருவரையும் வாழ்த்தினார்.

"சார், எனது கணவர் எனக்காக எத்தனையோ செய்திருக்கிறார். அவருக்காக நான் ஒண்ணு செய்ய ஆசைப்படுகிறேன்."

"தாராளமா செய்ங்க." அவளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

பார்வையாளராக அமர்ந்திருந்த விசாலத்திடம் வந்த துளசி அவரிடம் இருந்து சிவப்பு நிற ரோஜா பூங்கொத்தை வாங்கிச் சென்று விஸ்வஜித்தின் முன் வந்து நின்றாள். மனைவியின் செய்கையில் அவன் புரியாது எழுந்து நின்றான். அடுத்தக் கணம் துளசி அவன் முன் மண்டியிட்டு அமர்ந்து ரோஜா பூங்கொத்தை அவன் முன் நீட்டி,

"ஐ லவ் யூ விஷூ." என்க... விஸ்வஜித் இன்ப அதிர்ச்சியில் அப்படியே திகைத்து நின்றான்.

அவர்களது காதல் இதுவரை வார்த்தையில் சொல்லப்பட்டது இல்லை. அவர்களது காதல் செயலினால் உணர்த்தப்பட்டது மட்டுமே. அதனால் அவன் மனைவியின் காதல் வார்த்தையில் சந்தோசத்தில் திக்குமுக்காடி போனான்.

"அன்னைக்கு என் முன்னாடி நீ மண்டியிட்டு காதல் யாசகம் கேட்டப்போ என் மனசு எப்படி வலிச்சது தெரியுமா விஷூ? உன்னுடைய கண்ணீருக்கு, காதலுக்கு நான் என்ன செய்யப் போகிறேன்னு நான் தவிக்காத நாள் கிடையாது. உன்னை உதாசீனப்படுத்திட்டு வந்ததுக்கு என்னையே நான் வெறுத்தேன். அப்போ எல்லாம் செத்துரலாம் போலிருக்கும் விஷூ. அப்போ உன்னிடம் சொல்ல முடியாத காதலை இப்போ உன்னிடம் சொல்கிறேன் விஷூ. என் காதலை ஏற்றுக் கொள்."

அடுத்த நொடி விஸ்வஜித் அவள் புறம் குனிந்து அவளை எழுப்பித் தனது கரங்களில் தூக்கி கொண்டவன் அவளை அப்படியே சுற்றினான். அரங்கத்தில் இருந்தவர்களின் கரவோசம் காதை பிளந்தது. விசாலத்தின் மனம் நிறைந்து போனது.

"விச்சு, நீ ஜெயிச்சிட்ட." அவர் சந்தோசமாய் முணுமுணுத்தார்.

காத்திருந்த காதல் காலம் கடந்து கல்வெட்டாய் நிலைத்து நிற்கும் என்பதற்கு விஸ்வஜித், துளசியின் காதல் ஒரு

உதாரணம். இனி விஸ்வதுளசியின் வாழ்க்கையில் என்றும் மகிழ்ச்சியே...!!!

சுபம்...!!!